
# இது தான் இஸ்லாம்





அல்லாஹ் அவனது தூதர் இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு கட்டும் படி ஏவிய,மற்றும் முஸ்லிம்கள் அவர்கள் எங்கிருந்த போதிலும் அவர்களின் தொழுகைகளின் போது முன்னோக்கி நிற்க வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ள கஃபா ஆலயத்தின் ஆகாய வழிமார்க்கமான ஒரு புகைப்படம்.

THIS IS ISLAM

முதல் பதிப்பு
2023

முழுப்பதிப்புரிமை "நவீன் வழிகாட்டல்"
நிறுவனத்திற்கே உரியது

# இது தான் இஸ்லாம்

ஃபஹத் ஸாலிம் பா ஹம்மாம.



● உங்களை சூழவுள்ள தொடர்பூடகங்கள் வாயிலாக அதிகளவில் விமர்சிக்கப்படுகிற ஒரு மார்க்கத்தைப் பற்றிய தெளிவைப் பெறுவது மிக முக்கிய விடயம் இல்லையா!

● சர்வதேச புள்ளிவிபரங்களின் அடிப்படையில் உலகமெங்கும் வியாபித்து அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றதொரு மார்க்கத்தைப் பற்றி ஆழமாய் ஆய்வு செய்வதற்கு சற்று நேரம் ஒதுக்குவது பொருத்தமாக கருதப்படமாட்டாதா!

● எம்மை சுற்றியுள்ள பிரபஞ்சம்,மனித வாழ்வு மற்றும் சமயங்கள் பற்றிய பிறரின் கொள்கை கோட்பாடுகளை கலாச்சாரங்களை புரிந்து கொள்வதில் ஆர்வமில்லையா!

● இஸ்லாத்தைப் பற்றிய மிக நம்பகமான தகவல்களை அதன் மூலாதாரங்களிலிருந்து புரிந்து,பின்னர் அது குறித்து அறிவு பூர்வமாக தர்க்க ரீதியானதொரு முடிவை பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தை நீங்கள் ஏன் உங்களுக்குள் வழங்கக் கூடாது.

இஸ்லாம் அது தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வது முக்கிய என கருதுவதோடு அதில் ஆர்வமுள்ளவராகவும் நீங்கள் இருந்தால் இந்நூல் உங்களது அத்தேவையை நிறைவு செய்வதற்கு நிச்சயம் துணை நிற்கும்..

# அல் குர்ஆனின் தோற்றுவாய்?

**96**

முஸ்லிம்களின் இறை வேதமான அல்குர்ஆன் மற்றும் முஹம்மத்(ஸல்)அவர்கள் பற்றி கதைக்கின்ற போது இதுபற்றி முஸ்லிம்களால் கூறப்படும் செய்திகளை ஏன் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது? இது, தொடர்பாக ஏன் நாம் கேள்விகளை எழுப்பக்கூடாது? என்ற தர்க்கரீதியான வினாக்கள் எமது மனங்களில் இயல்பாகவே தோன்றி மறைகின்றன.



# உள்ளடக்கம்


**அனைவரினதும் உள்ளங்களை எந்நேரமும் தொட்டுசெல்லும் சில வினாக்கள்.** — 12

- இஸ்லாம்.
- “இஸ்லாம்” எனும் அறபுப் பதத்தின் பொருள்.
- அனைத்து இறைத்தூதர்களினதும் மார்க்கமே இஸ்லாம்.

**இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம்** — 18

- சூழல் பற்றி அக்கறை கொள்வதானது ஈமான் சார்ந்ததொரு விடயமாகும்.
- அறிவின் மார்க்கம்.
- மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கியதொரு மார்க்கம் இஸ்லாம்.
- இஸ்லாம் கூட்டுறவு மற்றும் ஒற்றுமையின் மார்க்கம்.

**படைப்பாளனும் வணக்கத்திற்குரியவனும், ஒருவனே.** — 36

- மனித சட்டமும் இறைச் சட்டமும்.
- புரோகிதம் இஸ்லாத்தில் கிடையாது.
- இஸ்லாத்தில் நுழைவதற்கென பிரத்தியேக சடங்கு சம்பிரதாயங்கள் ஏதும் உண்டா?.

**இறைத்தூதர்கள் என்போர் யார்?** — 46

- இறைத்தூதர்கள் மனிதப் பிறவிகளே!
- இறைத்தூதர்களின் அந்தஸ்து பற்றிய நடுநிலை நோக்கு.
- இறைத்தூதர்கள் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு.

**இஸ்லாத்தின் பார்வையில் ஈஸா (அலை) அவர்கள்.** — 52

**இஸ்லாத்தின் இறைத் தூதர் யார்?** — 58

- இஸ்லாத்தின் இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை குறித்த சுருக்கப் பார்வை

**மிதவாதிகளின் பார்வையில் இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.** — 64

## இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பண்பாட்டு விழுமியங்கள். —— 72

- பணிவு.
- அன்பு.
- நீதி.
- பொறுமையும் சகிப்புத் தன்மையும்.
- உதவுதலும் வள்ளல் தன்மையும்.
- உலக பற்றற்ற வாழ்வு.
- வாக்கு நிறைவேற்றுதல்.

## நபி (ஸல்)அவர்களின் பொன்மொழிகள். —— 84

## இஸ்லாத்தின் நிலையான அற்புதம், புனித அல்குர்ஆன் ஆகும். —— 90

- அல் குர்ஆன் பாதுகாக்கப்படும் அற்புதம்.
- அல்குர்ஆனின் உளவியல் அற்புதம்.

## அல் குர்ஆனின் தோற்றுவாய்? —— 96

- நித்தமும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள்.
- வெறும்,மேதாவித்தனமென்று ஏன் அதனை நாம் கருதக்கூடாது?
- ஒரு வேளை இது மறுபதிப்பு செய்யப்பட்ட புத்தகமாகவும் இருக்கலாமா!
- தெளிவான வரலாற்று உண்மை.
- சூறா பாத்திஹா.

## இஸ்லாத்தின் பார்வையில் வணக்க வழிபாடுகள். —— 106

- இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள்
- ஏன் இந்த பொறுப்புக்களும் சோதனைகளும்?.
- தொழுகை.
- ஸகாத்.
- நோன்பு.
- ஹஜ்.

## குடும்பம்,ஓர் இஸ்லாமிய நோக்கு. —— 122

- சமுகத்தின் அச்சாணியாக விளங்கும் குடும்பத்தை அமைப்பதற்கு திருமணம் எனும் விடயத்தை அடிப்படையானதோர் அம்சமாக இஸ்லாம் நோக்கியுள்ளது.
- குடும்ப அங்கத்தவர்கள் (ஆணாயினும் பெண்ணாயினும்) அனைவருக்கும் இஸ்லாம் முழுமையான கௌரவத்தை வழங்கியுள்ளது.
- பெற்றோர்களுக்கு உரிய கௌரவத்தினை பிள்ளைகள் வழங்கவேண்டுமென்று இஸ்லாம் தூண்டுகின்றது.
- பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும், செலவு செய்கின்ற போதும் ஏனைய வெளிப்படையான விடயங்களைக் கையாள்கின்ற சந்தர்பங்களிலும் அவர்களுக்கிடையில் நீதமாக நடந்துகொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் பெற்றார்களைப் பணிக்கின்றது.
- உறவுகளைப் பேணி நடப்பது, ஒரு முஸ்லிமின் கட்டாயக் கடமையாகும்.



# 122

## குடும்பம், ஓர் இஸ்லாமிய நோக்கு

குடும்பம் என்பது தனிநபர்களைக் கொண்டதொரு அலகாகும். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரே வீட்டிற்ஹீகான பல திறவுகோள்கள் உள்ளன என்று இன்றைய பல குடும்பங்களின் நிலை பற்றிக் கூறுவது முற்றிலும் உண்மையாகும்.



# 150

# அறிவும் மார்க்கமும்

மார்க்கமானது அறிவு மற்றும் ஆராய்ச்சி என்பவற்றிற்கு முரணானது என்று சிலர் நினைக்கின்றனர். ஏனெனில், அவர்களின் பார்வையில் மார்க்கமானது ஊகங்கள், புராணக்கதைகள், முட நம்பிக்கைகள் சார்ந்த சிந்தனைகள் என்பவற்றின் பிறப்பிடமாகும்.

இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்து. —— 128

- கணவனைத் தெரிவு செய்யும் உரிமையை பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளமை.
- மிகக் கரிசணையோடு பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என இஸ்லாம் வலியுறுத்தும் பெண்கள.
- ஆண்களும் பெண்களும் மோதிக்கொள்வதற்கு எந்தவொரு இடமுமில்லை.
- ஆண் -பெண் உறவு.
- இஸ்லாத்தின் பார்வையில், ஆண்-பெண் உறவும் அதன் இயல்பு நிலையும்.
- ஆண்களுக்கும் அந்நிய பெண்களுக்குமிடையிலான தொடர்புகளின் போது கவனத்திற்கொள்ள வேண்டிய வரையறைகள்.
- அந்நிய ஆண்களுக்கு முன்னால் பெண்கள் “ஹிஜாப்” அணிவதை இஸ்லாம் கடமையாக்கியது ஏன்?

உணவு தொடர்பான இஸ்லாத்தின் சட்ட ஒழுங்குகள். —— 138

- பன்றி.
- போதை வஸ்துக்கள்.
- போதை வஸ்துக்களை அல் குர்ஆன் எவ்வாறு கையாளுகின்றது, நோக்குகின்றது?

பாவமும் பாவமீட்சியும் —— 146

அறிவும் மார்க்கமும் —— 150

- அல்குர்ஆனின் ஒளியில்,சீரான சிந்தனைக்குத் தடையான அம்சங்கள்.


அமைதியின் மார்க்கம் இஸ்லாம் —— 156

- இன்று அசுர வேகத்தில் பரவிவரும் ஒரு மார்க்கம், இஸ்லாம்.
- இஸ்லாத்தில் இணைய மக்கள் வற்புறுத்த பட்டார்களா?.

இஸ்லாமும் அதனைப் பிழையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில முஸ்லிம்களும். —— 162

- வாழ்வின் புதியதொரு கோணம்.


அனைவரினதும் உள்ளங்களை எந்நேரமும் தொட்டு செல்லும் சில வினாக்கள்.



# நான்

நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? எங்கு செல்லப் போகின்றேன்?எனது நிலை என்னவாகப் போகின்றது? படைப்பினங்கள் அனைத்தும் உயிர் வாழ்கின்ற நோக்கம் என்ன? என்பன போன்ற வினாக்களை தனக்குள் கேட்டுக் கொள்ளாதவன் உண்மையில் மனிதனாக இருக்க முடியாது.உலகிலுள்ள அனைத்தினதும் முடிவு மரணித்து மாண்டு மண்ணோடு மண்ணாகி விடுவதுதான் என்றிருந்தால் இந்த உலகில் வாழ்வது ஏன்?.

இறை நம்பிக்கை மற்றும் நல்லவர்களும் தீயவர்களும் அவரவர்களுக்கு உரிய கூலிகளைப் பெற்றுக் கொள்ளும் மறு உலகம் குறித்து நம்பிக்கை அற்ற மனித வாழ்வு அர்த்தமற்றது, என்றே இஸ்லாமியர்கள் மற்றும் யஹூதி நஸா ராக்கள் நம்புகின்றனர்.

> நீதியான படைப்பாளனும் ஒவ்வொரு மனிதனும் அவன் செய்தவைகளுக்குரிய கூலிகளைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதி நாளொன்றினை ஏற்பாடு செய்தவனுமாகிய இறைவனை, நம்பிக்கை கொள்கின்ற போது தான் வாழ்க்கையின் முரண்பாடுகளையும் சரி, பிழைகளையும் துன்ப, துயரங்களுக்கான உண்மையான பின்னணிகளையும் புரிந்து கொள்ள முடியும்.

நீதியான படைப்பாளனும் ஒவ்வொரு மனிதனும் அவன் செய் தவைகளுக்குரிய கூலிகளைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளொன்றினை ஏற்பாடு செய்த வனுமாகிய இறைவனை நம்பிக்கை கொள்கின்ற போது தான் வாழ்க்கையின் முரண்பாடுகளையும்,சரி பிழைகளையும் துன்ப, துயரங்களுக்கான உண்மையான பின்னணிகளையும் புரிந்து கொள்ள முடியும்.

இது மட்டுமல்ல நீதி,நேர்மை, வாய்மை, அன்பு, பொறுமை என்கின்ற எமது பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் கொள்கை கோட்பாடுகள் மீது வைத்துள்ள ஆழமான நம்பிக்கையானது ஆன்மாவுடன் ஒன்றித்த மாறாத யதார்த்தமாக மாறிவிடுவதோடு இறைவனால் மனித குலத்தை நோக்கி விடுக்கப்பட்ட சவால் அர்த்தமுள்ளதாக அமைந்து விடும்.

மேலும்,மனிதனால் புரியப்பட்ட சாதனைகள் மற்றும் பொறுமைகள் என்பவற்றுக்கான கூலிகளை அவனால் பெறக் கூடியதாகவும் இருக்கும்.

முஸ்லிம்களது இறைவேதமான அல்குர்ஆன் இது குறித்துப் பேசுவதை நாம் காண்கின்றோம்.மேலும் அதில் அல்லாஹ் சிந்தனையாளர்கள் மற்றும் புத்திஜீவிகளைப் பற்றியும் எமக்கு பின்வருமாறு விளக்கு கின்றான் வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, “எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை; நீ மகா தூய்மையானவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!” (என்றும்;) (ஆலுஇம்றான்:191).

> “இஸ்லாம்” எனும் அறபுப் பதமானது சரணடைதல,கட்டுப்படல், இதய சுத்தியோடு நடத்தல்,சாந்தி,அமைதி போன்ற பல்வேறு அர்த்தங்களில் பிரயோகிக்கப்படுகின்றது.

## இஸ்லாமிய மார்க்கம்.

இப்புவியில் காணப்படும் பெருவாரியான சமயங்கள் சில தனிநபர்களோடு அல்லது சில சமூகங்களோடு அல்லது அச்சமயங்கள் தோன்றிய சில இடங்களோடு தொடர்புற்ற நிலையிலேயே அழைக்கப்படுகின்றன.

“மஸீஹிய்யஹ்” எனப்படும் கிறிஸ்தவ சமயம் “மஸீஹ்” என அழைக்கப்படும் ஈஸா (அலை) அவர்களின் பெயரிலிருந்தே பெறப்பட்டுள்ளது.

“யஹூதிய” சமயம் “யஹூதா” எனப்படும் வம்சத்தாரோடு இணைத்தே அழைக்கப் படுகின்றது. அவ்வாறே “பௌத்த” சமயமானது புத்த பெருமானின் பெயரோடும் “இந்து” சமயமானது அது தோன்றிய இடமான இந்தியாவோடும் இணைத்துக் கூறப்படுகின்றமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

ஆனால், இஸ்லாத்தைப் பொறுத்த வரையில் அவ்வாறானதொரு நிலை கிடையாது.ஏனெனில் அது எந்தவொரு தனி நபருக்கோ அல்லது எந்தவொரு சமூகத்தினருக்கோ சொந்தமானது அல்ல.எனவே தான் “இஸ்லாம்” எனும் பொதுவானதொரு பெயரில் மாத்திரமே அது அழைக்கப்படுகிறது.

## “இஸ்லாம்” எனும் அறபுப் பதத்தின் பொருள்.

“இஸ்லாம்” எனும் அறபுப் பதம் சரணடைதல், கட்டுப்படல், இதய சுத்தியோடு நடத்தல், சாந்தி, அமைதி போன்ற பல்வேறு அர்த்தங்களில் பிரயோகிக்கப்படுகிறது.

படைத்துப் பரிபாலிக்கும் ஏக இறைவனுக்கு முழுமையாக சரணடைந்து அவனை நெருங்குவதன் மூலம் உள அமைதியைப் பெறுவதுடன்,அனைத்து வகையான வணக்க வழிபாடுகளையும் பிறருக்கு நிறைவேற்றும் நிலையிலிருந்து விடுபடுவது தான் இஸ்லாமாகும்.

இக்கருத்தினையே அல்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

உள்ளம் மற்றும் உடலுறுப்புக்கள் அனைத்தும் ஒன்றித்த நிலையில் அல்லாஹ்வை முன்னோக்கி, அவனுக்கு கட்டுப்பட்டு ,அவனது ஏவல்கள் மற்றும் விலக்கல்களை கவனத்திற் கொண்டு வாழும் ஒருவர் நிச்சயம் நிலையான வெற்றியை பெற்றுக் கொள்வதோடு அனைத்து வித நலன்களையும் அடைந்து கொள்வார்.என்பதையும் மேலும் மக்கள் அனைவரும் மறுமையில் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்வர்.அவர்களின் செயல்களுக்கேற்ப அவன் அவர்களுக்கு கூலிகளை வழங்குவான்.என்பதையும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.(லுக்மான்:22)

எனவே, இஸ்லாம் என்பது பிறருக்கு அடிமைப்பட்டு நடக்கும் நிலையிலிருந்து விடுபட்டு அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிமைப்பட்டு வாழ்வதனையே குறிக்கும்.

வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வுக்கு மாத்திரம் நிறை வேற்றி தனது சூழலில் அமைதியை பரப்பி அமைதியுடனும் சாந்தியுடனும் வாழும் ஒருவனே முஸ்லிமென அழைக்கப் படுகின்றான்.

அனைத்து இறைத்தூதர்களும் இதனைத் தான் கொண்டு வந்தார்களா?

## அனைத்து இறைத்தூதர்களினதும் மார்க்கம் இஸ்லாமே.

வெவ்வேறு காலப்பகுதிகளில் வாழ்ந்த அனைத்து சமூகங்க ளுக்கும் அல்லாஹ்வின் மார்க்கத்தைப் போதிக்கின்ற இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டனர்.என்பதை அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது.

நபியவர்களை விழித்து அல்குர்ஆன் இவ்வாறு பேசுகின்றது. நிச்சயமாக நாம் உண்மையைக் கொண்டு நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிப்பவராகவுமே அனுப்பியுள்ளோம். அச்ச மூட்டி எச்சரிக்கை செய்பவர் வராத எச்சமூகத்தவரும் புவியில் இல்லை. (ஃபாதிர் : 24).

எனவே, அனைத்து இறைத்தூ தர்களும் இஸ்லாம் எனும் சத்திய மார்க்கத்தையே சுமந்து வந்தனர். மேலும் அவர்கள் ஈமான் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள், சட்டங்கள் போன்றவற்றின் அடிப்படைகளான இறைத் தூதின் அடிப்படை அம்சங்களில் வேறுபட்டிருக்கவில்லை.

ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இறுதி நபி முஹம்மத் (ஸல்)அவர்கள் கொண்டு வந்த இஸ்லாமானது அனைத்து இறைத் தூதர்களும் சுமந்து வந்த சமயத்தின் தொடர்ச்சியே ஆகும்.

எனவேதான் இப்றாஹீம், இஸ்ஹாக், யஃகூப், மூஸா, ஈஸா(அலை) போன்ற முன்னைய நபிமார்கள் நம்பிய அதே அம்சங்களை இந்த முஸ்லிம்களும் நம்ப வேண்டுமென அல்குர்ஆன் பணிக்கிறது.(அல்பகரா : 136)


“உங்களுக்காக சத்திய மார்க்கத்தை உங்களின் மார்க்கமாக அல்லாஹ் தெரிவு செய்துள்ளான். எனவே நீங்கள் உண்மையான முஸ்லிமாக அல்லாமல் வேறு நிலையில் மரணித்துவிட வேண்டாம்” என்று, மரண நேரத்தில் நபிமார்களின் தந்தை இப்றாஹீம் அவர்களும் யஃகூப் அவர்களும் தங்களது பிள்ளைகளுக்கு உபதேசித்ததைப் பற்றி அல்குர்ஆன் எமக்கு விபரித்துக் காட்டுவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களில் ஒன்றாகும். (அல்பகரா : 132).

எனவே, இஸ்லாமானது ஏனைய நபிமார்கள் கொண்டு வந்த சமயங்களின் தொடராகும்.ஆகவே முஹம்மத் (ஸல்) அவர்கள் வரையில் தோன்றிய அனைத்து இறைத்தூதர்களும் சுமந்து வந்த அனைத்து சமயங்களினதும் நம்பிக்கைசார் அடிப்படைக் கொள்கை கோட்பாடு ஒன்றுதான்.அவைகளின் சட்டதிட்டங்கள் மாத்திரம் அக்கால சூழலுக்கேற்றாற் போல் வேறுபட்டுக் காணப்பட்டன.

இறுதியாக நபி (ஸல்) அவர்கள் முழு மானிட சமூகத்திற்கும் ஏற்ற இறுதி இறைத்தூது கொடுக்கப்பட்ட இறைத்தூதராக அனுப்பப்பட்டார்கள்.

உண்மையான மார்க்கம் என்பது இஸ்லாம் ஒன்று மாத்திரமே.வானலாவிய சமயங்களை ஏற்றவர்களுக்கு மத்தியில் நம்பிக்கை சார் அடிப்படை கொள்கை கோட்பாட்டுத் துறைகளில் நாம் காணும் வேறுபாடுகள் மனிதக் கரங்களால் ஏற்படுத்தப்பட்டவைகளே அன்றி இறைத்தூதர்கள் கொண்டு வந்தவைகள் அல்ல.(ஆலு இம்ரான்: 19).என்பதை இங்கு அல்குர்ஆன் மிகத்துல்லியமாக ஏற்றுக் கொள்கின்றது.

இஸ்லாத்தைப் பொறுத்த வரையில் அவ்வாறானதொரு நிலை கிடையாது. ஏனெனில் அது எந்தவொரு தனி நபருக்கோ அல்லது எந்தவொரு இனத்தினருக்கோ சொந்தமானது அல்ல.எனவே தான் “இஸ்லாம்” எனும் பொதுவானதொரு பெயரில் மாத்திரம் அது அழைக்ககப்படுகிறது.




இஸ்லாம் ஓர் உலகளாவிய
மார்க்கம்.



அல் குர்ஆன், அறபுமொழியில் இறக்கியருளப்பட்டது. மேலும் முஹம்மத் (ஸல்) அவர்களும் அறேபியச் சமூகத்திலிருந்தே இறைத் தூதராக அனுப்பப்பட்டார்கள். எனினும் “அறேபியர்கள்”; எனும் பொருளைக் கொடுக்கும் “அல்-அறப்” எனும் அறபுப் பதம் அல்குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் படவில்லை எனும் செய்தி எம்மை வியப்பில் ஆழ்த்தும் ஓர் அம்சமாகும்.

இன்றைய முஸ்லிம்களுக்கிடையில்,அறேபியர்கள் சிறுபான் மையினராகவே கருதப்படுகின்றனர். உலக முஸ்லிம்களின் சனத் தொகையில் இவர்களின் எண்ணிக்கை 20 வீதத்தை விடவும் மிகக் குறைவானதே.

தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள இந்துனோசியாதான் உலகின் மிகப் பெரிய இஸ்லாமிய நாடாகும். இந்தியாவில் சிறுபான்னையாக வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கையானது அறபுலகிலுள்ள பன்மடங்கு மக்கள் தொகையினரின் எண்ணிக்கைக்கு அன்மித்து விடுகின்றது.

தேசத்தால், நிறத்தால், பண்பாட்டு விழுமியங்களால் பல்வேறுபட்ட வித்தியாச வேறுபாடுகளைக் கொண்ட அனைத்து மனித சமூகத்திற்கும் இந்த இஸ்லாமிய மார்க்கம் அருளாகவும் நேர்வழியாகவும் வந்துள்ளது.


இதனை அல்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாகவும்- ஓர் அருட்கொடையாகவேயன்றி அனுப்ப வில்லை.(அல் அன்பியா: 107)

உலகின் எந்தவொரு கொள்கைகளோ சிந்தாந்தங்களோ வழங்காத தனித்துவமானதொரு பார்வையை மனித இனப்பன்மைத்துவத்திற்கு இஸ்லாம் வழங்கியுள்ளது.

அல்குர்ஆன் அறேபியர்களை அல்லது முஸ்லிம்களை மாத்திரம் விளித்துப் பேசாமல் முழு மனித இனத்தையும் முன்னோக்கி விழித்துப் பேசும் பொதுவானதோர் வழிகாட்டல்.

அல்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.

> உலகின் எந்தவொரு கொள்கைகளோ சிந்தாந்தங்களோ வழங்காத தனித் துவமானதொரு பார்வையை மனித இனப்பன்மைத்துவத்திற்கு இஸ்லாம் வழங்கியுள்ளது.



இஸ்லாத்தின் இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) ‘‘மனிதர்களே நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒருவன்.உங்களுடைய தந்தையும் ஒருவனே.அஜமிமையை விட அறபியோ அறபியை விட அஜமியோ அல்லது கறுப்பனை விட வெள்ளையனோ வெள்ளையனை விட கறுப்பனோ எந்தவிதத்திலும் சிறந்தவனல்ல. இறையச்சத்தைக் கொண்டு மாத்திரமே ஒருவன் உயர்ந்தவனாக முடியும்’’



சர்வதேச மனித உரிமைகள் பிரகடணம்

மனித சமத்துவத்தை வலியுறுத்துகிற இப்பிரகடணமானது உத்தியோகபூர்வமாக கடந்த 1948 ஆம் ஆண்டிலேயே அங்கீகரிக்கப்பட்டது.

கி பி 630 —— கி பி 1948

மனிதர்களே!நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் பெண்ணிலிருந்து படைத்தோம்.நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு பின்னர; உங்களை கோத்திரங்களாகவும்,கிளைகளாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவரோ.அவர்தான் அல்லாஹ் விடத்தில் மிக்க கண்ணியமானவர் ஆவார்.நிச்சயமாக அல்லாஹ் நன்பறிபவன் யாவற்றையும் அறிந்தவன்.(அல்ஹுஜ்ராத்:13).

இனத்திலும் நிறத்திலும் வேறுபட்ட போதும் மனித இனத்தைச் சார்ந்த அனைவரும் ஆதம், ஹவ்வா எனும் பெற்றோரின் பிள்ளைகள் ஆவர். அவர்களுக்கிடையில் காணப்படும் பன்மைத்துவம் வேறுபாடுகள் என்பன ஒருவர் மற்றவரை விட மேம்பட்டவர் என்பதைக் குறிப்பதற்கல்ல.மாறாக, ஒரு சாரார் மற்ற சாராரை புரிந்து, ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையுடன் இணைந்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் என்றும்,மேன்மை உயர்வு என்பன அல்லாஹ்வை வணங்கி வழிபடுபவர்களுக்கு மாத்திரம் சொந்தமானது என்றும் அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது.

மனிதர்கள், நிறத்திலும் தோற்றத்திலும் வேறுபட்டிருப்பதும் அவர்களின் மொழிகள்,பண்பாடுகள் பலவகைப்பட்டிருப்பதும் இறைவனின் அருட்கொடைகயாகவும் இப்பிரபஞ்சத்திலுள்ள அவனது படைப்பினது அதிசய அத்தாட்சிகளுள் ஒன்றாகவும் நோக்க வேண்டுமென எமது கவனத்தை அல்குர்ஆன் திருப்பி விடுகிறது.

இவ்வத்தாட்சிகளை அறிஞர்கள் சிந்தனையாளர்கள் மாத்திரமே கற்றுணர்ந்து படிப்பினை பெறுவர். (அர்ரூம் : 22).

மனித சமத்துவத்தை வலியுறுத்துகிற சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திற்கான முதல் முக்கிய ஒப்பந்தம்,உத்தியோகபூர்வமாக கடந்த 1948 ஆம் ஆண்டிலேயே அங்கீகரிக்கப்பட்டது.இதன் பிறகு தான்,இது அமுலுக்கே வந்தது.

ஆனால், நபி(ஸல்) அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வாறான சிறப்புமிக்கதொரு மனித உரிமைகள் பிரகடணத்தினை வெளியிட்டார்கள். மக்களுக்கு மத்தியில் நபி (ஸல்) அவர்கள் பின்வரும் உரையை நிகழ்த்தியதன் மூலம் மனித இனத்திற்கான புதியதோர் யுகம் ஆரம்பமானது.மக்களைப் பார்த்து நபியவர்கள் பின்வருமாறு உரை நிகழ்த்தினார்கள்.‘‘மனிதர்களே...! நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒருவன்.உங்களுடைய தந்தையும் ஒருவனே.அஜமிமையை விட அறபியோ அறபியை விட அஜமியோ கறுப்பனை விட வெள்ளையனோ வெள்ளையனை விட கறுப்பனோ எந்தவிதத்திலும் சிறந்தவனல்ல.இறையச்சத்தைக் கொண்டு மாத்திரமே ஒருவன் உயர்ந்தவனாக முடியும்’’.(அஹ்மத் : 23489).

சூழல் பற்றி அக்கறை கொள்வது ஈமான் சார்ந்ததொரு விடயமாகும்.

மனிதனை இப்பிரபஞ்சத்தின் மேலான்மை மிக்கதோர் இனமாக நோக்குகின்ற சில தத்துவக் கோட்பாடுகள் உள்ளன.அதாவது, அவன் தனது நலன்கள் மற்றும் விருப்புகளுக்கு இசைவாக எதுவிதக் கட்டுப்பாடுகளும் இன்றி எப்படி வேண்டுமானாலும் இதில் செயற்படலாம். அவனது எதேச்சதிகாரமிக்க இந்நடவடிக்கைகள் இப்பிரபஞ்சத்தின் சில பகுதிகளை சேதப்படுத்தி இதில் வாழும் பல்வேறு உயிரினங்களை அழித்தொழிக்கும் நாசகார நிலையில் கூட இருக்கலாம் என்பதே இத்தத்துவத்தின் சுருக்கம் எனலாம்.இதேவேளை, மனிதன்-பிரபஞ்சம், பற்றிய இக்கோட்பாட்டிற்கு நேரெதிரான மற்றுமொரு சிந்தனையும் உண்டு.அதாவது, மனிதனும் ஏனைய உயிரினங்களைப் போன்ற சாதாரணமானதொரு படைப்பாகும்.அவனுக்கென்று எவ்வித தனிச் சிறப்புகளும் கிடையாது என்பதாகும்.

மனிதன் மற்றும் பிரபஞ்சம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றிய எதிரும் புதிருமான இக்கோட்பாடுகளுக்கு மத்தியில் அது தொடர்பான இஸ்லாத்தின் பார்வை எவ்வாறானது?

மனிதன் மற்றும் பிரபஞ்சம், என்பவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றிய இஸ்லாத்தின் பார்வை நம்பிக்கை மற்றும் கருத்தியல் ரீதியான கோட்பாடுகளை மையப்படுத்தியதாகக் காணப்படுவதோடு, மனிதன், பூமி,மிருகங்கள், இயற்கை வளங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு எவ்வாறு அமைய வேண்டுமென்பதை வரையறை செய்வதற்கான விரிவான பல்வேறு சட்டங்களையும் இஸ்லாம் வகுத்துள்ளது.

இஸ்லாத்தின் இக்கோட்பாட்டை ஆய்வு செய்பவர்களின் கவனத்தை ஈர்க்கும் முதல் அம்சமாக அல்குர்ஆன் கூறும் சமநிலைத் தன்மையே காணப்படுகின்றது.அதாவது, மனிதனை ஏனைய உயிரினங்களைவிட தனித்துவமானதொரு படைப்பாக நோக்குவதோடு அவனை அல்லாஹ் கௌரவப்படுத்தியுள்ளான். (அல் இஸ்றா.். : 70)

மேலும்,மனிதன் பயனடைந்து பாதுகாக்க வேண்டுமென்பதற்காக பிரபஞ்சத்தையும் அதனைச் சூழுவுள்ள படைப்பினங்களையும் அவனுக்கு தொண்டு செய்ய வேண்டுமெனும் நிலையில் தான் வைத்துள்ளான்.(இப்ராஹிம்: 32 - 33).

எனவே,ஏனைய படைப்பினங்கள் போன்று மனிதனும் எதுவித தனித்துவங்களும் அற்றதோர் உயிரினமாகும் எனும் நோக்கில் பார்க்காது;அவன் பயனடைய வேண்டும் என்பதற்காக இயற்கை வளங்கள் கூட அவனுக்கு கட்டுப்பட வேண்டு எனும் அளவிற்கு உண்ணதமான ஓர் சிருஷ்டியாக இஸ்லாம் மனிதனை நோக்குகின்றது.(அல்பகறா:29).

அதேவேளை, தான் விரும்புவதையெல்லாம் இப்பிரபஞ்சத்தில் செய்யும் ஒரு மேலாதிக்க சக்தியாகவும் மனிதனை இஸ்லாம் பார்க்க விரும்பவில்லை.ஏனைய சிருஷ்டிகளை விட மனிதன் பெற்றிருக்கும் சிறப்பியல்புகளும் உயர் கௌரவங்களும் இப்பிரபஞ்சத்தையோ அதன் இயற்கை வளங்களையோ அழித்து துவம்சம் செய்வதற்கான அதிகாரத்தை அவனுக்கு வழங்கவில்லை.இப்பிரபஞ்சத்தின் ஏகபோக உரிமையாளன் அல்லாஹ் தான் இதில் மனிதனின் வகிபாகம் இறைவனின் பிரதிநிதியாகவும்;அதன் காப்பாளனாகவும் தொழிற்படுவதாகும். மனிதனுக்கோ அல்லது வேறு படைப்பினங்களுக்கோ பாதிப்புக்களை ஏற்படுத்தாத வகையில் இதனை அபிவிருத்தி செய்து;இதிலிருந்து பயனடைவதன் மூலம் இதனை நுகர்வதற்கான உரிமை மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஹுத்:61,அல் பகறா).

மனிதனுக்கும் பிரபஞ்சத்திற்குமிடையில் காணப்பட வேண்டிய இறுக்கமான இத்தொடர்பினை கட்டமைப்பதற்காக பல விரிவான சட்ட வரைகளையும் வழிகாட்டல்களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

### 1. மிருகங்கள் மீதான கரிசனை.

மிருகங்களின் உரிமைகளை பாதுகாத்தல், அவைகளோடு அன்பாக நடந்து கொள்வதன் விளைவாக மறுமையில் மிக உயர்ந்த நன்மைகளை பெற்றுக் கொள்ளல், மிருக வதைகளை தடுத்தல், மீறும் பட்சத்தில் பல்வேறு கடுமையான இறை தண்டனைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படல் என்பவைகளை விளக்கும் பல்வேறு நபி மொழிகள் இடம் பெற்றுள்ளன.

1949 ஆம் ஆண்டில் தான், மிருகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முதலாவது அமைப்பு பிரித்தானியாவில் “மிருகங்களின் உரிமைகளுக்கான அரச சங்கம்” எனும் பெயரில் உருவாக்கப்பட்டது. ஆனால், இஸ்லாத்தை பொறுத்தவரையில் 14 நூற்றாண்டுகளுக்கு முன்னரே மிருகங்களுக்கு வதை செய்வது பாரிய குற்றச் செயலாக கருதி வன்மையாகத் தடையும் செய்யப் பட்டது.

இது தொடர்பான பல்வேறு உதாரணங்களை நபியவர்களின் வாழ்வியல் பதிவுகளில் காணலாம். மிருகங்களை பட்டினியிட்டு கொலை செய்தல், அதீத சுமைகளை ஏற்றுதல், துன்புறுத்தும் விதத்தில் அவைகளோடு விளையாடுதல், முகத்தில் அடித்தல் உள்ளிட்ட விடயங்களை தடுக்கும் கல்வேறு பிரபல்யமான சட்டவிதிகள் இஸ்லாமிய சட்ட நூற்களில் இடம் பெற்றுள்ளன.

மனிதர்களைப் பார்த்து நபி அவர்கள் கூறிய பின்வரும் நபி மொழியை பார்க்கின்ற போது, மிருகங்களுடன் அன்பாக நடந்து கொள்ள வேண்டுமென்பதில் இஸ்லாம் எவ்வளவு தூரம் கரிசணை கொண்டுள்ளது என்பதை புரிந்து கொள்ளலாம்.(புகாரி : 3467).

1949 ஆம் ஆண்டில் மிருக வதைகளை தடை- செய்வதற்கான முதலாவது சட்டம் பிரித்தானியாவில் அங்கீகரிக்கப்பட்டது.

“மிருகங்களின் உரி மைகளுக்கான முதலாவது சங்கம; 1924 ஆம் ஆண்டில் தான்- உருவாக்கப்பட்டது.

மிருகங்களை பட்டினியிட்டு கொலை செய்தல்,அதீத சுமை- களை ஏற்றுதல்,துன்புறுத்தும் விதத்தில் அவைகளோடு விளை- ளயாடுதல் உள்ளிட்ட விடயங்- களை கி.பி 632 ஆம் ஆண்டு இஸ்லாம் தடை செய்துவிட்டது.

### 2. தாவரங்கள் பற்றிய அவதானம்.

தமது நலனைக் கருத்திற்கொண்டோ, அல்லது வேறு மனிதர்கள் அல்லது ஏனைய உயிரினங்களின் நலனுக்காகவோ பயிரிடுவதில் கவனம் செலுத்த வேண்டுமென மனிதர்களை இஸ்லாம் தூண்டுகிறது.யாராவது ஒருவர் உயிரினங்கள் பயனடையும் வகையில் ஒரு பயிரை நட்டி அல்லது அதை நடுவதில் ஏதோவொரு வகையில் பங்கெடுத்து அப்பயிரிலிருந்து பறவை அல்லது மனிதன் அல்லது மிருகம் சாப்பிட்டால்,அதன் மூலம் ஸதகாவின் நன்மையை அவர் பெற்றுக் கொள்கின்றார்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (2320).

இனிமேல் எவருமே பயனடைய முடியாது என்று உறுதியாகக் கருதும் மிகக் கடினமான இக்கட்டான சூழ்நிலையாக நோக்கப்படுகின்ற யுக முடிவு இடம் பெறும் வேளையில் கூட,விவசாயத்தில் ஈடுபடுவதன் மூலம் பூமியை வளப்படுத்தி சூழலைப் பாதுகாக்கும் பணியில் தவறாது பங்கெடுக்க வேண்டுமென ஒரு முஸ்லிமை நபியவர்கள் பணித்திருக்கின்றார்கள்.(அஹ்மத்: 12902)

எனவே, பூமியை வளப்படுத்துவது மிகக் கடினமான இக்கட்டான சூழ்நிலையில் கூட, நிறைவேற்றப்பட வேண்டிய வணக்க வழிபாடுகளுள் ஒன்றென இஸ்லாம் நோக்குகின்றது.

3. இயற்கை மூல வளங்களை பாதுகாத்தல்.

இயற்கை வளங்களை மாசுபடுத்தி அழித்து விடாத நிலையில் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. “வருமுன் காப்போம்” எனும் கொள்கையின் அடிப்படையில் சூழலை பாதுகாப்பதற்கான முழுமையானதொரு நிகழ்ச்சித் திட்டத்தை முன்வைத்துள்ளது.

சூழலை சுத்தமாக வைத்தல், இயற்கை வளங்களை பாதுகாத்தல், இவைகளை மிகச் சிக்கனமாக பயன் படுத்தல், இவைகளை மாசுபடுத்தல் அல்லது அழித்தல் என்பவற்றை குற்றச் செயலெனக் கருதுதல்,போன்ற விடயங்களால் உத்தரவாதப்படுத்தும் பிரதான அம்சங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- இயற்கை வளங்களை பயன் படுத்துகிற போது வீண் விரயம் செய்தல் ஹராமாக்கப்பட்டுள்ளது. இவற்றுள், மிகப் பிரதானமானது நீர் வளமாகும்.இறைவனை வணங்கும் நோக்கத்தில் செய்யப் படுகின்ற வுழுவில் கூட இதனை வீண் விரயம் செய்தல் தடுக்கப்பட்டுள்ளது.
- சமூகத்தில் அதிகாரம் மற்றும் செல்வாக்கு மிக்கவர்கள் பிறரை பாதிக்கும் வகையில் தாங்கள் மாத்திரம் தான் இயற்கை மூல வளங்களின் ஏகபோக உரிமையாளர்களெனக் கருதுவது தடைசெய்யப் பட்டுள்ளது.

எனவே,இயற்கை வளங்களுள் ஒன்றான நீரையோ அல்லது சக்தி வளமான நெருப்பையோ அல்லது உணவு வளங்களுள் ஒன்றெனக் கருதப்படும் தாவரத்தினையோ தங்களின் ஏகபோக உரிமையெனக் கூறுவதை இஸ்லாம் ஹராமாக்கி யுள்ளது.(அபூதாவுத்: 3477).

- சூழலைப் பாதிக்கின்ற அனைத்து விடயங்களும் தடுக்கப்பட்டுள்ளன. நீர் நிலையங்களில் சிறுநீர் கழித்தல், மக்கள் வாழுகின்ற சாலை யோரங்கள், பயணக் களைப்பின் போது ஓய்வெடுப்பதற் காக ஒதுங்கிச் செல்லும் நிழல் தரும் இடங்கள் போன்றவைகளில் மலசலம் கழித்தல் என்பவைகள் தடைசெய்யப் பட்டிருப்பதை இவற்றுக்கான மிகச் சிறந்த உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

சூழலை சுத்தப்படுத்துதல்,வீதியி லுள்ள இடர் தரும் பொருட்களை அகற்றுதல்,போன்ற பொதுப்பணிகளில் பங்கெடுப்பதை நற்கருமங்களாக மட்டுமல்லாது ஈமானிய அம்சமாக வும் கருதும் இந்த மார்க்கத்தில் மேற்குறித்த விடயங்கள் வெறுமனே இதற்கான சில ஆதாரங்கள் மாத்திரம் தான்.(முஸ்லிம் : 35).

அறிவின் மார்க்கம்.

நபி (ஸல்) அவர்களுக்கு இறங்கிய அல்-குர்ஆனின் முதல் சொல்லான “இக்ர∴”- படி- என்பது எதேச்சையாக நடந்த நிகழ்வொன்றல்ல.

உண்மையாக, மனித இனத்திற்கு அறிவின் பல்வேறு பலன்களை இஸ்லாம் அழுத்திக் கூறிய நிகழ்வாகும்.

ஒரு முஸ்லிம் அறிவைத் தேடிச் செல்வதை சுவனத்தை நோக்கிச் செல்லும் பாதையாக இஸ்லாம் கருதுகின்றது.

இதனை நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:“எவர் ஓருவர் அறிவைத் தேடி ஒரு வழியில் பயணிக்கின்றாரோ,அவருக்கு அல்லாஹ் சுவனத்திற்கான பாதையை இலகுபடுத்துகின்றான்” (முஸ்லிம்: 2699).

பின் வரும் நபிமொழியில் அற்புதமானதொரு உவமையினூடாக நபியவர்கள் இதனை விளக்குகின்றார்கள்.

ஒரு வணக்கசாலியை விட ஓர் ஆலிமுக்குள்ள சிறகப்பானது, சாமான்ய மனிதனை விட முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதிருக்கும் சிறப்பைப் போன்றாகும்.(அத் திர்மிதி: 2685).

வேறு சமயங்களில் காணப்பட்டது போல இஸ்லாத்திற்கும் அறிவியலுக்குமிடையில் எவ்வித மோதலும் இருக்கவில்லை.

மாற்றமாக இஸ்லாம் அறிவுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக இருந்துள்ளதோடு,மட்டுமல்லாமல் அறிவுக்கு அது எப்போதும் துணை நிற்கிறது.

மேலும், அது அறிவு மனித இனத்துக்கு பயன்களைக் கொடுக்கும் காலமெல்லாம் இஸ்லாமியர்கள் அதனை கற்கவும்,கற்பிக்கவும் அவர்களை இஸ்லாம் தூண்டுகின்றது.


பெரும்பாலான முஸ்லிம் விஞ்ஞானிகள் ஆரம்பமாக அல்குர்ஆனை கற்று அதனை மனனமிட்டதோடு,மார்க்க விளக்கங்களைப் பெற்ற நிலையிலேயே கல்வி நடவடிக்கைகளைத் துவங்கினர்.அதன் பின்னரே அவர்கள் தங்களது துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றனர் என்பது வியத்தத்தக்கதொரு விடயமல்ல.

மனிதர்களுக்கு நல்ல விடயங்களைப் போதிக்கின்ற அறிஞர்களை அல்லாஹ் கௌரவப்படுத்தியுள்ளான்.எனவே தான்,“அனைத்து உயிரினங்களும் அறிஞர்களுக்காகப் பிராத்திக்கின்றன” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(அத்திர்மிதி : 2685).



“ பெரும்பாலான முஸ்லிம் விஞ்ஞானிகள் ஆரம்பமாக அல்குர்ஆனை கற்று அதனை மனனமிட்டதோடு,மார்க்க விளக்கங்களைப் பெற்ற நிலையிலேயே கல்வி நடவடிக்கைகளைத் துவக்கினர்.அதன் பின்னரே அவர்கள் தங்களது துறைகளில் சிறப்புத் தேர்ச்சியும் பெற்றனர்.

சில முஸ்லிம் அறிஞர்கள்.



1. ‘‘அல் ஹுவாரஸ்மி’’ (790 – 850 பக்தாத்).

இவர் கணிதவியல் ஆய்வாளராகவும், பொறியியல் மற்றும் வின்னியல் துறை அறிஞராக இருந்ததோடு, இயற் கணிதவியல் துறையின் ஸ்தாபகராகவும் விளங்கினார்.

மொழி பெயர்க்கப்பட்ட இவரது நூற்கள் பிற கல்வியற் துறைகளுக்கு முன்னோடியாக விளங்கியதோடு மட்டுமல்லாது,இதன் விளைவாக,‘‘அல்ஜப்ர்,அஸ் ஸிப்ர்’’போன்ற அறபு மொழிச் சொற்கள் முறையே Algebra, Zero போன்ற இலத்தீனிய மொழிச் சொற்களாக மாற்றப்பட்டன.



2- ‘‘இப்னுல் ஹைதம்’’ (965–1040கெய்ரோ). இயற்பியல் மற்றும் பொறியியல் அறிஞராக விளங்கிய இவர், அல் அஸ்ஹர் பல்கலை கழகத்தோடு இணைந்து ‘‘கண்ணொளியியல்’’ எனும் அறிவுத் துறைக்கு பாரிய பங்களிப் புக்களை வழங்கினார்.

மேலும், புகைப்படக் கருவியை கண்டுபிடிப்பதற்கான அடிப் படைகளைக் கண்டு பிடித்தவரும் இவரே ஆவார்.பல்வேறு மொழிகளில் பரவலாக பிரயோகிக்கப்படுகின்ற ‘‘Camera’’ எனும் சொல்லானது ‘‘கும்றா’’ எனும் அறபுப் பதத்திலிருந்து மருவி வந்ததொரு சொல்லாகும்.என்பதை ஆய்வாளர்கள் பலர் உறுதிப் படுத்தியுள்ளனர்.

‘‘கும்றா’’ என்பது ‘‘இப்னுல் ஹைதம்’’ ஆய்வுகளை மேற் கொள்வதற்குப் பயன்படுத்திய ஒளியறையின் பெயராகும்.

3- ‘‘அல்பரூனி’’ (973-1048 ஈரான்).



மிகப் பெரும் வானியல் அறிஞராக விளங்கியவர் தான் இவர்,முதன் முதலில் புவி மையக் கோட்பாட்டினை விளக்கியதோடு புவியீர்ப்புச் சக்தி தொடர்பாகவும் உணர்த்தினார்.

4- அல்ஸஹ்ராவி (936 -1013 ஸ்பெய்ன்).



மருத்துவராகவும் சத்திர சிகிச்கை நிபுனராகவும் விளங்கிய இவர்,அறுவை சிகிச்சைத் துறையினை மேம்படுத்திய ஒருவ ராகவும் விளங்கினார்.

அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தும் நூற்றுக்கணக்கான கருவிகள் பற்றி தனது மருத்துவ நூற்களில் முதன் முதலில் விளக்கியதோடு, பல நூற்றாண்டு காலமாக இவரது புத்தகங்கள் பல்வேறு மொழிகளில் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை துறைகளுக்கான மிகப்பிரதான மூல நுற் களாக மாறின.

5- இப்னு ஸீனா (980 – 1037 உஸ்பகிஸ்தான்.(புகாரா)).



மத்திய அறிவியல் காலப்பகுதிகளில் (Avisenna) எனும் பெயரில் அறிமுகமான மிகப் பெரும் முஸ்லிம் தத்துவ ஞானியாகவும் மருத்துவராகவும் விளங்கிய இவர்,பல்வேறு வைத்திய மற்றும் சிகிச்சை முறைகளைப் பற்றி ஆரம்பமாக விளக்கியதோடு,இவரது மருத்துவ ஆய்வுகளின் போது இவரால் மேற்கொள்ளப்பட்ட அதி உயர் விஞ்ஞான செயன் முறை பரிசோதனை முறைகளானது,இவரது காலத்தில் கண்டறியப்படாத இந்த நவீன காலத்திலும் கூட நிலைத்து நிற்கின்ற மிக நுனுக்கமான ஆய்வு முடிவுகளை கண்டறிய துணை நின்றன.

ஏழு நூற்றாண்டுகளாக மருத்துவப்பாடப் போதனையின் பிரதான மூல நூலாக விளங்கிய (அல்கானூன்) எனும் இவரது புத்தகத்தில் மேற்குறித்த விடயங்களை மிகத்தெளிவாகப் பார்க்கலாம்.

இவரது இந்நூல் பதினேழாம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதி வரை ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பாடநூலாக விளங்கியது. மருத்துவ உலகின் மிகப் பெரும் ஜாம்பவானாக மாறிய பின்னரும் கூட,இவர் இலவசமான மருத்துவச் சேவைகளை நோயாளிகளுக்காக வழங்கி வந்தார்.இது, இவரிடம் காணப்பட்ட மனித நேயம் மற்றும் அறிவு எனும் அருட்கொடைகளை வழங்கியமைக்காக இறைவனை நினைவு கூறும் நன்றியுணர்வினை எடுத்தியம்பும் அம்சங்களாக உள்ளன.

6- இப்னுன் நபீஸ் (1213 – 1288 டமஸ்கஸ்).



இவர்,இஸ்லாமிய சட்ட அறிஞராக விளங்கிய அதேவேளை, மனித உடலுறுப்புக்களின் தொழிற்பாடுகள் பற்றி விளக்கும் மிகப் பெரும் மருத்துவர்களில் ஒருவராகவும் காணப்பட்டார்.

சிறு குருதிச் சுற்றோட்டத்தைப் பற்றி முதன் முதலில் கண்டு பிடித்ததோடு,அதனை மிக நுனுக்கமாக விளக்கி மேலும், இன்று வரை அதிகம் செயற்படுத்தப் படுகின்ற பல்வேறு மருத்துவக் கோட்பாடுகளையும் வகுத்துள்ளார்.

**மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கியதொரு மார்க்கமே இஸ்லாம்.**

அதிகமான சமயங்களில் காணப்படுவது போன்று வெறும் வணக்க வழிபாடுகளும் சடங்கு சம்பிரதாயங்களும் மாத்திரமே உண்டு எனும் நிலை இஸ்லாத்தில் இல்லை என்று கூறும் போது பலர் வியந்து நிற்கின்றனர்.

பள்ளிவாயில்களில் முஸ்லிம்களால் மேற்கொள்ளப் படுகிற தொழுகை, பிரார்த்தனை போன்ற ஆன்மீகத் தேவைகள் மாத்திரமல்ல இஸ்லாம்.



இதனைப் பின்பற்றுபவர்களால் நம்பப்படுகின்ற வெற்றுக் கருத்துக்களோ நம்பிக்கைகளோ,அல்ல. மேலும் வெறுமனே,இதுவொரு பரந்த பொருளதார முறைமையுமல்ல.இன்னும் சமூகக் கட்டமைப்பையும் ஒழுங்கையும் உருவாக்குதற்கான சட்டவிதிமுறைகள் கொள்கைத் தொகுப்புக்களோ அல்ல.பிற மக்களோடு உறவாடவேண்டிய ஒழுக்க பண்பாட்டு அம்சங்கள் அடங்கியதொரு தொகுப்பு மாத்திரமல்ல.மாறாக, இது மனித வாழ்வின் சகல துறைக ளுக்குமான முழுமை பெற்றதொரு வாழ்க்கைத் திட்டமாகும். இது மட்டுமல்ல, இதுவல்லாத வேறு விடயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.புத்தாக்கம் மற் றும் நாகரீக முன்னேற்றம் என்ப வற்றை கருத்திற் கொண்டு உழைப்பதற்காக மனித சுதந்திரத்திற்கு எவ்வித தடைகளையும் இஸ்லாம் ஏற்படுத்த வில்லை. அல் குர்ஆன் கூறுவது போன்று மனித குலத்திற்கு அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளுல் மிக முக்கிய அம்சமாகவே கருதப்படுகின்றது.

இணைவைப்பவர்களுள் ஒருவர் நபித்தோழர் ஸல்மான் அல் பாரிஸி (றழி) அவர்களைப் பார்த்து பரிகாசமாக “உங்களது தோழர் (நபியவர்கள்) மலசலம் கழிப்பதற்கான ஒழுக்கங்கள் உட்பட அனைத்து விடயங்களையுமே உங்களுக்கு கற்றுத் தருகின்றாரே” என்று கூறிய போது நபித் தோழர் அவர்கள் பெருமையோடு பின்வருமாறு பதிலளித்தார்:“ஆம்,உண்மையாகவே அவர் எமக்கு அனைத்தையும் கற் றுத்தருகின்றாா;” என கூறி விட்டு, மலசலம் கழிப்பதற்கான இஸ்லாத்தின் ஒழுங்கு விதிகளை அவருக்கு விளக்கப்படுத்திக் காட்டினார். (முஸ்லிம்: 262)

## உலகமும் மறுமையும்

பண்டைய எகிப்தியர்கள் இறந்தவரின் உடலை வேதி யல் முறையில் பாதுகாத்து, மரணத்தின் பின்னுள்ள மறுமை வாழ்வில் அவருக்கு அவசியப்படலாம் எனக் கருதி

அதனோடு,அவரது பெறுமதியான சொத்துக்களை வைத்து விடுவார்கள்.

இதற்கு, நேரெதிராக -''திப்த்''- இன மக்கள் இறந்தவரின் உடலை துண்டு துண்டாக வெட்டி, மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் உணவாக அமை யட்டுமெனக் கருதி உயரமானதோர் இடத்தில் வைத்து விடுவாரகள்.

இவ்வாறே,இந்துக்கள் இன்று வரை அவர்களின் உடல்களை எரித்து விடுகின்றனர்.

இவ்வாறு செய்வது தான், இறந்த ஆண்மாக்களின் தீயவினையின் ஆதிக்கத் திலிருந்து தங்களை காப்பதற்கான ஏக வழி என அவர்கள் கருதுகின்றமையே இதற்கான காரணமாகும்.

இறந்த உடல்களை தகனம் செய்வதற்கான பல்வேறு வித்தியாசமான சடங்கு சம்பிரதாய முறை களை குறித்து காட்டும் ஒரு சில உதாரங்களை மட்டுமே நாம் இங்கு குறிப்பிட்டோம்.

உடல்களை தகனம் செய்யும் இச்சடங்குகளானது, சமயங்கள் மற்றும் மறுமை வாழ்வு குறித்து மக்களின் கோட்பாடுகள் என்பவற்றுக்கு அமைய இடத்திற்கு இடம் காலத்திற்கு காலம் மாறுபட்ட நிலையிலேயே காணப் படுகின்றன.

மறு உலக வாழ்வு உண்டா? அது எவ்வாறு இருக்கும்? அங்கு எமக்கு அவசியப்படுவது யாது? போன்ற விடை காணப்பட வேண்டிய பல்வேறு வினாக்களுக்கான விடைகளும் வேறுபட்டே காணப்பட்டன.

ஏனெனில்,மறு உலகை நம்பும் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி,அல்லது மறு உலகை நம்பாதவர்களாக இருந்தாலும் சரி அல்லது மரணத்திற்கு ஆயத்தமான நிலையில் இருந்தாலும் சரி அல்லது உலகின் வினோத வேடிக்கைகள்,வேலைப்பளுக்கள் காரணமாக மரணத்தை மறந்த நிலையில் இருந்தாலும் சரி மரணம் என்பது விதிவிலக்கின்றி அனைவருக்கும் சம்பவிக்கும் ஒரு நிகழ்வு என அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளும் மிகப்பெரும் உண்மையாகும்.

இம்மரணம் மனித வாழ்வின் இறுதி அம்சமா? அல்லது அதன் பிறகு வேறேதும் உண்டா? அல்லது மனி தன் இவ்வுலகில் வாழ்வது வீணான அர்த்தமற்ற தொரு விடயமா? என்பன போன்ற இம்முக்கிய கேள்வி களானது,மனிதன் மரணத்தை மறந்து அசிரத்தை போக்கோடு நடப்பதை எதிர்ப்பதோடு, அவன் தன்னைப் பற்றி அறிந்து கொள்ள எத்தனிக்கின்ற போதெல்லாம் அவனுக்கு மரணம் உண்டென்பதை



வலியுறுத்துகிற வினாக்களாக தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இக்கேள்விகளானது, எமது சிந்த னைக்கு பல்வேறு தடவைகளில் உதிப்பது போன்று அல்குர் ஆனும் இவைகள் பற்றி வித்தியாசமான முறைகளில் பல்வேறு தடவைகள் நினைவுறுத்தும் அதேவேளை, மரண த்தை மறந்து வாழ்ந்த அதிகமான மனிதர்கள் மறுமையில் கவலை படுவார்கள் என்பது குறித்தும் குறிப்பிடுகின்றது.

ஏனெனில்,உலகில் இவர்கள் வாழும் போது இவர்களது உள்ள த்தில் உதித்த இம்முக்கியமான வினாக்களுக்கு விடை காணத்தவரி யதோடு மரணத்திற்கான எவ்வித முன்னாயத்தங்களையும் மேற்கொள்ள வில்லை.அந்நாளில் இவர்களுள் சிலரின் கவலைகள் மாளாது பின்வருமாறு கூறுவர்:“என் மறுமை வாழ்க்கைக்காக நன்மையை நான் முற்படுத்தி அனுப்பியிருக்க வேண்டுமே!அந்தோ கைசேதமே.!நான் மண்ணாகி போயிருக்க வேண்டுமே.!”(அல் ஃபஜ்ரி :24,அந்நபஃ:40).

வின்னுலக சமயங்களைச் சார்ந்த அனைவருமே மறுவுலக வாழ்வு உண்டு என்றும் அதில் நன்னை தீமைகளுக்கான கூலிகள் வழங்கப்படும் என்றும் நம்புகின்றனர். ஏனெனில், இச்சமயங்கள் அனைத்தும் எல்லா இறைத்தூதர்களும் கொண்டு வந்த ஒரே விடயங்களையே தமக்குள் கொண்டுள்ளன.

மேலும், நன்மைகளையும் தீமைகளையும் சுமந்து செல்லும் மனிதர்களை விசாரித்து அவரவர் செயல்களுக்கேற்ப கூலிகள் வழங்கப்படுவதற்காக மறு உலகு எனும் ஓர் ஒழுங்கு இல்லையெனில் இவ்வுலக வாழ்வு, சமயம் மற்றும் பண்பாடுகள் போன்ற விடயங்கள் அர்த்தமற்றவைகளாகி விடும் என் பதை மனிதனின் பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளும்.

இவ்வாறு இருந்தும் கூட, இரவும் பகலும் ஒன்றினைய முடியாதது போல ஆன்மீகம் மற்றும் லௌகீக விடயங்களை ஒருங்கே ஒருவரால் ஒரே நேரத்தில் முன்னெடுக்க முடியாது. ஒன்றில்,உலகியல் விடயங்களை அடைவதற்கு தொழிற் பட வேண்டும்.இல்லையேல்,மறுமை வாழ்வுக்காக செயற்பட வேண்டும். இரண்டையும் இணைத்து காரியமாற்றுவது சாத்திய மற்றது என்று பலர் நினைக்கின்றனர். இது மட்டுமல்லாது, ஆன்மீகம், லௌகீகம் ஆகிய இரண்டையும் கவனத்திற்கொண்டு செயற்படுவதற்கான எவ்வித தடைகளும் இல்லை. என்கிற உண் மையை ஏற்றுக் கொள்வது கூட, சிலரைப் பொறுத்தவரை கடினமாகவே உள்ளது.

‘‘ஒருவன் நல்லெண்ணத்தோடு உலகம் அல்லது மறுமை சார்ந்த எந்தவொரு நல்ல காரியத்தைச் செய்தாலும் (அது மக்கள் பயணிக்கின்ற பாதையிலுள்ள ஒரு முள்ளை அகற்றுவதாகவோ அல்லது ஒரு கணவன் தனது மனைவிற்கு ஊட்டி விடுகின்ற ஒரு கவள உணவாகக் கூட இருக்கலாம்) அதற்காக அவனுக்கு மறுமையில் நன்மை வழங்கப்படும்.’’ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அல் புகாரி : 56).

நல்ல காரியங்களைச் செய்வதற்கு பல்வேறு வழிமுறைகள் உள்ளன. பின்வரும் செய்தியை தமது தோழர் களுக்கு மத்தியில் நபி (ஸல்) அவர்கள் கூறிய போது,அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனார்கள்:

அதாவது உங்களில் ஒருவர் தனது இச்சையை அவரது மனைவியின் மூலம் தீர்த்துக் கொண்டால்,அவருக்கு நன்மை எழுதப்படும் என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறிய போது இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கும் நன்மை வழங்கப்படுவதற்குமிடையில் என்ன சம்பந்தமுள்ளது என நபித் தோழர்கள் நபியவர்களிடம் வினவினர். அப்போது நபி (ஸல்) அவர்கள் “அவர் ஹராமான முறையில் இச்சையைத் தீர்த்திருந்தால் பாவம் செய்தவராக கருதப்படமாட்டாரா? என கேட்க, நபித்தோழர்கள் ஆம் என்றனர் அவ்வாறெனில் தனது இச்சையை முறையாகத் தீர்த்துக்கொள்ள சரியான வழியைத் தெரிவுசெய்தமைக்காக அவர் நன்மை வழங்ப்படுவார். (முஸ்லிம்: 1673).

சமநிலைப் போக்கு கடைப்பிடிக்கப் பட்டுள்ளது என்ற உண்மையை இஸ்லாத்தைப் படிக்கின்ற அனை வரும் மிக எளிதில் புறிந்து கொள்வர். மறுமையில் நன்மைகளைப் பெற வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு வணக்க வழிபாடுகளில் ஈடுபடு மாறுவலியுறுத்தும் அதேவேளை, இறைய அருளை தேடி உலகின் நாலாப் பாகங்களிலும் முயற்சிகளை முடக்கி விடுமாறும், மனிதர்களை அல்குர்ஆன் பணிக்கிறது. (அல் ஜுமுஆ: 9-10)

இறையன்பைப் பெறும் நோக்கில் பொருளீட்டலில் ஈடுபடுவதும் மறுமை யில் நன்மையைப் பெற்றுத் தரும் விடயமாகும்.தொழுகை, நோன்பு தர்மம், என்பவைகள் மூலம் அல் லாஹ்வை வணங்குவது போன்று வாழ்வாதாரத்தை திரட்டுதல், பிள்ளை களை நல்ல முறையில் பராமரித்தல், ஆரோக்கியம் மற்றும் சமூக முன்னேற்றப் பணிகளில் கவனம் செலுத்தல் போன்ற உலகியல் விடயங்களில் ஈடுபடுவதன் மூலமும் இறைவனை வணங்கி வழிபடுமாறு ஒரு முஸலிம் பணிக்கப்படடுள்ளான்.எனவே, உலக வாழ்வு மற்றும் மறுமை வாழ்வு என்பவற்றுக்கிடையில் சீரான உலக, மறுமை ஆகிய இரண்டுக்குமிடையில் காணப்படும் முரண்பாடற்ற நிலையில் ஒத்திசைந்து செல்லும் போக்கினை ஒரு முஸ்லிம் உணர்கின்ற போது, இனம் புரியாதோர் ஆத்ம திருப்தியை அவன் பெறுகின்றான்.

உலகம் மறுமை ஆகிய இவ்விரண்டுக்குமிடையில் முரண் பாடுகளோ இரட்டைத் தன்மைகளோ கிடையாது.ஒன்று மற்றொன்றை பலப்படுத்தும் இரு பெரும் கூறுக்களைக் கொண்டதொரு கட்டமைப்பு ஒழுங்கே இங்கு காணப்படுகின்றது.

> சமநிலைப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையைஇஸ்லாத்தைப் படிக்கின்ற அனைவரும் மிக எளிதிலேயே புறிந்து கொள்வர். மறுமையில் நன்மைகளைப் பெறவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு வணக்க வழிபாடுகளில் ஈடுபடுமாறுவலியுறுத்தும் அதேவேளை, இறையருளைத்தேடி உலகின் நாலாப்பாகங்களிலும் முயற்சிகளை முடிக்கிவிடுமாறும்மனிதர்களை அல்குர்ஆன் பணிக்கின்றது.

“எனது வாழ்வின் அனைத்து நிலைகளும் அல்லாஹ்விற்காக அர்ப்பணிக்கப்படும் வணக்க வழிபாடுகளாகும்.”இதுவே ஒரு முஸ்லிமினது வாழ்வின் மகுடவாசகமும் அவனின் அடையாளச் சின்னமாகவும் இருக்க வேண்டும் என்று அல்குர்ஆன் வலியுறுத்துவதோடு, இதனை உலகறிய உரக்கச் சொல்ல வேண்டுமென்றும் அவனைப் பணிக்கின்றது.எனது தொழுகை மட்டும் பிற வணக்கங்கள் உள்ளிட்ட வாழ்வின் அனைத்து நிலைகளும் அல்லாஹ்விற்கு மட்டுமே உரியது ஆகும்.எனது மரணத்தின் பின்னர் இச்செயல்களுக்கான தீர்ப்பை அல்லாஹ் வழங்குவதோடு இதற்கான பிரதிபலன்களையும் தருவான். இதன் காரணமாகவே, அவனது மார்க்கத்தை நான் ஏற்று வாழ்கின்றேன். (அல்அன்ஆம் 162).

ஒரு முஸ்லிமின் வாழ்வியல் மகுடவாசகத்தின் பொருளை மேற்படி வாசகங்கள் உணர்த்துகின்றன.

### இஸ்லாம் கூட்டுறவு மற்றும் ஒற்றுமையின் மார்க்கம்.

முஸ்லிம் சஞ்சாரியான அஹ்மத் பின் பழ்லான் என்பவர் ரஷ்யா, டென்மார்க், ஸ்கன்டினேவிய நாடுகள் என்பவற்றின் பல்வேறு பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு,அம்மக்களின் இயல்பு நிலை மற்றும் வாழ்வியல் யதார்த்தம் பற்றிய அவர் வழங்கிய தகவல்களே உலகம் அந்நாடுகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு உதவிய மிக நுனுக்கமான பகுப்பாய்வுவிவரணமாகக் கருதப்படுகின்றது.

921 ஆம் ஆண்டு அவர் மேற்கொண்ட இப்பயனமானது, மத்திய நூற்றாண்டு காலப்பகுதிகளின் நாகரீக உறவுகளுக்கான மிக முக்கிய சுற்றுப் பயணமாக நோக்கப்படுகின்றது.

அக்காலப் பகுதியின் அறிவு மற்றும் நாகரீகத்தின் உறைவிடமாக விளங்கிய பங்தாதிலிருந்து துவங்கி பல்வேறு நாடுகளுக்கும் அவரால் மேற்கொள்ளப்பட்ட இப்பயனத்தின் அனுபவங்கள்,காட்சிகள் மற்றும் நிகழ்வுகளை முழுமையானதொரு புத்தகத்தில் ஆவணப்படுத்தினார்.

ரஷ்யாவில் கண்டெடுக்கப்பட்ட இவரது கையெழுத்துப் பிரதியை அடிப்படையாகக் கொண்டே இப்புத்தகமானது, முதன் முறையாக 1923 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இப்னு பழ்லானுடைய இப்புத்தகம் வரலாற்று முக்கியத்துவம் பெறுவதற்கான பின்னணி பற்றி அமெரிக்க அறிஞரான “ அளைஉாநநட உசளைஉாவழெ ”என்பவர் பின்வருமாறு விளக்குகின்றார;“பங்தாதிய முஸ்லிம்கள் இஸ்லாமிய சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாக இருந்தும் கூட, சிந்தனையிலும் நடத்தையிலும் கொள்கைக் கோட்பாட்டிலும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட பிறமக்களை ஏற்றுக் கொள்ளும் தாராளத்தன்மை கொண்டவர்களாக விளங்கினர். அக்காலத்தில் அவர்கள் அப்பிராந்தியத்தின் சிறுபான்மை இனமாகவே இருந்தனர்.”

Micheel –(Crichton Easters Of The Dead)



சுமய, கலாச்சார வேறுபாடுகளுக்கு அப்பால் உயர் பண்பாட்டு நடத்தைசார் விழுமியங்களோடு, மக்கள் அனைவரும் கூட்டாக இணைந்து, ஒற்றுமையுடன் ஒழுக்கமுள்ள மனித நாகரீகத்தை கட்டியெழுப்ப ஒன்றினைய வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

மக்களை விட்டு ஒதுங்கி வாழ்வது, இஸ்லாத்தின் வழிமுறையாக மாட்டாது.எனவே தான், நபி (ஸல் ) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.மனிதர்களை விட்டு தூர ஒதுங்கி வாழ்பவனை விட அவர்களோடு ஒன்றரக் கலந்து அவர்களிடமிருந்து ஏற்படும் தொந்தரவுகள் மற்றும் தவறுகளைப் பொறுத்துக் கொண்டு வாழும் ஒரு மனிதனே சிறந்தவன்.(இப்னு மாஜாஹ் 4032).

படைப்பாளனும்,
வணக்கத்திற்குரியவனும்
ஒருவனே.



இஸ்லாத்தில் நுழைவதற்கு கோட்பாட்டு ரீதியிலான நம்பிக்கை மாத்திரம் போதுமானது அன்று.மாறாக படைத்து பரி பாலிப்பவன் ஒருவன் என்றால்,வணங்கி வழிபடுவதற்கும் அவனே தகுதியானவன் என்பதே உண்மையாகும்.

"அல்லாஹ்" எனும் அறபுப்பதமானது, ஒருங்கே மூன்று அர்த்தங் களைக் குறிக்கின்றது.

- மனிதர்கள் தங்களது தொழுகை, நோன்பு உள்ளிட்ட ஏனைய பிற வணக்க வழிபாடுகள் அனைத்தையும் இதய சுத்தியோடு, நிறை வேற்றுவதற்கு தகுதியான ஏக இறைவன்.
- அவனின் உள்ளமை, பண்புகள்,கீர்த்தி என்பவற்றில் மிகவும் உண்ணத நிலையில் உள்ளவன்.அவனது இம்மகோணத நிலையை மனிதனின் பகுத்தறிவால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது.
- மனித உள்ளங்கள் அவனை நேசித்து, தியானித்து வணக்க வழிபாடுகளால் நெருங்குகின்ற போது அவைகள் அமைதி பெற்று இன்புறுகின்றன.

அல்லாஹ் பற்றிய மிகச் சரியான கொள்கையைக் கொன்டிருக்க வேண்டுமென்றும் மேலும், அவனது மகோணத நிலையை கலங்கப் படுத்துகின்ற அனைத்து விதமான தவறான கருத்துக்கள் மற்றும் புணைந்துரைகள் என்ப வற்றிலிருந்து அவனைத் துய்மைப்படுத்தல் அவசியமென்றும் அல்குர்ஆன் வலியு றுத்துகின்றது.

அல்லாஹ் தான்,இப்பிரஞ்சத்தையும் அது செயற்படுகின்ற ஒழுங்கையும் மிக நுனுக்கமாக படைத்தான் என்று அல்குர்ஆன் விளக்குகிறது. இதில் நடைபெறுகின்ற மிகச் சிறிய விடயம் உள்ளிட்ட, அனைத்து விவகாரங்களும் அவனது அறிவு, விருப்பு,ஏற்பாடு என்பவற்றிற்கு உற்பட்ட நிலையிலேயே இடம் பெறுகின்றன.

இந்த வகையில், அவனது அறிவு, விருப்பு என்பவற்றுக்கு வெளியில் (உட்படாத நிலையில்) இப்பிர பஞ்சத்தின் எப்பகுதியிலும் எவ்வித மாற்றமும் நிகழாது.எனவே, அவனது முழுமையான அருள், அறிவு, ஆற்றல் என்பவற்றுக்கு உட்படாத வகையில் உயிரினங்கள் அனைத்திலும் காணப்படுகின்ற பெண்ணினமானது எதுவொன்றையும் தங்களது கற்பத்தில் சுமக்கவோ அல்லது ஈன்றெடுக்கவோ முடியாது.



மரத்தின் இலைகள் உதிர்வது ஒரு துளி மழை பெய்வது என உள்ளிட்ட அனைத்தும் அல்லாஹ்வின் அறிவிற்கும் ஆற்றளுக்கும் உட்பட்டதாகவே நடைபெறுகின்றன.என அல்குர்ஆன் அளுத்திக்கூறுகிறது.

> அல்லாஹ்வுககு மாத்திரமே வணக்க வழிபாடுகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும்". என்பதே அனைத்து இறைத்தூதர் களினதும் அழைப்புச் செய்தியாக இருந்தது என்பதே இஸ்லாத்தின் மிகத் தெளிவான நிலைப்பாடாகும்.

மேலும்,ஒரு துளி மழை கூட பொழிய முடியாது என்று அல்குர்ஆன் விளக்குகின்றது.

முழுமைத்துவம் பெற்ற மிக அழகான பண்புகள் அவனுக்கு உள்ளன. எனவே,அவன் எவராலும் வெற்றி கொள்ள முடியாத மிகப் பெரும் சக்தியாளன், அன்பால் அனைத்தையும் ஆட்கொண்டிருக்கும் மிகப் பெரும் அருளாளன் எவ்வித குறைகளுமில்லாது மிக உயர்ந்தவன்.

வானங்கள் மற்றும் பூமி என்பவற்றை அல்லாஹ் ஆறு நாட்களில் படைத்தான்.பின்னர், ஏழாவது தினம் அவன் ஓய்வெடுத்தான் என்று சிலர் கூறும் இப்பிழையான கருத்துக்களை மிகத் தெளிவாகவே அல்குர்ஆன் உண்மைக்கு புறம்பானது என நிரூபிக்கின்றது.(காப் : 38).

இறைவனை படைப்பினங்களோடு ஒப்பிட்டு நோக்குவதன் விளைவாகவே, இவ்வாறான தவறான கருத்துக்கள் வெளிப்படுகின்றன.அல்லாஹ் படைப்பாளன் அவனல்லாத ஏனையவைகள் அனைத்துமே அவனது படைப்பினங்களாகும். இவ்வாறான நிலையில், படைப்பாளனாகிய இறைவன் எவ்வாறு அவனது படைப்பினங்களைப் போன்றாக முடியும்."அவனைப் போன்று எப்பொருளும் இல்லை,அவன் யாவற்றையும் செவியேற்பவன்,பார்பவன்.(அல் ஷூறா : 11).

அணுவளவும் அநியாயம் செய்யாத நீதியாளனாகவும் ஞானம் நிறைந்த வனாகவுமே அல்லாஹ் இருக்கின்றான்.வாழ்வில் காணும் பல்வேறு விடயங்களினூடாக நாம் அவனின் ஆற்றலை புரிந்து கொள்ளலாம். பெற்றோர்களின் சில நடத்தைகளுக்கான விளக்கங்களை சிறுவர்களான பிள்ளைகளுக்கு புரிந்து கொள்ள முடியாது.என்பது போலவே, தனது படைப்பினங்கள் மற்றும் நாட்டங்களில் இறைவன் மறைத்து வைத்திருக்கின்ற அவனது இறைத்தத்துவங்களை முழுமையாக மனித பகுத்தறிவினால் புரிந்து கொள்ள முடியாது.ஏனெனில்,மனிதன் கொண்டிருக்கின்ற சிந்தனா சக்தியானது,தந்தைக்கும் தாய்க்குமிடையில் கூட பாரிய வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

இஸ்லாத்தில் நுழைவதற்கு கோட்பாட்டு ரீதியிலான நம்பிக்கை மாத்திரம் போதுமானது அன்று.மாறாக படைத்து பரிபாலிப்பவன் ஒருவன் என்றால், வணங்கி வழிபடுவதற்கும் அவனே தகுதியானவன் என்பதே உண்மையாகும்.

பிரார்த்தனை உள்ளிட்ட எந்தவொரு வணக்க வழிபாடுகளையும் அல்லாஹ் தவிர்ந்த வேறொருவருக்காகவும் நிறைவேற்ற முடியாது.மட்டுமல்ல, வணக்ஷ கங்களின் போது இறைவனுக்கும் அடியார்களுக்குமிடையில் உதவியா ளர்களர்கள் எனும் பெயரில் இடைத்தரகர்களை வைத்துக் கொள்ளவும் கூடாது.

உலகிலுள்ள ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து உதவிகளைப் பெற விரும்பும், தேவையுடைய நலிவுற்ற பிரஜைகள் இடைத்தரகர்களின்றி அவர்களின் தேவைகளை நிறைவு செய்ய முடியாது.ஆனால், இறைவனை நெருங்குவதற்கு எந்தவொரு இடைத்தரகர்களது உதவியாளர்களும் தேவை யில்லை.

ஏனெனில்,அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் கொண்டவன், மகா சக்தியாளன், முழு பிரபஞ்சத்தையும் தனது ஏகாதிக்கத்தின் கீழ் வைத்திருப்பவன், பகிரங்கமான மற்றும் மறைவான அனைத்து ஞானங்களையும் கொண்டவன். உலகில் ஒன்றை உருவாக்க நினைத்தால், (குன்) ''ஆகுக'' எனும் ஒரு வார்த்தையின் மூலம் படைத்து விடும் மகா உன்னத படைப்பாளன்.

தனது தேவைகளை அல்லாஹ்விடம் முன்வைத்து அவனை நெருங்கும் போது, ஒரு முஸ்லிம் மன அமைதியை நிறைவாகவே பெற்றுக் கொள்கிறான். ஏனெனில், ஓர் அடியான் தனது தேவைகளை இறைவனிடம் முன்வைத்து பிராத்திக்கின்ற போது, அவன் அவ்வடியானுக்கு மிக நெருக்கமாக இருப் பதோடு,மட்டில்லா மகிழ்ச்சியும் அடைகின்றான்.

மேலும், அவனிடம் தேவைகளை முறையிட்டு மண்டியிடுகிற அளவுக்கு அவனுக்கு நன்மைகளை வழங்கி அவனை கௌரவப்படுத்துகின்றான்.இது பற்றி அல்குர்ஆன் பின்வரும் அத்தியாயங்கள் குறிப்பிடுகின்றன.(அர் ற.்.து, அல் பகரா,அன் நம்ல்).

அல்லாஹ்வுக்கு மாத்திரமே வணக்க வழிபாடுகள் அனைத்தையும் முழு மையாக நிறைவேற்ற வேண்டும்''. என்பதே அனைத்து இறைத்தூதர்களினதும் அழைப்புச் செய்தியாக இருந்தது என அல்குர்ஆன் அழுத்திக்கூறுகிறது. (அன் நஹ்ல் : 36).

இறைவனுக்கும் அடியார்களுக்குமிடையில் இடைத்தரகர்களாக இருக்கின் றனர் எனும் போலிக் காரணிகளின் அடிப்படையில், எந்தவொரு வணக்க வழிபாடுகளையும் மலக்குகளுக்காகவோ அல்லது இறைத்தூதர்களுக்காகவோ அல்லது நற்பண்புகளின் உச்சத்தை அடைந்த இறைநேசர்களுக்காகவோ நிறை வேற்ற முடியாது.ஏனெனில், இவர்கள் அனைவருமே இறைவனின் படைப்பினங்களாகவும் அவனின் அடியார்களாகவுமே உள்ளனர்.

அல்லாஹ் அடியார்களுக்கு மிக நெருக்கமாக இருந்து அவர்களின் பேச்சுக்களை செவிசாய்ப்பதோடு,பிராத்தனைகளுக்கு பதிலளிக்கின்றான். அல்லாஹ்விற்கு மாத்திரம் வணக்க வழிபாடுகளை மேற்கொள்ளும் ஒருவர், எவ்வாறு வெற்றி மற்றும் சந்தோஷம் ஆகியவற்றின் வாடையை நுகராமல் இருக்க முடியும்?

பிரபஞ்சத்தைப் படைத்தவனும் அதன் சொந்தக்காரனும் வணக்கத்திற் குரியவனும் ஒருவனே ஆவான். எனவே, அவனுக்கு மாத்திரமே வணக்கங்களை நிறை வேற்ற வேண்டும் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.இதுவே சூரதுல் ''இக்லாஸ்'' எனும் சிறிய மற்றும் அல்குர் ஆனின் மிக உன்னத அத்தியாயத்தின் பொருளாகும்.

## சூரதுல் இக்லாஸ்.

“அல்லாஹ்” யாரென்ற? வினாவுக்கு விடையளிப்பதைப் போன்று மிகத் தெளிவாக அமைந்திருக்கும் இவ்வத்தியாயத் தினை மக்கள் மன்றத்தில் பிரகடனம் செய்யுமாறு தனது துதர் நபி (ஸல்) அவர்களுக்கு இங்கு அல்லாஹ் பணிப்புரை விடுக்கின்றான்.

- நிச்சயமாக அல்லாஹ் ஒருவனே.வணக்க வழிபாடுகளில் அவனுக்கு நிகரானவர் யாருமில்லை.
- படைப்பினங்கள் அனைத்தும் தமது தேவைகளை நிறை வேற்றிக்கொள்ள அவனின் தயவையே நாடவேண்டும்.
- அவன் எவரையும் பெறவுமில்லை. எவராலும் பெறப்படவு மில்லை.அவனே முதன்மையானவன்.அவனுக்கு முன்னர் எதுவும் இருக்கவில்லை.
- அவனது உள்ளமையிலோ அல்லது பண்புகளிலோ அவனுக்கு நிகர் எதுவுமில்லை.ஏனெனில்,அவன் படைப்பாளன்.அவன் அல்லாத அனைத்தும் அவனது படைப்பினங்களாகும்.



மனித சட்டமும் இறைச் சட்டமும்.


நுனுக்கமாகவும் கனகச்சிதமாகவும் அமைந்துள்ள திகைக்க வைக்கும் இப்பிரபஞ்ச ஒழுங்கை உருவாக்கிய படைப்பாளனாகிய அல்லாஹ் ஒருவனால் மாத்திரமே, உயிரினங்களுக்கு மிகப் பொருத்தமான சட்டதிட்டங்களையும் வாழ்க்கை ஒழுங்குகளையும் வழங்க முடியும்.

உலகில் காணப்படும் இயற்கை ஒழுங்கமைப்பில் சிறியள விலேனும் ஒரு கோளாறு ஏற்படுமாயின்,அது நிச்சயம் அழிவுக்கே வழிவகுக்கும்.

மனித வாழ்விற்கு மிகப்பொருத்தமான ஏக ஒழுங்காக, அல்லாஹ் வழங்கிய இஸ்லாமிய மார்க்கமே காணப்படு கிறது. ஒரு தரப்பு மற்றுமொரு தரப்பின் மீது கட்டவிழ்த்து விடும் அத்துமீறல்களிருந்து மனித சமூகத்தை இம்மார்க் கத்தின் மூலமே காக்க முடியும்.

படைப்பினங்களாகிய மனிதன் மற்றும் பிரபஞ்சம் என்ப வற்றிற்கு எது மிகப்பொருத்தமானது என்பதை அறியும் தகைமையும்,திராணியும் படைப்பாளனாகிய அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு.எனும் உண்மையை பின்வரும் அல் குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்: அனைத்தையும் படைத்தவன் அறியமாட்டானா..?அவன் நுணுக்கமாக கவனிப்பவன்.யாவற்றையும் நன்கு அறிந்தவன். (அல்முல்க்: 14).





புரோகிதம் இஸ்லாத்தில் கிடையாது.

ஏனையவர்களுக்கு இல்லாத சமய ரீதியிலான தனிச்சிறப்பியல்புகளை சில தனி நபர்களுக்கு பல்வேறு சமயங்கள் வழங்கியிருக்கும் அதேவேளை, மனிதர்களின் சில வணக்க வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் என்பன இத்தரப்பினரின் பொருத்தப்பாடு மற்றும் இணக்கப்பாடு என்பவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

மேலும், இவர்கள் இறைவன் மற்றும் இறையடியார்கள் என்பவர்களுக்கிடையில் இடைத்தரகர்களாக தொழிற்படுவதோடு,அடியாளர்களுக்கு பாவமீட்சி வழங்குபவர்களாகவும் இருப்பார்கள்.இது மட்டுமல்ல,இன்னும் சில வேலைகளில் மறைவான விடயங்களைக் கூட இவர்கள் அறிந்து கொள் வார்கள் என்றும்,இவர்களுக்கு முரண்பாடாக நடப்பது வாழ்வில் தோல்வி ஏற்படுவதற்கு காரணமாகும்.என்றெல்லாம் அவர்களின் சமயக் கொள்கைக் கோட்பாடுகளுக்கேற்ப மக்கள் நம்புகின்றனர்.

இஸ்லாத்தைப் பொறுத்த வரையில், இவ்வாறான சமயப் ‘‘புரோகிதர்கள்’’. எனும் ஒரு சாரார் கிடையாது.இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் இடையில் இடைத்தரகர் நிலையிலிருக்கிற ஆன்மீக ஆதிக்கத்திலிருந்து மனித இனத்தைப் பாதுகாத்து கௌரவப்படுத்தியுள்ளது.மேலும்,மனித இனத்தின் வெற்றி, பாவமீட்சி,வணக்க வழிபாடுகள் என்பன இடைத்தர கர்கள் நிலை யிலுள்ள இவ்வாறான உயர்ந்த மனிதர்களுடன் தொடர்புப்படுத்தப் பட்டுள்ளன எனும் பிழையான மத நம்பிக்கையை இஸ்லாம் தகர்தெரிந்துள்ளது.

> இஸ்லாத்தைப் பொறுத்த வரையில்,இவ்வாறான சமயப் "புரோகிதர்கள்" எனும் ஒரு சாரார் கிடையாது.இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் இடையில் இடைத்தரகர் நிலையிலிருக்கின்ற ஆன்மீக ஆதிக்கத்திலிருந்து மனித இனத்தைப் பாதுகாத்து கௌரவப்படுத்தியுள்ளது.மேலும்,மனித இனத்தின் வெற்றி,பாவமீட்சி வணக்க வழிபாடுகள் என்பன இடைத்தர கர்கள் நிலையிலுள்ள இவ்வாறான உயர்ந்த மனிதர்களுடன் தொடர்புப்படுத்தப் பட்டுள்ளன எனும் பிழையான மத நம்பிக்கையை இஸ்லாம் தகர்தெரிந்துள்ளது.

இவ்வாறே, சமயம் சார்ந்த அறிவை குறித்ததொரு சாரார் மட்டுமே கற்றுக்கொள்ள முடியும் என கருதும் அறிவுசார் ஆதிக்கத்திலிருந்தும் இஸ்லாம் மனிதனை விடுவித்துள்ளது.


அல்குர்ஆனைக் கற்றுக் கொள்வதையும் சமய ஞானத்தைப் பெறுவதையும் முழு மனித இனத்தினதும் உரிமையாக மட்டுமல்லாது அவர்கள் மீதுள்ள சன்மார்க்கம் சார்ந்த கட்டாயக் கடமையாகவே அல்குர்ஆன் நோக்குவதை பார்க்கலாம்.

எனவே தான், அனைத்து முஸ்லிம்களும் அல்குர்ஆனின் கருத்துக் களை உணர்ந்த நிலையில் அதனைப் பாராயணம் செய்யுமாறும் நடைமுறைப் படுத்துமாறும் அல்குர்ஆன் பணிக்கிறது.

நம்பிக்கையும் வணக்கவழிபாடுகளும் மனிதர்களுக்கும் இறைவனுக்கும் மத்தியில் இடம்பெறும் அம்சங்களாகும்.அவற்றில் எந்தவொரு மனிதனுக்கும் எந்தப் பங்கும் இல்லை என்பதோடு, இடைத்தரகராக செயற்படும் உரிடையும் கிடையாது.ஏனெனில், அல்லாஹ் தனது அடியாளர்களுக்கு மிக நெருக்கமாக இருந்து,அவர்களின் பிராத்தனைகளைச் செவிமடுத்து விடையளிப்பதோடு தொழுகை உள்ளிட்ட பிற வணக்கங்களை உற்று நோக்கி அவைகளுக்கு உரிய கூலிகளையும் வழங்குகின்றான்.

பாவமீட்சி வழங்கும் உரிமை எந்தவொரு மனிதனுக்கும் கிடையாது. எப்போது ஓர் அடியான் இதய சுத்தியோடு அல்லாஹ்விடம் பாவமன்னிப்பை கோரினாலும் அவன் அவ்வடியானின் பாவங்களை மன்னித்து விடுகின்றான். ஏனெனில்,அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்ற போதெல்லாம் அவன் அவனது அனைத்து அடியாளர்களுக்கும் மிக நெருக்கமாகவே இருக்கின்றான்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.நபியே..!என் அடியார்கள் என்னை பற்றி உம்மிடம் கேட்டால்.., நிச்சயமாக நான் சமீபமாக இருகிறேன்.பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு,அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்.அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்து கேட்கட்டும். என்னையே நம்பட்டும் அப்போது அவர்கள் நேர்வழி பெறுவர்.என கூறுவீராக. (அல்பகரா : 186).



அல்லாஹ் தனது அடியார்களுக்கு மிக நெருக்கமாக இருந்து, அவர்களின் பிரார்த்தனைகளைச் செவிமடுத்து விடையளிக்கின்றான்.

**இஸ்லாத்தில் நுழைவதற்கென்று பிரத்தியேக சடங்கு சம்பிரதா யங்கள் ஏதும் உண்டா........?**

இஸ்லாத்தை ஏற்க விரும்பும் ஒருவர்,அதில் நுழைவதற்கென எந்தவொரு சடங்கு சம்பிரதாயங்களும் கிடையாது.மேலும்,இந்நிகழ்வானது குறித்த இடத்தில் குறித்ததொரு மனிதரின் முன்னிலையில் நடைபெற வேண்டும் என்ற அவசியமும் கிடையாது.மாறாக, இஸ்லாத்தை ஏற்க விரும்புபவர் ''கலிமதுஷ் ஷஹாதாவை''அதன் கருத்தறிந்து,அதனை நம்பிய நிலையில் அதன் கருத்துகளுக்கு கட்டுபட்டவராக மொழிந்தால் மாத்திரம் போதுமா னதாகும்.

''கலிமதுஷ் ஷஹாதா'' பின்வருமாறு அமையும்:-

''அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்''.

''உண்மையாக இறைவன் அல்லாஹ்வைத் தவிர, வேறு யாருமில்லை'' என நான் சான்றுபகர்கின்றேன்.

''வஅஷ்ஹது அன்னமுஹம்மதர் ரஸுலுல்லாஹ்''

''முஹம்மத் (ஸல்) அவர்கள் முழுமனித சமூகத்திற்குமான அல்லாஹ் வின் தூதராவார்''எனவும்,அவரது உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு, அவரால் விலக்கப்பட்ட விடயங்களை விட்டு விலகிய நிலையில் அவரது வழி முறையை பின்பற்றி,அல்லாஹ்வை வணங்கியவனாக நான் சான்று பகர்கின்றேன்.



# இறைத்தூதர்கள் என்போர் யார்?



தன்னை வணங்கி வழிபட வேண்டுமென்பதற்காக மனிதர்களை அல்லாஹ் படைத்து அவர்களுக்கு மார்க்கத்தை போதிப்பதற்காக இறைத்தூதர்களையும் அனுப்பி வைத்தான்.

இவர்கள் சிறந்த முன்மாதிரிகளாக திகழ்வதோடு தீமைகளுக்கெதிராகப் போராடி மக்களை நல் வழிப்படுத்தினர்.இதன் விளைவாக, மக்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ளாதிருக்க அவர்களுக்கு எந்தவொரு நியாயமும் இல்லாமல் போய் விட்டது.

இந்த இறைத்தூதர்களின் யதார்த்த நிலை யாது....?

## இறைத்தூதர்கள் மனிதப் பிறவிகளே

அனைத்து இறைத்தூதர்களும் அல்லாஹ்வினால் வஹி மற்றும் இறைத்தூது வழங்கி கௌரவிக்கப்பட்ட மனிதப் பிறவிகள் என்பதை அல்குர்ஆன் அதன் பல்வேறு வசனங்களில் வலியுறுத்துகின்றது.

எமக்கும் நபிமார்களுக்கும் "மனிதன்" என்ற தொடர்பு இருந்த போதிலும் கூட அவர்கள் எம்மைவிட உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்றவர்களாகவே நோக்கப்படுகின்றனர்.ஏனெனில்,இறைத்தூதை மனித சமூகத்திற்கு சுமந்து செல்லும் பாரிய பணியை மேற்கொள்வதற்கு அல்லாஹ் இவர்களையே தெரிவு செய்துள்ளான்.இதனைப் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது."(நபியே..!) நீர் சொல்வீராக "நிச்சயமாக நான் உங்களை போன்ற ஒரு மனிதரே.!நிச்சயமாக உங்கள் இறைவன் ஒருவனே.என எனக்கு வஹி அறிவிக்கப்பட்டுள்ளது". (அல் கஹ்ப் 110).

எனவே,இறைத்தூதரகள் அனைவரும் மனிதர்களே.ஏனைய மனிதர்களைப் போன்று இவர்களும் பிறக்கின்றனர்,இறக்கின்றனர் நோய்வாய்ப்படுகின்றனர். மேலும்,இவர்களின் உடல் உருவாக்கத்திலோ மனிதத் தேவைகளிலோ ஏனைய மனிதர்களை விட இவர்கள் எந்த வகையிலும் வேறுபட்டவர்கள் அல்ல.

இவர்களுக்கு எவ்வித தெய்வீகப் பண்புகளும் கிடையாது.ஏனெனில், இப்பண்புகள் அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியவைகளாகும்.எனினும், இவர்கள் வஹி எனும் இறைச் செய்திகளை மலக்குமார்களினூடாகவோ அல்லது உள்ளுணர்வுகளினூடாகவோ அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொள்ளும் மனிதர்களாவர்.

ஆரம்ப காலச் சமூகங்களைச் சார்ந்தோர் வஹி எனும் இத் தொடர்பை விசித்திரமானதொரு விடயமாகவே நோக்கினர்.இவர்களின் இந்நிலையை அல்லாஹ் வெறுத்ததோடு இதற்கான மாற்று வழி வேறேதும் கிடையாது என்பதையும் தெளிவுபடுத்தினான்.ஏனெனில் அல்லாஹ்வின் வழிகாட்டல்களையும் அவனது மார்க்கத்தின் போதனைகளையும் மனித சமூகத்திற்கு கொண்டு செல்வதற்கு வஹி எனும் வழி முறை மாத்திரமே உண்டு.(யூனுஸ்:02).

> அனைத்து இறைதூதர்களும் அல்லாஹ்வினால் வஹி மற்றும் இறைத்தூது என்பன வழங்கி கௌரவிக்கப்பட்ட மனிதப் பிறவிகள் என்பதை அல்குர்ஆன் அதன் பல்வேறு வசனங்களில் வலியுறுத்துகின்றது.

## இறைத்தூதர்களின் அந்தஸ்து பற்றிய நடுநிலை நோக்கு

இறைத்தூதை சுமந்து செல்வதற்கு அல்லாஹ்வினால் தெரிவு செய்யப்பட்ட மிகச் சிறந்தவர்களான உயர் அந்தஸ்து பெற்ற மனிதர்களே இறைத்தூதர்கள் இவர்களனைவரும் நேர்வழி பெற்ற நல்லவர்கள்,மேலும் அல்லாஹ்வின் விஷேட தேர்விற்கு உள்ளானவர்கள் என்ற வகையில் அகிலத்தார்கள் அனைவரையும் விட மேன்மைப் படுத்தப்பட்டவர்கள்.

இதை பற்றி அல்குர்ஆன் இவ்வாறு விபரிக்கின்றது.(அல் அன்ஆம்: 84 - 87).

இவர்களுள் ஒருவர்,தவறேதும் செய்து விட்டால் அல்லாஹ் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டான். மேலும்,அதற்கு பாவமன்னிப்பு கோருவதற்காக அவருக்கு அதனை உடனடியாகச் சுட்டிக்காட்டுவான். இவர்கள், இத்தவறுகளை வேண்டுமென்றே செய்வதில்லை. சில பிரச்சினைகளுக்கான தீர்வினைப்பெற எத்தணிக்கின்ற போது தான் இவ்வாறான பிழைகள் இவர்களிடமிருந்து ஏற்படுகின்றன.

நபிமார்கள் பற்றி அல்குர்ஆன் மிக நுனுக்கமாக விபரிப்பதை நாம் பார்க்கலாம்.இவர்கள் பற்றிய தரக்குறைவான செய்திகளையோ அல்லது மிதமிஞ்சிய வகையில் உயர்த்திப் பேசும் செய்திகளையோ அதில் காண முடியாது.இவர்கள் பெரும் பாவங்களிலிருந்து பாதுகாக்கபட்டவர்கள்.வேறு சில சமயங்களில் இவர்கள் பல்வேறு தீயகுணங்கள் கொண்டவர்களாக காட்டப்படுவது போல அல்குர்ஆன் இவர்களை நோக்கவில்லை. இவ்வாறான நிலையிலிருந்த போதும் கூட இவர்கள் மனிதர்களே அல்லாமல், கடவுள்களோ அல்லது கடவுளின் பிள்ளைகளோ அல்லர்.இவர்களுக்கு எவ்வித தெய்வீகப் பண்புகளும் கிடையாது.

மறுமை நாளில்,அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் ஈஸா (அலை) அவர்களுக்குமிடையில் நடைபெற இருக்கும் உரையாடலைப் பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.இதிலிருந்து மேற்படி உண்மை புலப்படுவதை நோக்கலாம்.

இவ்வுரையாடல் மூலம்,மனிதர்கள் தனது தூதர் ஈஸா (அலை) அவர்களை வணங்கியமை அவர் செய்த குற்றம் அல்ல என்பதை அல்லாஹ் நிரூபித்து காட்டுவான்.இன்னும் மர்யமுடைய மகன் ஈஸாவே...,அல்லாஹ்வையன்றி "என்னையும்,என் தாயையும் இரு கடவுளாக ஆக்கி கொள்ளுங்கள். என மனிதர்களிடம் நீர் கூறினீரா...? என அல்லாஹ் கேட்கும் போது அவர் "நீ மிகத் தூய்மையானவன். எனக்கு உரிமையில்லாத ஒன்றை நான் சொல்வதற்கில்லை.அவ்வாறு நான் கூறியிருந்தால்,நீ அதை நிச்சயம் அறிந்திருப்பாய், என் மனதில் உள்ளதை நீ அறிகின்றாய். உன் உள்ளத்திலிருப்பதை நான் அறிய மாட்டேன்.நிச்சயமாக நீயே மறைவானவற்றையெல்லாம் நன்கு அறிபவன்"என அவர் கூறுவார். மேலும் "நீ எனக்கு கட்டளையிட்டபடி (மனிதர்களை நோக்கி).எனது இறைவனும் உங்கள் இறைவனும் ஆகிய அல்லாஹ்வையே வணங் குங்கள் என்பதை தவிர வேறு எதையும் அவர்களுக்கு நான் கூறவில்லை. மேலும் நான் அவர்க ளுடனிருந்த காலமெல்லாம் கண்கானிப் பவனாகவும் இருந்தேன். அப்பால் என்னை கைப்பற்றிய பின் நீயே அவர்கள் மீது கண்கானிப்பவனாக இருந்தாய்.மேலும் நீயே அனைத்து பொருட்கள் மீதும் சாட்சியக இருக்கின்றாய்" (அல்மாயிதா : 116, 117).

உதாரணமாக,இப்றாஹீம்,யூசுப். என மட்டுமல்ல, ஓர் அத்தியா யத்திற்கு ஈஸா (அலை) அவர்களின் தாயாகிய மர்யமின் பெயரையே அல்லாஹ் வைத்துள்ளான்.

## இறைத்தூதர்கள் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு என்ன?

அல் குர்ஆன் என்பது முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றிய கதை கள் மற்றும் செய்திகளை மாத்திரம் உள்ளடக்கியதோர் இறைவேதமென சிலர் நினைக்கின்றனர்.

அல் குர்ஆன் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது இறக்கியருளப் பட்டதொரு வேதமாக இருந்தும் கூட அவரது பெயர் ஐந்து இடங்களில் மாத்திரமே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையில் மூஸா (அலை) அவர்களது பெயர் 136 இடங்களிலும் ஈஸா (அலை) அவர்களின் பெயர் 25 இடங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.மேலும் அல்குர்ஆன் ஈஸா (அலை) அவர் களை மிக உயர்ந்த மனிதராக சித்தரிப்பதோடு அவர்கள் பற்றிக் கூறப் படும் பிழையான சந்தேகங்களை விட்டும் தூய்மையானவர் என்றும் குறிப்பிடுகின்றது. இவ்வாறான செய்தி களை அல்குர்ஆனில் பார்க்கும் போது பலர் திகைத்து விடுகின்றனர்.


இது இவ்வாறு இருக்க வேறு சமயங்களைச் சேர்ந்த அதிகமா னோருக்கு அவர்களது நபிமார்கள் தவிர்ந்த வேறு நபிமார்களைத் தெரியாது.மற்றும் சிலர் வேறு நபிமார்களை விரோதிகளாக நோக்கு கின்றனர்.

அனைத்து இறைத்தூதர்களையும் சமமாக நம்பிக்கை கொள்ளாத வரை ஒருவர் முஸ்லிமாக முடியாது. மேலும் அவர்களுள் ஒருரை நிராகரித்தலோ அல்லது அவரது தூதின் நம்பகத் தன்மை பற்றி பிழையான எண்ணங்களைக் கொண்டாலோ அவர் இஸ்லாதை

விட்டு வெளியேறிவிட்டார் என்ற செய்திகளை அல்குர்ஆனில் பல்வேறு வசனங்கள் உறுதிப்படுத்துவதை அதனைப் படிக்கின்ற அனைவரும் புரிந்து கொள்வர்.

எனவே,நபியவர்களும், அவரை நம்பியவர்களும் அல்லாஹ்விடமிருந்து வந்தவைகள் அனைத்தையும் நம்பினார்கள் என அல்குர்ஆன் உறுதிப் படுத்துகின்றது.இதன் காரணமாகவே,அவர்கள் அல்லாஹ்வையும் மலக்கு களையும் இறைத்தூதர்களையும் நம்பினர்.இறைத்தூதர்களை நம்பும் போது அவர்களுக்கு மத்தியில் எவரையும் பிரித்து நோக்கவும் மாட்டார்கள். (அல்பகரா :285).

நபிமார்களின் நாமங்களையே அல்குர்ஆனின் பல்வேறு அத்தியாயங்களுக்கு பெயர்களாக இடப்பட்டுள்ளமையை அல்குர்ஆனை நோக்கும் ஒவ்வொருவரும் புரிந்து கொள்வர்.





# இஸ்லாத்தின் பார்வையில் ஈஸா (அலை) அவர்கள்



மானிட சமூகத்திற்கு தொண்டாற்றிய மகோண்ணத மனித ஆளுமைகளுள் ஒருவராகவே ஈஸா (அலை) அவர்கள் வரலாற்றில் நோக்கப்படுகின்றார்.மக்களுக்கிடையில் இவர் பற்றிய எதிரும் புதிருமாக வித்தியாசமான கருத்துக்களே நிலவுகின்றன.சிலர் இவரை கடவுள் என்றும் மற்றும் சிலர் இவர் கடவுளின் குமாரன் என்றும் கூறும் அதேவேளை மற்றுமொரு சாரார் இவருக்கெதிரான உண்மைக்குப் புறம்பான பிழையான கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் ஈஸா (அலை) அவர்கள் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு என்ன?

1- ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மிக உயர்ந்த உண்ணத இறைத்தூதர்களுள் ஒருவர்.

ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மிக உயர்ந்த உண்ணத இறைத்தூதர்களுள் ஒருவர் என்றும் இவரது தாயார் மர்யம் (அலை) அவர்கள் வாய்மை மிக்க வணக்கசாளியாகவும் பக்குவமும் பவித்ரத் தன்மையும் நிறைந்ததோர் பெண்ணாகவும் இருந்தார்கள் என்றும் அல்குர்ஆன் உறுதிப்படுத்துகின்றது. ஈஸா (அலை) அவர்களை தந்தையின்றி இறை சக்தியின் மூலம் தனது கற்பத்தில் சுமந்தார்கள்.தாயும் தந்தையுமின்றி ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்தது போன்று ஈஸா (அலை) அவர்களையும் அவன் நிலையான இறை அற்புதத்தின் மூலம் படைத்தான்.இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்."அல்லாஹ்விடத்தில் நிச்சயமக ஈஸாவின் உதாரணமாவது ஆதமின் உதாரணம் போன்றாகும்.அவன் அவரை மண்ணிலிருந்து படைத்து பின் "குன்"(ஆகுக) என கூறினான்.அவர் மனிதராகி விட்டார்".(ஆலு இம்றான் : 59)

2- அவரது அற்புதங்களை முஸ்லிம்கள் நம்புவார்கள்.

குஷ்டரோகிகள் மற்றும் குருடர்களை குணப்படுத்துதல், இறந்தோரை உயிர் கொடுத்து எழுப்புதல்,மக்கள் சாப்பிட்டவைகள் மற்றும் அவர்களது வீடுகளில் பதுக்கி வைத்தவைகளைக் கூறுதல் என்பன போன்ற அல்லாஹ்வின் உத்தரவின் அடிப்படையில் அவர் செய்து காட்டிய அனைத்து இறை அற்புதங்களையும் ஒரு முஸ்லிம் நம்புதல் வேண்டும்.

இவ்வற்புதங்கள் அனைத்தும் அவரது "நுபுவ்வத்" மற்றும் தூது என்பவற்றின் நம்பகத்தன்மைக்கான தெளிவான சான்றாதாரங்களாக அல்லாஹ் மாற்றியமைத்தான்.

3- "இன்ஜீல்" எனும் பரிசுத்த இறைவேதம் அவர் மீது இறக்கியருளப்பட்டமை.

மக்களின் நேர்வழிக்காக உயர்ந்த இறைவேதமான "இன்ஜீலை" அல்லாஹ் இவர் மீது இறக்கியருளினான்.என்றும் வரலாற்று நெடுகிலும் இதில் பல்வேறு மாற்றங்களும் திருத்தங்களும் மனிதக் கரங்களால் ஏற்படுத்தப்பட்டன என்றும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

4- ஈஸா (அலை) அவர்கள் மனிதப் பிறவியே.கடவுள் அல்ல.

பனூ இஸ்ராயீல் சமூகத்திற்கு இறைததூதராக அல்லாஹ் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு மனிதரே ஈஸா (அலை) அவர்கள்.மேலும்,அவர் மூலம் பல்வேறு இறை அற்புதங்களை அவன் செய்து காட்டினான்.இதற்கப்பால், அவருக்கு எவ்வித தெய்வீகப் பண்புகளும் கிடையாது என்ற உண்மைகளை அல்குர்ஆன் உறுதிப்படுத்துகின்றது.

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.(ஈஸாவாகிய) அவர்,(நம்முடைய)அடியாரே அன்றி(அவர்தெய்வம்)இல்லை;அவர் மீது நாம் அருள் புரிந்து, இஸ்ராயீலின் மக்களுக்கு அவரை ஓர் உதாரணமாக்கினோம்." அவர் (ஈஸா நம்முடைய) அடியாரே அன்றி வேறில்லை.நாம் அவருக்கு அருட்கொடைகளை சொரிந்து இஸ்ராயிலின் சந்தியினருக்கு அவரை நல்லுதாரணமாக ஆக்கினோம். (அஸ் ஸுஹ்ருப் : 59).

5- ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் அறயப்படவில்லை.விண்ணுலகிற்கே உயர்த்தப்பட்டார்.

இஸ்லாத்தின் பார்வையில்,ஈஸா (அலை) அவர்கள் கொலை செய்யப்படவோ அல்லது சிலுவையில்அறப்படவோ இல்லை.அவரை அல்லாஹ் விண்ணுலகிற்கு உயர்த்தி விட்டான்.

அதாவது,எதிரிகள் அவரை கொலை செய்ய நாடிய பொழுது ஈஸா (அலை) அவர்களின் தோற்றத்தை அல்லாஹ் வேறொருவருக்கு மாற்றி விட்டான். ஈஸா (அலை) அவர்கள் போன்று காட்சியளித்த அந்நபரையே அவர்கள் கொலை செய்து சிலுவையில் அறைந்து விட்டு,ஈஸாவை கொன்று விட்டோம் என்று கூறினர்.ஆனால்,ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் விண்ணுலகிற்கு உயர்த்தப்பட்டார்கள் என்பதே உண்மையாகும்.

இதனையே அல்குர்ஆன் இவ்வாறு ஏற்றுக் கொள்கின்றது.(அந்நிஸா : 157 -158).



## நபிமார்கள்

அல்லாஹ்வின் தூதர்களாக பலர் இருக்கின்றனர். அவர்களில் மிகப்பிரபலமானவர்கள் என்றும் சிலர் உள்ளனர்:

### ஆதம்:-

மனித சமூகத்தின் தந்தை.இவரை அல்லாஹ் மண்ணினால் படைத்து மலக்குகளை இவருக்கு "சுஜூது" செய்ய வைத்தான். மேலும் இவர் சுவனத்திலிருந்து புவிக்கு இறக்கப்பட்டார்.

### நூஹ்:-

இவர் தனது சமூகத்தை அல்லாஹ்வின் பால் அழைத்த போது அவர்கள் இவரை மறுத்தனர்.அப்போது அவர்கள் வெள்ளப் பெருக்கினால் தண்டிக்கப்பட்டனர்.மேலும், இவரும் இவரை நம்பியவர்களும் கப்பலில் ஏறி இவ்வேதனையிலிருந்து தப்பிக் கொண்டனர்.

### இப்றாஹீம்:-

இவர் நபிமார்களின் தந்தை என அழைக்கப்படுகின்றார். ஏகத்துவத்தின் பால் அழைப்புக் கொடுத்த மிக உயர்ந்த இறைத் தூதர்களுள் ஒருவராவார்.முஸ்லிம்களின் கிப்லாவாகிய "கஃபாவை" முதன் முதலாக நிர்மானித்தவர் இவரே ஆவார்.

### இஸ்மாயீல்:-

இவர் இப்றாஹீம் (அலை) அவர்களின் மகனாவார்.கஃபாவை நிர்மானிக்கும் பணியில் தனது தந்தைக்கு உதவியாளராக இருந்தார்.

### இஸ்ஹாக்:-

இவர் இப்றாஹீம் (அலை) அவர்களின் மகனாவார். இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு மலக்குகளால் நன்மாறாயம் கூறப்பட்ட பிறகு இவர் பிறந்தார்.

### யஃகூப்:-

இவர் இஸ்ஹாகின் மகனாவார்.இவரே "இஸ்ராயீல்" என அழைக்கப்படுவதோடு அனைத்து இஸ்ராயீலியச் சமூகத்தவரும் இவரின் பரம்பரையினராகவே கருதப்படுகின்றனர்.

### யூசுப்:-

யஃகூபின் மகனாவார்.இவர் இறைவனால் சோதிக்கப்பட்டதோடு இறுதியில் எகிப்தின் அரசனாக மாறினார்.

### மூஸா:-

பனூ இஸ்ராயீல் சமூகத்தை நோக்கி அல்லாஹ்வால் அனுப்பப் பட்ட மிக உயர்ந்த இறைத்தூதர்களுள் ஒருவர். தௌராத் வேதத்தை அல்லாஹ் இவர் மீதே இறக்கியருளியதோடு இறை அற்புதங்கள் மூலம் அல்லாஹ் இவருக்கு உதவினான். எகிப்திய அரசன் இவரை நிராகரித்த போது அல்லாஹ் அவனை கடலில் மூழ்கடித்ததோடு அல்லாஹ் இவரையும் இவரோடு இருந்தவர்களையும் காப்பாற்றினான்.

### தாவுத்:-

தனது சமூகத்திற்கு அரசராக அல்லாஹ்வால் நியமிக்கப்பட்டதொரு நபியே இவர்.

### சுலைமான்:-

அல்லாஹ்வால் பாரியதோர் அரச சாம்ராஜ்யம் வழங்கப்பட்ட நபியாவார்.பல்வேறு படைப்பினங்கள் இவருக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டன.

### ஸகரிய்யா:-

பனூ இஸ்ராயீல் சமூகத்திற்கு அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபிமார்களுள் ஒருவராவார்.ஈஸா (அலை) அவர்களின் தாயாகிய மர்யமை வளர்த்துப் போசித்தவர்.மேலும்,இவர் மனைவி பிள்ளைப் பாக்கியமற்ற மலடியாக இருந்த போது இவரின் வயோதிப காலத்தில் அல்லாஹ் இவருக்கு "யஹ்யா" எனும் மகனை அருட்கொடையாக வழங்கினான்.

### ஈஸா:-

மிக உயர்ந்த இறைத் தூதர்களுள் ஒருவர்.இவரை அல்லாஹ் தந்தையின்றி தாயிலிருந்து படைத்தான்.மேலும், இவரை அல்லாஹ் பனு இஸ்ராயீல் சமூகத்திற்கு இறைத் தூதராக அனுப்பியதோடு, இவர் மீது "இன்ஜீல்" வேதத்தை இறக்கி வைத்து,பல்வேறு இறை அற்புதங்கள் மூலம் இவருக்கு உதவினான்.

### முஹம்மத்:-

நபிமார்களுள் இறுதியானவர்.இவரை அல்லாஹ் முழு மானிட சமூகத்திற்கும் இறைத்தூதராக அனுப்பியதோடு முன்னரோ பின்னரோ எவ்வித பிழைகளுமற்ற அல்குர்ஆனை இவர் மீது இறக்கியருளினான்.



# இஸ்லாத்தின் இறைத் தூதர் யார்?



இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் பெற்றுவிளங்கும் பெயர்களுல் ஒன்றுதான் முஹம்மத்.இது இஸ்லாத்தின் இறைத்தூதரது பெயராகும்.மக்களால் அதிகளவில் புகழப்படுபவர் என்பதே இதன் பொருளாகும்.

முஹம்மத் என்பவர் யார்.....?

## நபியின் பெயர்:-

முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் இப்னு அப்தில் முத்தலிப் இப்னு ஹாஷிம் அல் குறைஷி.

## மனித சமுகம் அனைத்திற்குமான அல்லாஹ்வின் தூதர்:-

அல்லாஹ் எமது நபி (ஸல்) அவர்களை அனைத்து நிற,இன மக்கள் எல்லோருக்கும் தூதராக அனுப்பி இருக்கின்றான்.

## அல்லாஹ் கூறுகின்றான்:-

“மக்களே! நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன் என (நபியே நீங்கள் கூறுங்கள்.)” (அல்அ.ஃ.றாப்:158)

## நபியவர்கள் மீது அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது:

அல்லாஹ் நபி (ஸல்) அவர்கள் மீது அல்குர்ஆன் எனும் தனது உன்னத வேதத்தை இறக்கியருளினான்.இதில் எந்தவோர் இடத்திலும் பழைகள் இடம்பெறவில்லை.

## முஹம்மத் (ஸல்) அவர்கள் நபிமார்கள் மற்றும் றஸுல்மார்களில் இறுதியனவர்:-

முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லாஹ் நபிமார்களில் இறுதியானவராக அனுப்பி வைத்தான்.அல்லாஹ் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுவது போன்று இவருக்கு பின்னர் எந்த ஒரு நபியும் வரமுடியாது.

“எனினும் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களின் முத்திரையுமாவார்” (அல்அஹ்ஸாப்:40).



## இஸ்லாத்தின் இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை குறித்த சுருக்கப் பார்வை

1.பிறப்பு

கி.பி 570 ஆம் ஆண்டு மக்காவில் தந்தையை இழந்த ஒர் அநாதையாக நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

சிறு வயதில் தாயை இழந்த இவர்கள் தனது பாட்டனார் அப்துல் முத்தலிபின் பராமரிப்பில் வாழ்ந்தார்கள்.அவரின் மரணத்தை அடுத்து அவரின் பெரிய தந்தை அபூதாலிபிடம் வாலிப வயது வரை வளர்ந்தார்கள்.

2.வாழ்வும் வளர்ச்சியும்

நுபுவத்திற்கு முன்னர் (கி.பி 570-610) நாற்பது வருடங்களாக அவருடைய "குறைஷ்" வம்சத்தாரிடையே வாழ்ந்து வந்தார்கள்.அக்காலப்பகுதியில் அவர் பண்பாட்டுக்கும் தனித்துவத்திற்கும் உதாரண புருஷராகத் திகழ்ந்தார்கள்.

அம்மக்களிடையே இவர் "உண்மையாளர்,நம்பிக்கையாளர்" என்ற சிறப்பு பெயர்கள் கொண்டு மிகவும் பிரபல்லியமாக அழைக்கப்பட்டார்கள்.அப்போது இவர்கள் ஆடுகளை மேய்க்கும் இடையராகவும் பின்னர் ஒரு வர்த்தகராகவும் தொழிற்புரிந்து வந்தார்கள்.

இஸ்லாத்திற்கு முன்னர் நபி (ஸல்) அவர்கள் இப்றாஹிம் நபியின் மார்க்கத்தின் அடிப்படையில் தூய முறையில் அல்லாஹ்வை வணங்கி வந்ததோடு,சிலை வணக்கம் மற்றும் அது சார்ந்த ஆனாசாரங்கள் என்பவற்றை மறுதலித்தும் வந்தார்கள்.



3.தூதுப் பணி

நபி (ஸல்) அவர்கள் தனது நாற்பதாவது வயதை நிறைவு செய்த பின்னர் "ஜபலுன் நூர்" (மக்காவிற்கு அண்மையில் உள்ள ஒரு மலை) எனுமிடத்தில் உள்ள "ஹிறா" குகையில் தனிமையில் இருந்து கொண்டு சமூகத்தைப் பற்றி ஆழமாக சிந்தித்து வந்ததோடு அல்லாஹ்வை வணங்கியும் வந்தார்கள்.

இந்நேரமே அல்லாஹ்விடம் இருந்து வஹீ இறங்க ஆரம்பித்ததோடு அல்குர்ஆனின் பின்வரும் முதலாவது இறைவசனம் அவருக்கு இறக்கியருளப்பட்டது."படைத்த உங்கள் இறைவனின் பெயரால் ஓதுவீராக"

இந்த தூது ஆரம்பித்தது முதற் கொண்டு மனித இனத்திற்கான அறிவொளி இறைவழிகாட்டல் என்ற அம்சங்களைக் கொண்ட புதிய ஒரு யுகம் தோன்றி விட்டதாக இவ்வசனம் இங்கு பிரகடனப்படுத்துகின்றது.

பிறகு அல்குர்ஆன் நபியவர்கள் மீது 23 ஆண்டுகளாக தொடர்ந்தேர்ச்சியாக இறக்கியருளப்பட்டது.



4. ஆரம்பக் கட்டப் பிரச்சாரம்

நபி (ஸல்) அவர்கள் தமது பிரச்சாரத்தை மூன்று வருடங்களாக இரகசியமாகவே மேற்கொண்டார்கள்.பின்னர் அதனை பத்து வருடங்களாக பகிரங்கமாக முன்வைத்தார்கள்.

இக்காலப் பகுதியில் நபியவர்களும் அவரது தோழர்களும் அவரது கோத்திரமான குறைஷிகளால் இழைக்கப்பட்ட பல்வேறு வகையான அநியாயம் மற்றும் கொடுமைகளளுக்கு ஆளானார்கள்.

இந்நிலையில் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவிற்கு வரும் மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

இவ்வாறு மதீனாவில் இருந்து வந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதோடு மக்காவிலுள்ள முஸ்லிம்களும் மதீனாவை நோக்கி சிறுகச் சிறுக இடம் பெயர்ந்து செல்ல ஆரம்பித்தனர்.

5. புலப் பெயர்வு (ஹிஜ்ரத்)

நபியவர்கள் தமது 53 வயதினில் அன்று ''யத்ரிப்'' என்று அழைக்கப்பட்டு வந்த மதீனா எனும் நகருக்கு நபியவர்கள் கி.பி 622 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து சென்றார்கள்.

நபியவர்களின் பிரச்சாரத்தை எதிர்த்த குறைஷித் தலைவர்கள் சதி செய்து இவரைக் கொலை செய்ய முயற்சித்த பிறகு தான் நபியவர்கள் மதீனா நோக்கிய இப்பயணத்தை மேற்கொண்டார்கள்.

அங்கு நபியவர்கள் பத்து வருடங்கள் வாழ்ந்தார்கள்.அக்காலப்பகுதியில் இவர்கள் மக்களை இஸ்லாத்தின் பால் அழைத்ததோடு தொழுகை,ஸகாத் உள்ளிட்ட இஸ்லாத்தின் அனைத்து கடமைகளையும் நிறை வேற்றுமாறும் முஸ்லிம்களைப் பணித்தார்கள்.



6. இஸ்லாத்தை பரப்புவதற்கான அவரது முயற்சிகள்

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த பிறகு (622-632) மதீனாவில் இஸ்லாமிய நாகரிகத்துக்கான அடித்தளமிட்டார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் சிறப்பம்சங்களை அவர்களிடையே நிலை நிறுத்தி வர்க்கப்பகைமையினை இல்லாமற் செய்து அறிவொளியைப் பரப்பியதோடு,நீதி, நியாயம்,சகோதரத்துவம்,ஒத்துழைப்பு,ஒழுங்கமைப்பு என்ற அடிப்படையான சமூக கோட்பாடுகளையும் நிறுவினார்கள்.

சில வர்க்கத்தினர் இஸ்லாத்தை தீர்த்துக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற் கொண்டனர்.இதன் விளைவாக பல்வேறு கைகலப்புக்களும்,யுத்தங்களும் இடம்பெற்றன.

ஆனால் அல்லாஹ் அவனது மார்க்கத்த்திற்கும் அவன் தூதருக்கும் உதவி செய்தான்.பிறகு உயர்ந்த இம்மார்க்கத்தை மனபூர்வமாக ஏற்று தெரிவு செய்து,மக்காவிலும் இன்னும் பல நகரங்களிலும் வாழ்ந்த மக்கள் அறபுத்தீபகற்பத்தில் இருந்த பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் என பாரிய அளவில் இஸ்லாத்தில் தொடராக இணைய ஆரம்பித்தார்கள்.

7. மரணம்

நபியவர்கள் தமது தூதினை மக்களுக்கு எடுத்துரைத்து தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பினையும் நிறைவேற்றி இந்த மார்க்கம் எனும் அருட்கொடையை அவர்கள் மீது அல்லாஹ் முழுமைப்படுத்திய பிறகு ஹிஜ்ரி 11ஆம் ஆண்டு ஸபர் மாதம் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள்.

இதன் விளைவாக ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு றபீவுல் அவ்வல் மாதம் திங்கள் பகல் (கி.பி 632.06.08 ஆம் திகதி) இறையடி எய்தினார்கள்.

அப்போது அவரின் வயது 63 ஆகும். மஸ்ஜிதுன் நபவிக்குப் பக்கத்தில் உள்ள ஆயிஷா (றழி) அவர்களின் வீட்டிலேயே அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.






# மிதவாதிகளின் பார்வையில் இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்



நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் வரலாற்றினைப் படிக்கும் (நடுநிலை சிந்தனையுள்ள) மிதவாதிகளில் அவரின் வரலாற்று செய்திகளைப் பார்த்து வியக்காதோர் எவருமில்லை.எனவேதான் கிழக்கத்தேய மற்றும் மேற்குலக அறிஞர்கள், தத்துவஞானிகள், இலக்கியவாதிகள் என பலரும் தங்களது புத்தகங்கள் மற்றும் ஆக்கங்களில் நபியவர்களைப் சிலாகித்து கருத்துரைப்பதை பார்க்கின்றோம்.



(Young India"1924) எனும் பத்திரிகையில் "காந்தி" அவர்கள் பின்வருமாறு கூறிப்பிடுகின்றார்."பல மில்லின் மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம்பிடித்த அந்த (முஹம்மத்) மாமனிதனின் பண்புகளை அறிய ஆவல் கொண்டு படித்த நேரத்தில் இஸ்லாம் இப்பெரும் உயர் நிலை அடைவதற்கு வாள் எவ்விதத்திலும் காரனமாக இருக்கவில்லை.மாறாக, நபியவர்களின் வாய்மை மற்றும் நேர்மையுடன் கூடிய எளிமையான வாழ்வு,தோழர்கள் மீது காட்டிய விசுவாசம் மற்றும் அரப்பணிப்பு இறைவன் மீதும் அவனது தூதின் மீதும் அவருக்கிருந்த அளவில்லாத நம்பிக்கை துணிவு போன்ற அரிய குணங்களே இஸ்லாத்தின் உயர்வுக்கும் நபியவர்கள் எதிர்கொன்ட சவால்களை எதிர் கொள்ளவும் வழிவகுத்தன.


(Young India"1924) எனும் பத்திரிகையில் **"காந்தி"** அவர்கள் பின்வருமாறு கூறிப்பிடுகின்றார்."பல மில்லின் மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பிடித்த அந்த (முஹம்மத்) மாமனிதனின் பண்புகளை அறிய ஆவல் கொண்டு படித்த நேரத்தில் இஸ்லாம் இப்பெரும் உயர் நிலையை அடைவதற்கு வாள் எவ்விதத்திலும் காரணமாக இருக்கவில்லை**"**.

நபியவர்களின் வாழ்வு பற்றிய நூலின் இரண்டாம் பாகத்தினை வாசித்து முடித்ததன் பின்னர், அவரது உயர்நிலை வாழ்வு குறித்து இன்னும் மேலதியமாக கற்றுக் கொள்ள போதிய தகவல்கள் கிடைக்கவில்லையே என்று கவலை அடைந்தேன்.



வரலாற்றில் செல்வாக்கு செலுத்திய நுறு ஆளுமைகளை, சாதனைகள் அடிப்படையில் தரப் படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட (நூறு பேர்) 100) என்ற பிரபல்யமான நூலில் அதன் ஆசிரியர் (Michael H.Hart).(மைகல் ரிசார்ட் ஹார்ட்) என்பவர் முதல் ஆளுமையாக தனது புத்தகத்தில் முஹம்மத் (ஸல்) அவர்களையே குறிப்பிட்டுள்ளார்.இத்தேர்வுக்கான நியாயததன்மை பற்றி பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"வரலாற்றில் செல்வாக்கு செலுத்திய மிகப் பெரும் மனிதர்களின் பட்டியலில் முஹம்மதிற்கு நான் முதலிடம் வழங்கியிருப்பது வாசகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம்.ஆனால், மனித இனவரலாற்றில் ஆன்மீகதுறை,லௌகீகத்துறை ஆகிய இரு துறைகளிலுமே ஏககாலத்தில் சமத ரத்தில் மாபெரும் வெற்றி ஈட்டிய ஒரே மனிதர் இவர் மாத்திரம் தான்."



பிரபலமிக்க பிரான்சிய கவிஞர் "அல்போன்ஸ் டீ லேமாடின்"என்பவர் துருக்கியின் வரலாறு எனும் தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இலக்கு உயர்ந்தவை,இலக்கை அடைவதற்கான வழிமுறைகள் மிக எளிமையானவை,ஆனாலும் அடைவுகள் மிகப்பிரமாண்டமானவை இம்மூன்று விடயங்களும் ஒரு மனிதனின் சாதுரியத்தை அளவிடு வதற்கான உயர்பண்புகளாகும்.(இவை அனைத்தும் முஹம்மதிடம் நிறைவாகக் காணப்பட்டன).எனவே முஹம்மதை எந்தவொரு உயர்ந்த மனிதருடனும் ஒப்பிட்டு பார்க்க முடியுமா....! (பக்கம் 111).



இந்திய தத்துவஞானி ''ராமகிருஷ்னா" என்பவர் இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத்" எனும் நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

வெற்றி தோல்வி,வறுமை செளுமை, அதிகாரம், நலிவு என்று சூழ்நிலைகள் மாறிய போதும் முஹம்மதின் பண்புகள் மாறவில்லை.அதே முஹம்மத் அதே பண்பு களுடனையே வாழ்ந்தார்.(பக்கம் 24).



ஜேர்மனியின் பெருங் கவிஞர் (Johann Wolfgang von Goethe) பின்வருமாறு குறிப்பிடுகின்றார் ''முஹம்மதுக்கு நேர்ந்த சோகம்" எனும் பெயரில் நபியவர்களையும் அவரது வாழ்வையும் பாரியளவில் பேசிப் போற்றும் வகையில் நடாத்தப்பட்ட கவிதை நாடக நிகழ்ச்சியொன்றில் இஸ்லாத்தின் மீது தனக்கிருந்த ஈர்ப்பினைப் பற்றி இவ்வாறு கூறினார் ''அவர் எழுபத்தி ஏழு வயது வரை வாழ்ந்திருந்தாலும் இஸ்லாத்தின் மீதிருந்த ஈர்பானது ஒருபோதும் குறைந்திருக்காது.மாறாக,அது மென்மேலும் வளர்ந்து கொண்டே சென்றிருக்கும்''

பேராசிரயர் ''ஜேம்ஸ் வில்லியம் ஸ்டோபட்'' என்பவர் இஸ்லாமும் அதன் தாபகரும் எனும் தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"மனித இன வராற்றில் முஹம்மத் எனும் ஆளுமைக்கு நிகரான ஒருவரை பெற்றுக்கொள்ள முடியாது.மிகக் குறைந்த பௌதீக வசதிகளுடன் அதிகூடிய பாரியளவிலான அரிய சாதனைகளை நிகழ்த் தியவர் இக்கோணத்தில் வரலாற்றை நோக்கினால் அரேபிய இந்த நபியின் பிரகாசிக்கின்ற பெயரைத் தவிர வேறெந்தப் பொயரையும் நாம் காண முடியாது".(பக்கம் 227).



''சிமோன் ஒக்லி'' என்பவர் ''இஸ்லாமிய சாம்ராஜ் யத்தின் வரலாறு'' எனும் தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இஸ்லாத்தின் பிரச்சாரமோ அதன் பரம்பலோ ஆச்சரி யத்தக்கதொரு விடயமல்ல.காலவோட்டத்தால் கரைந்து போகாமல் ஸ்தீரத்தன்மையோடு அது நிலைத்து நிற்பதும் மக்காவிலும் மதீனாவிலும் முஹம்மத் அன்று ஏற்படுதிய உணர்வலைகள் சற்றும் குறையாது வீரியத்தோடு அல்குர்ஆனை புதிதாகக் கற்றுக் கொண்ட கிருஸ்தவர்க ள்,ஆபிரிக்கர்கள்,துருக்கியர்களின் மனங்களில் இன்றும் இழையோடிக் கொண்டிருப்பதே பேரதிர்ச்சி தரும் விடையமாகும்.(பக்கம் 45).

மக்காவிலும் மதீனாவிலும் நபி (ஸல்) அவர்கள் அன்று ஏற்படுத்திய மகத்தான தாக்கம் புதிதாக அல்குர்ஆனை புரிந்து கொண்ட இந்துக்கள் ஆபிரிக்கர்கள் மற்றும் துருக்கியர்கள் என அனைவர்களது உள்ளங்களிலும் இன்றும் சற்றும் குறையாது பசுமையாகவே காணப்படுகின்றது.



“நாகரிகத்தின் கதைகள்” எனும் பிரபல்யமான தனது நுலில் (Will Durant) என்பவர் பின்வருமாரு குறிப்பிடுகின்றார் “மனிதர்களுக்கு மத்தியில் தாக்கம் செலுத்திய பெரும் ஆளுமைகள் யார்? என்று பார்க்கையில்,வரலாற்றில் மிகப் பெரும் ஆளுமையாக முஹம்மதையே நாம் கூறுவோம். வரன்ட பாலை நிலத்தில் அனல் பறக்கும் சூட்டுக்கு மத்தியில் காட்டுமிராண்டிகளாக வக்கிர குணத்துடன் வாழ்ந்த ஒரு சமுகத்தின் அதல பாதாளத்தில் இருந்த ஆன்மீகப் பண்பாட்டு நிலைகளை மேம்படுத்தும் பொறுப்பினை தன்தோள் மீது சுமந்துகொண்டார்.

வரலாற்றில் இவருக்கு நிகரான மற்றுமொரு சீர்திருத்தவாதி வேறெவருமில்லை,என்று கூறும் அளவுக்கு இவர்,தனது இலக்கை அடைவதில் பெரும் வெற்றி கண்டவர்.இவர் போன்று,தான் நினைத்ததையெல்லாம் சாதித்த வேறொரு சாதனையாளரை நாம் காண முடியாது.

முஹம்மத் தனது பிரச்சாரங்களை துவக்கும் போது, அறபுலகம் சிலை வணக்க அனாசாரங்கள் புரியும் கோத்திரங்களாகவும் குலங்களாகவும் பிளவுற்ற நிலையில் சிறியளவிலான மக்கள் தொகையினரைக் கொண்ட வரண்ட பாலை நிலப் பூமியாகவே காணப்பட்டது.

ஆனால்,அவர் மரணிக்கின்ற போது ஒற்றுமைப்பட்ட ஒரே இனமாக மாற்றப்பட்டனர்.அங்கிருந்த மூட நம்பிக்கைகளும் குலவெறி உணர்வுகளும் பூண்டோடு அழிக்கப்பட்டன. யஹூதிய,கிறிஸ்தவ சமயங்கள் மற்றும் அறபுலகின் பண்டைய சமயங்கள் என்பவற்றையெல்லாம் மிகைத்த பலரும் தெளிவு கொண்ட தேசிய கௌரவத்தை காக்கும் இலகு மார்க்கமாக இஸ்லாம் மாறியது.

முதலாவது தலைமுறையினரின் காலப் பகுதிக்குள்ளேயே நூறு யுத்த களங்களைக் கண்டு வெற்றி வாகை சூடியதோடு, பாரியதொரு பலம் கொண்ட சாம்ராஜியத்தினை கட்டியெழுப்ப முடிந்தது.இது மட்டுமல்ல,இது கால வரையில் இஸ்லாம் உலகின் அரைவாசிப் பகுதியில் பாரிய பலம் கொண்டதொரு சக்தியாக நிலைத்து நிற்கின்றது.

“மனிதர்களுக்கு மத்தியில் தாக்கம் செலுத்திய பெரும் ஆளுமைகள் யார்? என பார்க்கையில், வரலாற்றில் மிகப் பெரும் ஆளுமையாக முஹம்மதையே நாம் கூறுவோம்.

இஸ்லாத்தின் மிகப்பெரிய விரோதியாக இருந்து பின்னர் இஸ்லாத்தைத் தளுவிய “அபூ ஸுபியான்” ஆச்சரியமானதொரு கதையினை நமக்குக் கூறுகின்றார்.அதாவது கி.பி 628 ஆம் ஆண்டு ரோமாபுரியின் மாமன்னர் ‘‘கிரக்குலை’’ இஸ்லாத்தின் பால் அழைக்கும் நோக்கில் நபியவர்களால் எழுதப்பட்ட கடிதமொன்று மன்னனை சென்று அடைந்தது.அதனைப் பெற்றுக்கொண்ட,அவன் வியந்து போய் இந்த இறைதூதரைப் பற்றி நன்கு அறிந்த அறபு நாட்டவர் ஒருவரை தன்னிடம் அழைத்து வருமாறு உத்தரவிட்டான்.இதற்கமைய வியாபார நோக்கில் சிரியா சென்றிருந்த அபூ ஸுபியானும் அவருடைய பரிவாரங்களும் மன்னனின் மாளிகைக்கு அழைக்கப்பட்டனர்.இறைத்தூதரின் நம்பகத்தன்மையை அறிந்து கொள்ளும் நோக்கில்,தனது மொழிபெயர்ப்பாளரின் உதவியைப் பெற்று விவேகத்துடன் கூடிய அறிவுபூர்வமான சில வினாக்கள் இவர்களிடம் மன்னனால் முன்வைக்கப்பட்டன.

மன்னனால் வினவப்பட்ட கேள்விகளுக்கு அபூ ஸுபியானால் வழங்கப்பட்ட பதில்களைச் செவியுற்ற மன்னன் அபூ ஸுபியானை பார்த்து தெரிவித்த கருத்துக்கள் பின்வறுமாறு.

அவருடைய வம்சத்தைப் பற்றி உம்மிடம் கேட்ட போது அவர் உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவர் என்று கூறினீர்.இறைத்தூதர்கள் அவ்வாறான உயர் குலத்தில் தான் தோன்றுவார்கள்.

இவரால் முன்வைக்கப்படும் கருத்துக்களை உமது சமுகத்தில் வேறெவரும் இதற்கு முன்னர் கூறியிருக்கின்றார்களா? என்று கேட்ட போது,இல்லை என்று கூறினீர் அவ்வாறு யாரேனும் இதற்கு முன்பு கூறியிருந்தால் அவரைப் பின்பற்றி இவரும் அக்கருத்தக்களைக் கூறுகின்றார் என்று கூறியிருப்பேன்.

இறைத் தூதை முன்வைக்க முன்னர் இவர் பொய் உரைத்தார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? என்று வினவிய போது,இல்லை என்றே கூறினீர் அவ்வாறாயின் மக்களுக்காகப் பொய் சொல்லாதவர் அல்லாஹ் வுக்காகவும் பொய் உரைக்கமாட்டார்.என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

அவரைப் பின்பற்றுபவர்கள் மக்களில் பெரும் புள்ளிகளா? அல்லது நலிவுற்றவர்களா? என்று கேட்டதற்கு நலிவுற்றவர்கள் என்று கூறினீர் அவ்வாறு நலிவுற்றவர்கள் தான் இறைத் தூதர்களை பின்பற்றுவார்கள்.

அவர்களை ஏற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றதா? அல்லது குறைந்து கொண்டு செல்கின்றதா? என்று கேட்டதற்கு அதிகரித்துக் கொண்டு செல்கின்றது என்று கூறனீர்.அவ்வாறுதான் ஈமான் சார்ந்த விடயங்கள் அதிகரித்து கொண்டே செல்லும்.

அவரை ஏற்றுக்கொண்ட எவரேனும் அவருடைய மார்க்கத்தை வெறுக்கின்றார்களா? என்று கேட்ட போது,இல்லை என்றே கூறனீர். ஒருவரின் உள்ளத்தில் ஈமான் கலந்து விட்டால் அவரின் நிலை அவ்வாறு தான் இருக்கும்.

அவர் மக்களை ஏமாற்றுகின்றாரா? என்று கேட்ட போது,இல்லை என்றீர் உண்மையில் இறைதூதர்கள் ஏமாற்றுபவர்கள் அல்லர்.

அவர் உங்களுக்கு எவ்வாறான விடயங்களை பணிக்கின்றார்? என்று கேட்ட போது அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டும் அவனுக்கு வேறெதையும் இணையாக்கக் கூடாது என்றும் சிலை வணக்கங்கள் செய்யக் கூடாது என்றும் தொழுகை,வாய்மை,கற்பொழுக்கம் என்ப வற்றைப் பேண வேண்டும் என்றும் ஏவுகின்றார் என்று கூறினீர்.

நீர் கூறிய விடயங்கள் அனைத்தும் உண்மையெனில் என்னுடைய கால் பாதங்கள் இரண்டுமுள்ள இந்த இடத்தையும் அவர் அரசாழ்வார். அவ்வாறானதோர் இறைத்தூதர் தோன்றுவார் என்பது எனக்குத் தெரியும். ஆனால்,அவர் உமது சமுகத்தில் வருவார் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை.அவரைச் சென்றடைய முடியுமென்றிருந்தால் சந்திப்ப தற்காக என்னால் முடியுமான அனைத்து முயற்சிகளையும் நான் செய்வேன்.(அல்புகாரி 7).





# இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பண்பாட்டு விழுமியங்கள்



நபி (ஸல்) அவர்கள் மிக உயர்ந்த மனித பண்பாட்டு விழுமியங்களுக்கான உதாரணப் புருஷராக திகழ்ந்தார்கள். கிழக்குலகிலும் மேற்குலகிலும் வாழுகின்ற (நடுநிலை) மிதவாதிகள்,நபியவர்களின் விரோதிகள்உள்ளிட்ட அனைவருமே இதற்கு சாட்சியாளாகளாக உள்ளனர். எனவே தான்,நபி (ஸல்) அவர்கள் மிக உண்ணதமானதொரு பண்பாட்டாளர் என்று அல்குர்ஆன் சிலாகித்துக் கூறுமளவிற்கு பெரும்பேற்றினைப் பெற்றார்.



நபி (ஸல்) அவர்களின் குணநலன்கள் பற்றி அவர் மனைவி ஆயிஷா (ரழி) அவர்களிடம் வினவப்பட்ட போது,இவ்வாறு கூறினார்கள்.''அவரது குணம் குர்ஆனாகவே இருந்தது.'' அதாவது,அல்குர்ஆன் முன்வைக்கும் போதனைகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றின் நடைமுறை விளக்கமாக நபியவர்கள் வாழ்ந்தார்கள் என்பதே இதன் பொருளாகும்.நபியவர்களின் பண்பாடு குறித்த இவரின் இக்கூற்றானது நபியவர்களின் உயரிய பண்பாடுகள் குறித்துக் கூறப்பட்ட மிக நுணுக்கமான வார்த்தைகளாகும்.

நபியவர்களின் பண்பாடு குறித்து,இங்கு மிக சுருக்கமாக நோக்குவோம்.

## பணிவு

நபி (ஸல்) அவர்களை கௌரவப் படுத்தும் நோக்கில்,ஒருவர் அவருக் காக எழும்பி நிற்பதை அவர் விரும்பாதது மட்டுமல்ல, அவ்வாறு செய்யக் கூடாதென்று பிறரைத் தடுத்தும் வந்தார்கள்.நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களை தங்களது உயிரை விடவும் மேலாகி நேசித்திருந்த போதிலும் கூட,நபியவர்கள் வருவதை அவர்கள் காணுகின்ற போது அவருக்காக எழுந்து நின்று மரியாதை செய்யவில்லை.ஏனெனில், இவ்வாறு செய்வதை நபியவர்கள் விரும்ப மாட்டார்கள் என்பதை தெரிந்து வைத்திருந்தார்கள்.(அஹ்மத் 12345).

அறேபிய முக்கியஸ்தர்களுள் ஒரு வராக இருந்த ''அதீ இப்னு ஹாதம்'' என்பவர் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னர் நபியவர்களது அழைப்புப் பணியின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் நோக்கில் நபியவர்களிடம் வந்தார்.அதீ கூறுகின்றார்...

''நான் நபியவர்களிடம் வந்தேன். அப்போது அவருடன் ஒரு பெண்ணும் சில பிள்ளைகளும் அவர்களது தேவைகளை அவரிடம் கூறிக் கொண்டிருந்தனர்.இவ்வாறு தேவை களைக் கூறி முடிக்கும் வரை இவர்களுக்காக நபியவர்கள் நின்றுகொண்டே இருந்தார்கள். (நபியவர்களுடன் இவர்களுக்கு இருந்த நெருக்கத்தைப் பற்றியே இவர் இங்கு குறிப்பிடுகின்றார்).இவர் ''கிஸ்ரா'' அல்லது ''கைஸா'' போன்று நடந்து கொள்ளும் ஒரு மன்னரல்ல என்பதை இதன் மூலம் நான் புரிந்து கொண்டேன். (அஹ்மத் :19381)

> தனது பொருட்களில் குறைகள் ஏற்படின் நபியவர்கள் அவர்க ளாகவே அவைகளை பழுது பார்த்துக் கொள்வார்கள்.மேலும், மனைவியர்களுக்கு தொண்டு செய்வதோடு வீட்டு வேலைகளில் அவர்களுக்கு உதவியும் செய்து வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்திருக்கும் போது அவர்களுள் ஒருவரைப் போன்ற சாமானியமனிதராகவே உட்காந்திருப்பார்கள்.சபையில் அவருக்கென்று பிரத்தி யேகமான தனியிடமேதும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. நபியவர்களைத் தெரியாத ஒருவர் அவர் அமர்ந்திருக்கும் சபைக்கு சமூகமளித்தால் கூட,நபியவர்களுக்கும் அவர் தோழர்களுக்குமிடையில் எவ்வித வித்தியாச வேறுபாட்டையும் கண்டுகொள்ளமாட்டார். எனவே தான்,உங்களில் யார் முஹம்மத் என்று கேட்டே தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. (புஹாரி 63).

வேலைப்பளுவுக்கு மத்தியிலும் கூட,மக்களின் தேவைகள் (அது சிறிய தேவையாக இருப்பினும் சரியே) மற்றும் நலன்கள் என்பவற்றை மிக கரிசணையோடு நிறைவேற்றி வந்தார்கள் என்று நபித்தோழர்கள் குறிப்பிடுகின்றனர்.மேலும், சில சமயங்களில் மதீனாவின் பெண் அடிமைச் சிறுமிகளில் ஒருத்தி நபியவர்களின் கையைப்பிடித்து அழைத்துச் செல்வாள்.அவளின் தேவையை நிறைவேற்றி கொடுப்பதற்காக நபியவர்களை அவள் அழைத்துச் செல்லுமிடமெல்லாம் சென்று வருவார்கள். (அல்புஹாரி 5724).

உமர் (ரழி) அவர்கள் ஒரு முறை நபியவர்களிடம் சென்றார்கள்.அப்போது நபியவர்களின் மேனியில் பாயின் அடையாளங்கள் பதிந்திருந்ததைப் பார்த்து அழுதார்கள்.ஏன் அழுகிறீர்கள் என உமர்(ரழி) அவர்களைப் பார்த்து நபியவர்கள் கேட்டார்கள்.அதற்கு உமர் (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! கிஸ்ராவும் கைஸரும் உலக சுகபோகங்களில் புரண்டு கொண்டிருக்கின்ற போது அல்லாஹ்வின் தூதராகிய நீங்கள் மாத்திரம் ஏன் இவ்வாறு இருக்கின்றீர்கள்? அதற்கு நபியவர்கள், இவ்வாறு பதிளலித்தார்கள். “அவர்களுக்கு இவ்வுலகமும் நமக்கு மறுமையும் கிடப்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?” (அல்புஹாரி 4629).

தனது பொருட்களில் குறைகள் ஏற்படின் நபியவர்கள் அவர்களாகவே அவைகளை பழுது பார்த்துக் கொள்வார்கள்.மேலும், மனைவியர்களுக்கு தொண்டு செய்வதோடு வீட்டு வேலைகளில் அவர்களுக்கு உதவியும் வந்தார்கள்.வீட்டில் அவர்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பது பற்றி அவர் மனைவி ஆயிஷா (ரழி) அவர்களிடம் வினவப்பட்ட போது பின்வருமாறு பதிலுரைத்தார்கள்.

“மனைவியர்களுக்கு தொண்டு செய்வார்கள்” (புஹாரி 644).

“உங்களில் ஒருவரைப் போன்றே பாதணியை தெய்த்துக் கொள்வார்கள்.மேலும்,ஆடைகள் கிழிந்தால் அவைகளுக்கு அவரே ஒட்டுப் போட்டுக் கொள்வார்கள்.என்று ஆயிஷா (ரழி) அவர்கள் கூறினார்கள்.(அஹ்மத் 24749).

“எவனது உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை இருக்குமோ அவன் சுவனம் நுழைய மாட்டான்.” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ((முஸ்லிம் 91).

அன்பு

“அன்பு வைப்பவர்கள் மீது அன்பாளனான அல்லாஹ் இரக்கம் காட்டுவான். மண்ணில் உள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள்.வின்னில் உள்ளவர்கள் உங்கள் மீது இரக்கம் காட்டுவார்கள்.”என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 4941).

நபியவர்களின் கருணையானது,வாழ்வின் பல்வேறு துறைகளிலும் வியாபித்து காணப்பட்டது.

சிறுவர்களுடனான அன்பு

- தொழுகையானது பேசுவதையோ அல்லது அதிகமான தேவையற்ற அசைவுகளை மேற்கொள்வதையோ அனுமதிக்கப்படாத இஸ்லாத்தின் மிகப் பெரும் கடமைகளுள் ஒன்றாகக் கருதப்படும் வணக்கமாக இருந்தும் கூட, நபி (ஸல்) அவர்கள் தனது பேத்தியான “உமாமா” எனும் குழந்தையை சுமந்த நிலையில் ஒருமுறை தொழுதார்கள்.அதாவது சுஜூதுக்கு செல்லும் போது குழந்தையை தரையில் வைப்பார்கள்.நிலைக்கு வந்து விட்டால் குழந்தையை சுமந்துகொள்வார்கள்.(புஹாரி 494).

- நபி(ஸல்) அவர்கள் தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும் போது,சிறு பிள்ளைகளின் அழுகை சப்தங்களை செவியுற்றால் மிக வேகமாக தொழுகையை முடித்து விடுவார்கள்.இது பற்றி நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.“நான் தொழுகையில் ஈடுபட்டிருக்கும் போது மிக நீண்ட நேரம் தொழ வேண்டும் என்று நினைப்பேன்.அந்நேரத்தில் சிறு பிள்ளைகள் அழும் சப்தத்தை கேட்டால் பிள்ளைகளின் தாய்மார்களுக்கு இதன் மூலம் கஷ்டத்தை ஏற்படுத்துவதை வெறுத்தவனாக எனது தொழும் நேரத்தை சுருக்கிக் கொள்வேன்.”(புஹாரி 675).



“ நலிவுற்றோருக்கு உதவி உபகாரம் புரிவது வெற்றிக்கும் அபிவிருத்திக்கும் காரணமாக அமைந்து விடுகிறது என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்


## பெண்களின் மீதான அன்பு

- பெண் பிள்ளைகளை நல்ல முறையில் பராமரித்து,வளர்ப்பதை நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.அதனைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.“எவர் ஒரு பெண் பிள்ளையையோ அல்லது பல பெண்பிள்ளைகளையோ பாக்கியமாகப் பெற்று,அவர் அவர்களை நல்ல முறையில் ஒழுக்கமாக வளர்த்தால் அப்பெண்பிள்ளைகள் அவருக்கு நரகத்தை விட்டு பாதுகாக்கும் திரையாக மாறி விடுவார்.” (புஹாரி 5649).

- மேலும், மனைவியின் உரிமைகளைப் பேண வேண்டும் என்றும் அவளின் வாழ்க்கை விவகாரங்கள் மற்றும் அவள் இருக்கும் சூழ்நிலைகள் என்பனவற்றை கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் நபி (ஸல்) அவர்கள் பலமான கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.இன்னும், இது தொடர்பாக ஒருவருக்கொருவர் பரஸ்பரமாக உபதேசித்து கொண்டிருக்க வேண்டுமென்றும் முஸ்லிம்களைப் பணித்துள்ளார்கள். இது பற்றி நபியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். “பெண்களுடன் சிறந்த முறையில் நடந்து கொள்ளுங்கள்.நீங்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு அறிவுரை கூறிக் கொண்டே இருங்கள்.” (புஹாரி 4890).

- குடும்ப அங்கத்தவர்களோடு மிக அன்பாக நடந்து கொள்ள வேண்டும் எபதற்கு நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த முன்மாதிரிகளை வழங்கியுள்ளார்கள். தனது மனைவி சபிய்யஹ் (ரழி) அவர்கள் ஒட்டகத்தில் ஏறிப் பயணிக்க வேண்டு என்பதற்காக நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்திற்கு பக்கத்தில் உட்கார்ந்து,தனது முழங்காலை மடக்கி வைத்து அதன் மீது தனது மனைவி சபிய்யஹ் (ரழி) அவர்கள் தனது காலை வைத்து ஏறுவதற்கு உதவினார்கள்.(புஹாரி 2120).

- தனது மகள் பாத்திமா (ரழி) அவர்கள் நபியவர்களை சந்திக்க வந்த போது எழுந்து சென்று, அவரின் கையைப் பிடித்தவாறு முத்தமிட்டு அழைத்து வந்து தனது இருப்பிடத்தில் அமரச் செய்தார்கள்.(அபூதாவுத் 5217).



## நலிவுற்றோர் மீதான அன்பு

- அநாதைகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று மக்களை நபி (ஸல்) அவர்கள் தூண்டியிருக் கின்றார்கள்.நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நானும் ஆநாதையை ஆதரிப்பவனும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என தங்களது ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் இணைத்துக் காட்டியவாறு கூறினார்கள்". (அல் புகாரி : 4998)

- "விதவைகள் மற்றும் ஏழைகளைக் கவணித்துக் கொள்பவர், அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்பவர் போன்றவர்.மேலும் பகலில் நோன்பு நோற்று இரவில் நின்று வணங்குபவர் போன்றவர் ஆவார்". என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(அல் புகாரி : 5661).

- சமூகத்திலுள்ள நலிவுற்றோர் மீது அன்புகாட்டுவதும் அவர்களின் உரிமைகளை அவர்களுக்கு வழங்குவதும் எதிரி களை வெற்றிகொள்வதற்கும் அல்லாஹ் வின் உதவி கிட்டவும் வாழ்வாதார வசதிகள் கிடைக்கவும் காரண மாக அமையுமென நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "உங்களிடையே உள்ள நலிவுற்றவர்களின் மூலமே நீங்கள் வாழ்வாதார வசதிகளையும் அல்லாஹ்வின் உதவிகளையும் பெறுகின்றீர்கள்."(அபூ தாவூத் : 2594)

## நீதி

- அல்லாஹ்வின் உத்தரவிற்கிணங்க, மிக நெருக்கமான உறவினர்களுக்குக் கூட அல்லாஹ்வின் சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கி, நீதியை நிலை நாட்டும் ஒருவராகவே நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள். அல்லாஹ் கூறுகின்றான். விசுவாசங் கொண்டோரே! (நீங்கள் சாட்சி கூறினால், அது) உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோருக்கோ,அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருந்த போதிலும், நீதியை நிலை நிறுத்தியவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுப வர்களாக இருங்கள். (சாட்சி கூறப்படும்).(அந்நிஸா : 135).

- உயர் குலத்தைச் சார்ந்த ஒரு பெண் திருடியதற்காக அவளுக்கு தண்டனை நிறைவேற்றப் படக் கூடாது என்று அவளுக்கு பரிந்து பேசுவதற்காக நபி (ஸல்) அவர்களிடம் சில நபித்தோழர்கள் வந்த நேரத்தில், நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "என் உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது ஆணையாக முஹம்மதின் மகள் பாதிமா திருடினால் கூட அவளின் கையையும் நான் துண்டித்து விடுவேன்". (அல் புகாரி: 4053)

- வட்டி மக்கள் மீது ஹராமாக்கப்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் அவரது நெருக்கமான உறவினர் (சாச்சா) "அல் அப்பாஸ்" மூலமே வட்டியை தடுக்க ஆரம்பித்தார்கள். நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:"நான் தடுத்த முதல் வட்டி, அல்அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிபினது வட்டியையே ஆகும். ஏனெனில், இதுவே அனைத்து வட்டிகளையும் இல்லாமற்செய்து விட்டது".(முஸ்லிம்: 1218).

- பலவீனமான ஒருவர் தனது உரிமையை பலசாலியிடமிருந்து எவ்விதப் பயமோ தயக்கமோ இன்றி பெறுவதானது,ஒரு சமூகத்தின் நாகரீக வளர்ச்சியை அளவிடும் ஓர் அம்சமாகக்

கருதப்பட்டது.நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எந்த சமூகத்தில் நலிவுற்றவர் தனது உரிமையை எவ்விதக் கலக்கமுமின்றிப் பெற்றுக் கொள்ளவில்லையோ,அச்சமூகம் தூய்மைப் படுத்தப்படமாட்டாது”.(இப்னு மாஜா : 2426).

## உதவுதலும் வள்ளல் தன்மையும்

- ஒரு தடவை ஒருவர் நபியவர்களிடம் வந்து ஏதாவது தருமாறு கேட்டார். அதற்கு நபியவர்கள் “தற்பொழுது என்னிடம் எதுவுமில்லை,ஆனால், எனது பெயரில் நீ விரும்பியதை வாங்கிக்கொள்,எனக்கு ஏதாவது கிடைத்தால், நான் அதனைச் செலுத்தி விடுவேன்” என்று கூறினார்.இதனைக் கேட்ட உமர் (றழி) அவர்கள் “அல்லாஹ்வின் தூாரே! உங்களுக்கு இயலாத விடயத்தை உங்களுக்கு அல்லாஹ் விதியாக்கவில்லையே”என்று நபியவர்களைப் பார்த்துக் கூறினார்கள்.அப்போது அந்த மனிதர் “வறுமையைப் பயப்படாது தருமமாக பணத்தை செலவு செய்யுங்கள்.அர்ஷின் சொந்தக்காரனான இறைவன் செல்வத்தைக் குறைத்துவிட மாட்டான்”என்று கூறிய போது, நபியவர்கள் புன்முறுவல் செய்தார்கள்.அவரின் முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளம் தென்பட்டது.(அல் அஹாதிதுல் முக்தாராத் : 88).

- ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் எண்பதாயிரம் திர்ஹம்களைப் பெற்றுக் கொண்டார்கள்.அவைகளை ஒரு விரிப்பின் மேல் வைதார்கள். பின்னர் அவை அனைத்தையும் பிரித்து தர்மம் செய்து விட்டார்கள். முழுப்பணமும் பங்கிட்டுத் தீரும் வரை கேட்டு வந்த எவரும் வெறுங்கையுடன் எதுவுமின்றி திருப்பி அனுப்பப்படவில்லை. (அல் ஹாகிம் : 5423).

> நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்வில் சொத்து செல்வங்களை சேகரித்து வைத்ததாக எந்தவொரு வரலாற்று மூலங்களும் குறிப்பிடவில்லை.

## பொறுமையும் சகிப்புத் தன்மையும்

- “தாயிப்” மக்களை அல்லாஹ்வின் பால் அழைப்பதற்காக சென்று,அங்கு பல்வேறு இன்னல்களுக்கும் ஆளாகிய நிலையில் கவலையோடு நபிகள் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி திரும்பி வருகின்ற போது,அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு மலக்கு அவரிடம் வந்து,தாங்கள் விரும்பினால் உங்களோடு மிக மோசமாக நடந்து கொண்ட இந்த மக்களை அழித்தொழிப்போம்.இது பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் என்று கேட்டார்.அதற்கு நபியவர்கள் “அல்லாஹுக்கு இணைகற்பிக்காத நிலையில் அவனை மாத்திரம் வணங்கி வழிபடக் கூடிய நல்லதொரு தலைமுறையினரை இவர்களின் மூலம் அல்லாஹ் உருவாக்குவான் என்று ஆதரவு வைக்கின்றேன்”என்று கூறினார்கள்.(அல் புகாரி : 3059).

- முரட்டுத்தனமான கிராமப்புற அறபியொருவர் ஒரு தடவை நபியவர்களிடம் வந்து,கழுத்தில் காயம் ஏற்படுமளவிற்கு அவரின் போர்வையை மிகப் பலமாக இளுத்தவாறு,நபியவர்களை பார்த்து ''உங்களிடமுள்ள அல்லாஹ்வின் சொத்துக்களிலிருந்து எனக்கும் தருமாறு உங்களது தோழர்களுக்குக் கூறுங்கள்'' என்று சப்தமிட்டு கூறினார்.இவரின் முரட்டுத்தனமான செயலைப் பார்த்த நபித் தோழர்கள் கோபத்தால் கொதித்தனர்.ஆனால், நபி (ஸல்) அவர்களோ பொன்முறுவல் பூத்தவராக முஸ்லிம்களின் ''பைதுல் மால்'' நிதியிலிருந்து இவருக்கும் உதவி வழங்குங்கள் என்று கோபத்தோடு இருந்த நபித்தோழர்களைப் பார்த்து பணிப்புரை வழங்கினார்கள்.(அல் புகாரி: 2980).

பற்றற்ற வாழ்வு

- பின்வரும் திருமறை வசனத்தை ஒட்டியதாகவே நபி(ஸல்) அவர்களின் வாழ்வு எப்போதுமே காணப்பட்டது."இன்னும் அவர்களின் சில பிரிவினர் இன்பம் அனுபவிக்க கொடுத்திருக்கும் வாழ்க்கை வசதிகளின் பால் உமது கண்களை நீட்டாதீர்.இவை எல்லாம் அவர்களை சோதிப்பதற்காகவே நாம் கொடுத்துள்ள உலக வாழ்க்கையின் அலங்காரங்காரங்ளாகும்.உமது இறைவன் (மறுமையில் உமக்கு) வழங்கவிருப்பது சிறந்ததும்,நிலையானதுமாகும். (தாஹா : 131)

- ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் பாயின் மீது, விரிப்பு ஏதுமின்றி உறங்கிக் கொண்டிருக்கும் வேளை இரண்டாம் கலீபா உமர் (ரழி) நபியவர்களிடம் சென்றார்கள்.அப்போது பாயின் அடையாளங்கள் நபியவர்களின் மேனியில் பதிந்திருப்பதைப் பார்த்தார்கள்.மேலும், உமர் (ரழி) அவர்கள் கூறுகின் றார்கள்.''நபியவர்களின் வீட்டை முழுமையாக உற்று நோக்கினேன். எனது கவனத்தை ஈர்க்கும் வகையில் அங்கு எதுவும் இருக்கவில்லை. அப்போது நபி (ஸல்) அவர்களை நோக்கி நான் இவ்வாறு கூறினேன். ''உரோமர்களும் பாரசீகர்களும் அல்லாஹ்வை வணங்கி வழிபடாத நிலையிலும் கூட,உலக வளங்கள் நிறைவாக வழங்கப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலை உங்களது சமூகத்தினருக்கும் ஏற்பட வேண்டும் என அல்லாஹ்வை பிரார்த்தியுங்கள்.அதற்கு நபியவர்கள் ''உமரே! நீங்கள் இன்னும் சந்தேகத்திலா இருக்கின்றீர்கள்? அச்சமூகம் மறுமைக்கு முன்னர்

> "மரநிழலில் சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு அதனை விட்டுச் செல்லும் ஒரு பயணி போன்றவனாகவே நான் உள்ளேன்.இது தவிர எனக்கும் இவ்வுலகிற்குமிடையில் வேறு தொடர்புகள் ஏதும் கிடையாது''.என நபியவர்கள் கூறுவார்கள்.

இவ்வுலகிலேயே நல்ல வளங்களைப் பெற்று வாழ்பவர்கள். (அங்கு அவர்களுக்கு இவைகள் கிடையாது.) என்று பதிலுரைத்தார்கள்.(புஹாரி: 2336).

- “மரநிழலில் சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு  அதனை விட்டுச் செல்லும் ஒரு பயணி போன்றவனாகவே நான் உள்ளேன்.இது தவிர எனக்கும் இவ்வுலகிற்குமிடையில் வேறு தொடர்புகள் ஏதும் கிடையாது”. என நபியவர்கள் கூறுவார்கள். (திர்மிதி: 2377).

- ஒரு மாதம் இரண்டு மாதம் என்றவாறு மூன்று மாதங்கள் கழிந்து விடும். ஆனால்,நபியவர்களின் வீட்டில் அடுப்பு எரிக்கப்படமாட்டாது.ஈத்தம் பழம் மற்றும் தண்ணீரை மாத்திரமே உணவாக உட்கொள்வார்கள்.(புஹாரி: 2428)

சிலபோது,நாள் முழுவதும் பசியோடு இருப்பார்கள்.பசியாறுவதற்கு பழுதடைந்த ஈத்தம் பழத்தைத் தவிர வேறேதுவும் இருக்காது.(முஸ்லிம் : 2977).

நபி(ஸல்) அவர்கள் தனது மரண பிரியும் வரை,தொடராக மூன்று நாட்கள் கோதுமை உரோட்டியைக் கூட வயிறு நிறையச் சாப்பிட்டதில்லை.அவர் உணவாக உட்கொண்ட அதிகமான உரோட்டிகள் வாற்கோதுமையினாலேயே செய்யப்பட்டிருந்தன.(முஸ்லிம் : 2976)



## வாக்கு நிறைவேற்றுதல்

- வாக்குறுதியை நிறைவேற்றுவதானது மிக உயர்ந்த பண்புகளில் ஒன்றாகும். அவசியம் நிறைவேற்றப்படவேண்டிய நிலையிலல்லாத போது கூட,இதனை நிறைவேற்றும் பண்பானது குறித்த நபர் பற்றிய நல்லெண்ணத்தை உள்ளத்திலே அதிகரிக்கச் செய்கிறது.

இது நபியவர்களின் பண்பாக காணப்பட்டது.எனவே தான்,நபி (ஸல்) அவர்கள் தனக்கு உதவி செய்கிற ஒருவருக்கு கைமாறு செய்யும் போது தான் பெற்ற உதவியை விட பெரியளவு உதவியையே செய்து வந்தார்கள். இவ்வாறான உபகாரங்கள் செய்ய வேண்டுமென்ற உடன்படிக்கைகள் இல்லாத போதும் கூட,நபியவர்கள் மேற்குறித்த பண்பாட்டுடன் நடந்து கொண்டார்கள் என்ற நிலை இருப்பின் அவ்வாறு செய்ய வேண்டுமென்ற உடன்பாடுகளுடன் இருக்கின்ற நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?.

- அவர் மோசடியில் ஈடுபடுவாரா? என்று குறைஷிக் காபிர்களிடம் நபியவர்களின் பண்புகள் குறித்து கிறிஸ்தவ மன்னன் ஹிரக்கல் வினவிய போது அவர்கள் இல்லையென பதில் கூறினார்கள்.அதற்கு அம்மன்னன் அவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறினான்.“இவ்வாறே இறைத்தூதர்கள் மோசடியில் ஈடுபட மாட்டார்கள்.” (புஹாரி 7).

- தனது முதல் மனைவி கதீஜாவோடு மிகவும் விசுவாசமாக நடந்து கொண்டார்கள்.மேலும், அவரின் பங்களிப்புக்களை மிக உயர்வாக ஏற்றுக் கொண்ட நிலையில் அவரை மதித்ததோடு அவரின் உறவினர்கள் மற்றும் தோழிகளை கௌரவப்படுத்தியும் வந்தார்கள்.



மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் கட்டிய பள்ளிவாயிலே “மஸ்ஜிதுன் நபவி” எனப்படுகின்றது.மக்காவிற்குப் பிறகு இரண்டாவது மிக முக்கிய புனித நகராக மதீனா காணப்படுகின்றது.நபி (ஸல்) அவர்கள் இந்நகரை நோக்கி புலம்பெயர்ந்து சென்று தனது பள்ளியை நிறுவியதோடு அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.வருடாந்தம் மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் இப்பள்ளியை தரிசித்து வருகின்றன.

- இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் மரணமடைந்த நபியவர்களின் முதல் மனைவி கதீஜா (ரழி) அவர்களை நபியவர்கள் எவ்வளவு தூரம் நன்றியுணர்வோடு நினைவு கூருவார்கள் என்பது பற்றி கதீஜாவைத் தெரியாத ஆயிஷா (ரழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.‘‘நபி (ஸல்) அவர்கள் கதீஜாவை அதிகம் நினைவு கூருவார்கள்.ஆடுகளை அறுக்கின்ற போது அவைகளைத் துண்டுகளாக வெட்டி அவற்றின் சில பகுதிகளை கதீஜாவின் தோழிகளுக்கு அனுப்பி வைப்பார்கள்.சில போது, நபியவர்களைப் பார்த்து நான் இவ்வாறு கூறுவேன்.‘‘கதீஜாவை விட்டால் உங்களுக்கு இவ்வுலகில் வேறு பெண்களே கிடையாதா? அப்போது இவ்வாறு இவ்வாரெல்லாம் கதீஜா நல்ல முறையில் நடந்திருக்கிறார்கள் என்று நபியவர்கள் அவரின் தனிச்சிறப்பியல்புகள் பற்றி பிரஸ்தாபிப்பார்கள்.(புஹாரி 3607).

- நஜாஷி மன்னனின் தூதுக் குழுவொன்று நபியவர்களிடம் ஒருமுறை வந்த போது,நபியவர்கள் அவர்களுக்கு பணிவிடை செய்வதற்காக எழுந்து சென்றார்கள் அப்போது நபித்தோழர்கள்,அவர்களை நாங்கள் கவனித்து கொள்கிறோம் என்று கூறினர்கள்.அதற்கு நபியவர்கள் இவர்கள் எனது தோழர்களோடு கனிவுடன் நடந்து கொண்டவர்கள் எனவே நானாகவே இவர்களுக்க கைமாறு செய்ய விரும்புகிறேன்.’’ என்று கூறினார்கள். (சுஅபுல் ஈமான்: 8704).

அல்லாஹ்வின் உத்தரவிற்கிணங்கவும் தனக்கு முன்னாலுள்ள நபிமார்களை அடியொட்டியும் வாழ்ந்ததன் விளைவாக நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்வின் சகல துறைகளிலும் பண்பாட்டின் சிகரமாக விளங்கினார்கள்.





# நபி (ஸல்)அவர்களின் பொன்மொழிகள்



முஸ்லிம்கள் நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகளைக் கேட்டும் எழுதியும் எடுத்துரைப்பதில் அதிகூடிய கவனம் செலுத்தியுள்ளதோடு,ஹதீஸ் துறை அறிஞர்கள் நபியவர்களின் பொன் மொழிகளை பதிவு செய்து பாதுகாப்பதில் போட்டி மனப்பான்மையுடன் நடந்து கொண்டார்கள்.

தகவல்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்தல்,உண்மையான மற்றும் போலியான தகவல் களுக்கிடையில் காணப்படும் வேறுபாட்டினை புரிந்து கொள்ளல்,அவைகளில் காணப்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் என்பவற்றில் உள்ள மிக நுனுக்கமான விபரங்களையும் அவைகளோடு தொடர்புடையவைகள் மற்றும் தொடர்பற்றவைகள் உள்ளிட்ட அம்சங்களையும் புரிந்து கொள்ளல் போன்ற பல்வேறு விடயங்களில் உலகிற்கு ஆச்சரியம் மிக்க ஒழுங்கு முறைமைகளை இவர்கள் முன்வைத்துள்ளனர்.

நபி (ஸல்)அவர்கள் கூறிய சில பொன்மொழிகள் வருமாறு :

- நிச்சயமாக செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்ததே.ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர் நாடியவைகளுக்கு கூலி உண்டு (அல் புகாரி :1).
- அழகிய குணங்களே நற்கருமங்களாகும்.உமது உள்ளத்தில் உறுத்தலை (குற்ற உணர்வை) ஏற்படுத்துகின்ற,மக்கள் கண்டுவிடுவார்களோ என்று நீர் வெறுக்கின்ற விடயங்களே பாவ காரியங்களாகும்.(முஸ்லிம் :2535).
- எங்கிருந்தாலும் அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள்.தீமையைச் செய்து விட்டால்,அதனை அழித்துவிடுகின்ற ஒரு நல்ல காரியத்தைச் செய்து விடுங்கள். மேலும்,மக்களுடன் நற்குணத்துடன் பழகிக்கொள்ளுங்கள் (திர்மிதி :1987).
- உலகில் பற்றற்ற நிலையில் வாழுங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான். மக்களிடம் உள்ளவைகளை விட்டு (தேவையற்ற நிலையில்) விலகி வாழுங்கள் அவர்கள் உங்களை நேசிப்பார்கள்.(இப்னு மாஜஹ் :4102).
- எனக்கும் முன்பு வாழ்ந்த நபிமார்களுக்குமிடையே உள்ள உதாரணமாகிறது,ஒரு மனிதனைப் போன்றாகும்.அவர் ஒரு வீட்டை மிக அழகாக கட்டி விட்டு,(அதன் ஓர் மூலையில்) செங்கல்லொன்றை வைக்குமிடத்தை மாத்திரம் காலியாக விட்டு வைக்கின்றார்.அவ்வீட்டை மனிதர்கள் சுற்றிப்பார்த்து வியந்தவர்களாக ‘‘இவ்விடத்தில் ஒரு செங்கல் வைக்கப்பட்டிருக்க வேண்டுமே!’’ என்று கூறுகின்றனர். ‘‘நானே அச்செங்கல் ஆவேன்,மேலும்,நானே நபிமார்களின் முத்திரையாவேன்’’ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அல் புகாரி: 3342).
- இறைவிசுவாசிக்கு ஏற்பட்ட உலக கஷ்டங்களுள் ஒன்றை யாராவது நீக்கினால்,மறுமை நாளில் அவரது கஷ்டங்களுள் ஒன்றை அல்லாஹ் நீக்குவான். சிரமத்திற்குள்ளான ஒருவனுக்கு யாராவது இலகுவை ஏற்படுத்தினால்,உலகிலும் மறுமையிலும் அவருக்கு ஏற்படும் கஷ்டங்களை அல்லாஹ் இலகு படுத்துகின்றான்.ஒரு முஸ்லிமின் குறையை யாராவது மறைத்தால்,உலகிலும் மறுமையிலும் அல்லாஹ் அவனின் குறையை மறைக்கின்றான்.ஓர் அடியான் தனது சகோதரனுக்கு உதவிசெய்து கொண்டிருக்கும் காலமெல்லாம் அவனுக்கு



‘‘ எமது சிறார்களுக்கு இரக்கம் காட்டாதவர்களும் பெரியவர்களுக்கு மரியாதை செய்யாதவர்களும் எம்மைச் சார்ந்தவர்களல்லர். (திர்மிதி :1920)



“

ஈமான் கொள்ளாத வரை நீங்கள் சுவனம் நுழைய மாட்டீர்கள். ஒருவரையொருவர் பரஸ்பர அன்பு கொள்ளாத வரை நீங்கள் ஈமான் கொள்ள மாட்டீர்கள்.உங்களுக்கு மத்தியில் பரஸ்பர அன்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு விடயத்தை உங்களுக்குச் சொல்லித்தரட்டுமா? என்று வினவிய நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: “ உங்களுக்கு மத்தியில் ஸலாத்தைப் பரப்புங்கள்”

அல்லாஹ் உதவிசெய்து கொண்டிருக்கின்றான்.யாரொருவர் அறிவைத் தேடி ஒரு பாதையில் செல்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் சுவனத்திற்கான பாதையை இலகுபடுத்துகின்றான்.எவரது செயல் ஒருவனை தாமதப்படுத்தி விட்டதோ, அவரது பரம்பரை அவரை துரிதப்படுத்தாது.(முஸ்லிம் :2699).

- தனக்கு விருப்பமானதை பிற சகோதருக்கும் விரும்பாத வரை உங்களுள் ஒருவர் முழுமையான இறைவிசுவாசியாக மாட்டார். (அல் புகாரி :13).
- எவரது நாவு மற்றும் கரங்களிலிருந்து முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்று விட்டனரோ அவரே உண்மையான முஸ்லிமாவார்.மேலும்,அல்லாஹ் தடை செய்தவைகளிலிருந்து யார் தன்னை விலக்கிக்கொண்டாரோ அவரே உண்மை முஹாஜிர் ஆவார். (அல் புகாரி :10).
- முஸ்லிமில்லாத ஒருவருக்கு யாராவது அநியாயம் செய்தால் அல்லது அவரது சக்திக்கப்பால் அவர் மீது சுமைகளை ஏற்படுத்தினால் அல்லது அவரது மனவிருப்பமின்றி அவரிடமிருந்து எதையாவது எடுத்துக் கொண்டால் மறுமையில் நான் அவருக்காக வாதாடுவேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபுதாவூத் 3052).
- அன்பாக நடப்பவர்களுக்கு அன்பாளனான அல்லாஹ் அன்பு காட்டுவான் மண்ணிலுள்ளவர்களுக்கு அன்பு காட்டுங்கள் விண்ணிலுள்ளோர் உங்கள் மீது அன்பு கொள்வர்.(அபூ தாவூத் : 4941).
- யார் மோசடி செய்கின்றாரோ அவர் எம்மைச் சார்ந்தவரல்ல. (திர்மிதி :1315).
- பரஸ்பர அன்பும் பரிவும் கொள்வதில் இறைவிசுவாசிகள் ஓர் உடலை ஒத்தவர்களாவர்.அதிலுள்ள ஓர் உறுப்பு வலி வேதனைக்கு உட்பட்டு விட்டால்,அவ்வுடலின் ஏனைய உறுப்புக்கள் அனைத்தும் அதற்காக கண் விழித்து வேதனையை அனுபவிக்கின்றன.(முஸ்லிம் : 2586).

- உங்களுள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளாவர்.ஆவரவர் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வொருவரும் வினவப்படுவர்:ஆட்சியாளர் பொறுப்பாளியாவார் அவரது பிரஜைகள் பற்றி அவர் வினவப்படுவார். ஓர் ஆண் அவரது குடும்பத்துக்கு பொறுப்பாளியாவார் அவரது குடும்பம் பற்றி அவர் வினவப்படுவார்.ஒரு பெண் அவளது கணவனின் வீட்டுக்கு பொறுப்பாளி ஆவார் அவள் அவளது பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவார்.ஓர் ஊழியர் தனது எஜமானனின் சொத்துக்களுக்கு பொறுப்பாளியாவார் அவரதுபொறுப்புக்கள் பற்றி வினவப்படுவார்.(அல் புகாரி : 4892).

- இறைவிசுவாசிகளுள் முழுமையான ஈமானைப் பெற்றவர்,அவர்களுள் மிக அழகிய நற்குணங்களை உடையவராவார்.உங்களுள் மிகச் சிறந்தவர் அவர்களின் மனைவியர்களுக்கு மிகச் சிறந்தவராவார். (திர்மிதி :1162)

- உங்களில் மிகச் சிறந்தவர், அவர் குடும்பத்திற்கு மிகச் சிறந்தவரே, நான் உங்களுள் எனது குடும்பத்திற்கு மிகச் சிறந்தவன்.(அத் திர்மிதி : 3895)

- அனைத்து விடயங்களிலும் மென்மையாக நடந்துகொள்வதையே அல்லாஹ் விரும்புகின்றான்.(அல் புகாரி : 5698).


- யாரிடம் மென்மை எனும் குணம் அற்றுப்போகிறதோ அவரிடம் எந்த நலவும் இருக்காது.((முஸ்லிம்: 2592).

- நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று: பேசினால் பொய் பேசுவான். வாக்களித்தால் மாறு செய்வான்.நம்பினால் துரோகம் செயவான். (அல் புகாரி : 33).

- தனக்குத் தேவையற்ற விடயங்களை விட்டு விலகிக்கொள்வதானது, ஒரு மனிதனின் அழகிய இஸ்லாமிப் பண்புகளுள் ஒன்றாகும். (திர்மிதி : 2313)

- கடுமையான தாகத்துடன் ஒரு மனிதன் பாதையில் நடந்து கொண்டிருந்தான்.அப்போது அங்கு ஒரு கிணறு இருப்பதைக் கண்டு அதிலே இறங்கி நீர் அருந்தி விட்டு மேலே ஏறி பார்த்த போது,தாகத்தின் காரணமாக பெரு மூச்சி வாங்கிய நிலையில் சகதியை உண்டு கொண்டிருக்கும் ஒரு நாயைப் பார்த்தார்.தனக்கு ஏற்பட்ட தாகத்தைப் போன்றே இதற்கும் தாகம் ஏற்பட்டிருக்கின்றது என்று தனக்குள் கூறிக்கொண்டு,மறுபடியும் கிணற்றுக்குள் இறங்கி பாதணிக்குள் நீரை நிரப்பி தனது வாயில் அதனை கௌவிக் கொண்டு வெளியே வந்து அவர் தாகசாந்தி ஏற்படும் வரையில் அதற்கு நீர் புகட்டினார்.எனவே,அல்லாஹ் அதற்கு நன்றி தெரிவித்து, அவரது பாவத்தையும் மன்னித்து விட்டான்.

அந்தக் கால் நடைகளுக்கு உதவுவதன் மூலமும் எமக்கு நன்மை கிடைக்குமா? அல்லாஹ்வின் தூதரே! என நபித்தோழர்கள் வினவிய போது‘‘உயிர் வாழும் எந்தவொரு உயிரினத்திற்கு தொண்டு செய்தாலும் அதற்கும் நன்மை உண்டு’’ என பதிலுரைத்தார்.(புகாரி: 2466).



இறைத்தூதர் முஹம்மத் (ஸல்)அவர்களை அல்குர்ஆன் எவ்வாறு அறிமுகம் செய்கிறது?

நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து ஆச்சரியமானதொரு பகுதியையும் அவரைச் சூழ வாழ்ந்த மக்களோடு அவர் உறவாடிய முறைகளையும் அல்குர்ஆன் எமக்கு உணர்வு பூர்வமாக எடுத்துரைக்கின்றது.

இந்த வகையில்,நபி (ஸல்) அவர்களின் பண்பாடுகள், சிறப்பியல்புகள், மனித விழுமியங்கள் என்பன அல்குர்ஆனில் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

- முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் அகில உலக மக்களுக்கும் அருட்கொடையாய் வந்தவர் ஆவார்.(அல்அன்பியா : 107).
- உயர் பண்பாட்டின் மீது அவர் இருக்கின்றார். (அல்கலம் : 05).
- மக்களுக்கு சமயத்தை எடுத்துரைப்பது மாத்திரமே நபியவர்களின் பணியென்பதையும் அல்லாஹ் தான் நாடுவோருக்கு மாத்திரம் தான் இம்மார்கத்தை பின்பற்றும் பாக்கியத்தை வழங்குவான் என்பதனையும் பல்வேறு தடவைகள் அல்குர்ஆனில் வலியுறுத்திக் கூறப்பட்டிருந்தும் கூட நபி (ஸல்) அவர்கள் மக்கள் நேர்வழியைப்பெற வேண்டுமென்பதில் அதீத கரிசணையோடு நடந்து கொண்டதுடன் அவர்கள் நேர்வழியைப் பெறாத போது அதையிட்டு ஆழ்ந்த கவலை கொள்பவர்களாகவும் இருந்தார்கள். (ஹூத் : 12),(அல்அன்ஆம் : 107)
- குற்றம் செய்பவர்களால் முன்வைக்கப்படும் நியாயங்களை ஆராய்ந்து பார்ப்பதுடன் அவர்களை மன்னித்தும் விடுவார்கள். (அத்தௌபா : 43).
- அல்லாஹ் தடை செய்யும் வரை தனது எதிரிகளுக்காகு கூட பாவமன்னிப்பு கோருபவாராக இருந்தார்கள். (அத்தௌபா : 80).
- மு.ஃ.மின்களுக்கு ஏற்படும் துன்பங்கள் நபியவர்களுக்கும் துயரத்தை ஏற்படுத்தும் செயல்களாகவே இருந்தன.அவர்களோடு நபியவர்கள் அன்பாகவும் இரக்கமாகவும் இருக்கின்றார்கள்.(அத்தௌபா : 128)
- நபி (ஸல்) அவர்களின் வீட்டுக்கு சிலர் விருந்தாளிகளாக வந்து வெளியில் செல்லாமல் நீண்ட நேரம் அங்கு அமர்ந்து விடுகின்ற வேளையில் நபியவர்கள் சிலபோது சங்கடத்திற்குறப்படுவார்கள். இருந்தும் கூட,வெட்கத்தின் காரணமாக அதனை அவர்களுக்கு தெரிவிக்க மாட்டார்கள். (அல் அஹ்ஸாப் : 53).
- தாராள மனப்பான்மையுடனும் இங்கிதமாகவும் தனது தோழர்களோடு நடந்து கொள்வார்கள்.இக்கட்டான சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் கூட அவர்களுடன் ஆலோசனை செய்து அவர்களின் கருத்துக்களைப் பெறுவாரகள்.(ஆலு இம்ரான் : 159).



இஸ்லாத்தின் நிலையான அற்புதம் புனித அல்குர்ஆன் ஆகும்.




சர்வதேச அளவில் வாழும் 150 கோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மிகவும் அதிகமாக விற்கவும் விநியோகிக்கவும் படுகின்ற மிக உன்னதமான நூலாக கருதப்படும் அல்குர்ஆன் என்பது யாது....?

பின்வருமாறு முஸ்லிம்களால் நம்பப்படுகின்ற புனித வேதமே அல்குர்ஆன்

- மக்களின் நேர்வழிக்காக இறைத்தூதர் முஹம்மத் (ஸல்)அவர்கள் மீது இறக்கியருளப்பட்ட அல்லாஹ்வின் திருவாக்காகும்.
- இறைவனால் இறக்கப்பட்ட விண்ணியல் சார் வேதங்களில் இறுதியானதே அல்குர்ஆன்.
- இடைச்செருகல்கள் மற்றும் மாற்றங்களுக்கு ஆட்படுதல் எனும் நிலையிலிருந்து பாதுகாக்கப்பட்ட வேதமாகும்.
- அல்குர்ஆனின் சட்டங்களையும் போதனைகளையும் நடைமுறைப் படுத்துவது வணக்கமாக கருதப்படுவது போல்,இதனை மனனமிடுவதும் பாராயணம் செய்வதும் இறைவணக்கமாகவே கருதப்படுகின்றன.

நபி (ஸல்) அவர்களின் 40 ஆவது வயதின் பின்னர் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களின் துணையுடன் இறங்க ஆரம்பித்த அல்குர்ஆன் 23 வருட காலங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப கட்டம் கட்டமாக அருளப்பட்டது. "இக்ர பிஸ்மிரப்பிகல்லதி ஹலக்" என்பதே அல்குர்ஆனின் முதல் திருவசனமாகும்.

அல்குர்ஆன் 114 அத்தியாயங்களாக தொகுக்கப்பட்டுள்ளது. அவைகள் ஒவ்வொன்றும் பல்வேறு வித்தியாசமான தலைப்புக்களையும் அணுகுமுறைகயையும் கொண்டிருக்கின்றன.எனினும்,அவைகள் அனைத்தும் உயர்ந்த மொழி வன்மையைக் கொண்டதாக இருப்பதோடு மனிதர்களை நேர்வழியின் பால் அழைத்து ஏக இறைவனை வணங்கச் செய்வதனை இலக்காகவும் கொண்டுள்ளன.



**அல்குர்ஆன் உரையாடுகின்ற சில முக்கியத் தலைப்புக்கள்.**

1. ஏகத்துவக் கொள்கையை நிலை நிறுத்தி, இணைவைப்போரின் சந்தேகங்களை மறுதளித்தல்.
2. முன்னைய நபிமார்கள் மற்றும் சமூகங்களின் வரலாற்றுச் சம்பவங்கள்.
3. பரந்து,விரிந்து காணப்படும் இப்பிரபஞ்சம்,எம்மைச் சூழவுள்ள படைப் பினங்கள் போன்றவற்றை ஆய்வு கண்ணோட்டத்தில் நோக்க வேண்டுமென்று மக்களுக்கு அழைப்பு விடுத்தல்.
4. மனிதர்கள் மீது இறைவனால் புரியப்பட்ட இறையருட்கொடைகளை ஒவ்வொன்றாக பட்டியலிட்டுக்காட்டுதல்.
5. மார்க்கத்தில் காணப்படும் ஏவல்கள்,விலக்கல்கள் மற்றும் அதன் சட்ட திட்டங்களை விளக்கிக்கூறல்.
6. இறைநம்பிக்கையாளர்களின் பண்புகள் மற்றும் குணநலன்களை விளக்கிக் கூறுவதோடு,தீய பண்புகள் குறித்து எச்சரித்தல்.
7. மறுமை நாள் மற்றும் நல்லோர்,தீயோருக்கான கூலிகள் குறித்துப் பேசுதல்.
8. நபி (ஸல்) அவர்கள் மற்றும் அவரின் தோழர்களுக்கு இடம் பெற்ற நிகழ்வுகளுக்கூடாக இறைவிசுவாசிகளை நெறிப்படுத்தல்.

அல்குர்ஆன் கொண்டிருக்கும் தனித்துவங்களும் சிறப்பியல்புகளும்

## அல் குர்ஆன் பாதுகாக்கப்படும் அற்புதம்

நாவுகளினால் ஓதப்பட்டு உள்ளங்களினால் பாதுகாக்கப்படுவதை உணர்த்தும் முகமாக அல்லாஹ் தனது இறுதி வேதத்திற்கு ‘‘அல்குர்ஆன்’’ எனப் பெயரிட்டுள்ளான். எழுத்துருவில் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை சமிக்ஞை செய்யும் வகையில்,‘‘அல் கிதாப்’’ புத்தகம் எனும் பெயரிலும் அல்லாஹ் இதனை பல்வேறு வசனங்களில் அழைக்கின்றான்.

அல்குர்ஆனை மேற்குறித்த இரு முறைகளிலும் அல்லாஹ் பாதுகாத்திருக்கின்றான்.எனவே தான், நபி (ஸல்)அவர்கள் மீது ஒரு வசனம் இறக்கப்பட்டு விட்டால் உடனிருப்பவர்களின் உதவியோடு அதை எழுதிக் கொள்வதோடு,மனனமிட்டும் கொள்வார்கள்.

அல்குர்ஆனை நூலுருப்படுத்துகின்ற போது ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டு சரி கண்ட பின்னரே தொகுக்கப்பட்டது. அதாவது,எழுத்துருவில் காணப்படுபவை மனனமாகவுள்ளவற்றுடன், மனனமாக பாதுகாக்கப்பட்டவை எழுத்துருவில் பாதுகாக்கப்பட்டவற்றுடனும் ஒப்பிட்டு சரிபாக்கப்பட்ட பின்னரே அல்குர்ஆனாகத் தொகுக்கப்பட்டது.

உண்மையாகவே, அல்குர்ஆனை நடு நிலையாக நோக்கும் ஒருவர் அதில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்பதை ஏற்றுக் கொள்வர்.ஏனெனில்,அதில் காணப்படும் எழுத்துக்களும் அவைகள் கொண்டிருக்கும் கருத்துக்களும் அல்லாஹ்வின் திருவாக்குகளாகவே இருப்பதோடு கூட்டலோ குறைத்தலோ இன்றி நபியவர்களின் திருவாயிலிருந்து நேரடியாகவே எழுதியும் மனனமிட்டும் பாதுகாக்கப்பட்டதாகும். முஸ்லிம்கள் தங்களுக்கிடையில் பல்வேறு குழுக்களாக பிளவுபட்டிருந்த போதும் கூட,அல்குர்ஆனின் ஒரு சொல்லிலேனும் அவர்களுக்கிடையில் முரண்பாடு கிடையாது.

மிக நுணுக்கமாகவும் நேர்த்தியாகவும் பல்வேறு எழுத்து வடிவங்களில் தொகுக்கபட்டு.பலவகையிலான உச்சரிப்பு முறைகளில் மொழியப்படுவதோடு,மனித உள்ளங்களில் மனனமிடப்பட்டும் வருகின்ற அல்குர்ஆன் வரலாற்று நெடுகிலும் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொகுக்கப்பட்டு,உலகின் பல பாகங்களிலும் உள்ள நூதனசாலைகளில் இன்றும் காணப்படுகின்ற அல்குர்ஆனிய கையெழுத்துப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கில் உலகில் எங்கு வேண்டுமானாலும் ஒருவர் அல்குர்ஆன் பிரதியொன்றினை விலைகொடுத்து வாங்கினாலும் சரி, வியக்கத்தக்கதோர் உண்மையைப்புரிந்து கொள்வார்.

அதன் எழுத்துக்களும் சொற்களும் உச்சரிக்கப்படும் முறை,ஓதப்பட வேண்டிய சட்ட ஒழுங்கு விதிகள் என்பன காலங்கள் மாறுபட்டு,பல்வேறு மொழிகள் தோன்றிய போதும் கூட மாறாத்தன்மை கொண்டதாகவே காணப்படுகின்றன.

இன்று இந்தோனோசியாவில் மனனமாக ஓதும் ஒரு குழந்தைக்கும் அல்லது அன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்காவில் பாடம் நடாத்திய ஓர் அறிஞருக்குமிடையில் அல்குர்ஆனை ஓதுவதில் எவ்வித வேறுபாடுகளையும் காண முடியாது.அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் “(இது)அல்லாஹ் அல்லாது பிறரிடமிருந்து வந்திருந்தால் அதில் ஏறாலமான முரன்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள் ”. (அந் நிஸா: 82).

அல்குர்ஆனை பாதுகாக்கும் பொறுப்பை தானே ஏற்றிருப்பதாக அல்லாஹ் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகினறான்.“நிச்சயாக நாம் தான் (நிணைவூட்டும்) இவ்வேத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்.நாமே அதன் பாதுகாவளராகவும் இருக்கின்றோம் (அல்ஹிஜ்ர்: 9)

## அல்குர்ஆனின் உளவியல் அற்புதம்

அல்குர்ஆன் தன்னோடு நேரடியாக தனிப்பட்ட முறையில் உரையாடுவதாக அல்குர்ஆனைக் கருத்தூன்றிக் கற்கும் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வர்.

இதனை விட ஆச்சரியம் யாதெனில், அவனுடைய சிந்தனைகள், கருத்துகளையெல்லாம் பின்னோக்கித்தள்ளக் கூடிய பல கருத்துகளை அல்குர்ஆன் பல ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டிருப்பதாகும்.

பார்ப்பவர்களை கவரும் விதத்தில் ஒரு கலைஞர் ஒன்றை வரையலாம். ஆனால் வித்தியசமான கலாச்சாரங்கள் மற்றும் வாழ்வியல் ஒழுங்குகளை பின்னணியாகக் கொண்ட பல்வேறுபட்ட வாசகர்களின் கருத்துகள்,சிந்தனைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்கும் வகையில் மட்டுமல்ல அவர்களின் பல்வேறு வினாக்களுக்கு (அவைகள் முன்வைக்கப்பட முன்னரே) விடையளிக்கும் வகையில் ஒரு நூல் எவ்வாறு ?அமைய முடியும்.

மனிதனின் பிரச்சினைகள் இரகசியங்கள் மற்றும் பலவீனங்களை இனங்காண்பதில் வியக்கத்தக்கதொரு போக்கை அல்குர்ஆன் கொன்றிருக் கின்றது.இதன் காரனமாகவே வாசகர் தனது முதற் பார்வையிலேயே தனது தவறை புரிந்துகொள்ள முடியும் அத்தோடு,பல வருடகாலங்களாக விடைகான முடியாமல் கிடப்பில் இருந்த பல்வேறு வினாக்களை மனதில் எழுப்பி விடைகான உள்ளத்தைக் தூண்டக்கூடியதாகவும் இருக்கும்.

அல்குர்ஆன் சில மனிதக் குழுக்களின் கதைகள் சிந்தனைகள், தோற்றுவாய்கள் மற்றும் வெற்றி தேல்விகளின் இரகசியங்களை படிக்கின்ற போது ஒருவனால் தனது வாழ்க்கையை மீழ்பரிசீலனை செய்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.இங்கு இடம்பெறுகின்ற அத்தியாயங்கள், வசனங்கள் மற்றும் அவைகளில் பிரஸ்தாபிக்கப்படுகின்ற முன்மாதிரிகள் அனைத்தும் மனித உள்ளங்களுக்கு (அவன் அறியாமலேயே அதற்குரிய) வாழ்க்கையின் யதார்த்தத்தை,குறை நிறைகளை எடுத்துக்காட்டும் கண்ணாடியாக மாறுமளவிற்கு அல்குர்ஆன் நெருக்கமடைந்து விடுகின்றது.

இதன் விளைவாக,அல்குர்ஆனை அழமாக கற்கின்ற ஒருவன் வணக்கத்துக்கு தகுதியானவன் அல்லாஹுவையன்றி வேறெவருமில்லை என்று ஏற்றுக் கொள்கின்றான்.

மேலும், நிராசை ஏற்படுகின்ற போது அல்குர்ஆனின் பின்வரும் வசனம் ஆறுதல் அளிக்கின்றது.என் அடியார்களே...!(உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்கு தாமே தீங்கிழைத்து கொண்ட போதிலும் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் அவர் நம்பிக்கை இழக்க வேண்டாம்.நிச்சயமாக அல்லாஹ் அனைத்து பாவங்களையும் மன்னிப்பான்.நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்க ககருணையுடையவன்.என (நான் கூறியதை நபியே) நீர் கூறுவீராக. (அஸ்ஸுமர்:53)

மூர்க்கமான உள்ளார்ந்த மனவுளைச்சலுக்குள்ளாகின்ற ஒருவன் தன்னை ஆற்றுகைபடுத்தக்கூடியவனை தேடிக்கொள்ள முனைகின்ற போது, பின்வரும் இறைவசனத்தை அல்குர்ஆனில் பார்த்து ஆறுதல் அடைகின்றான் நபியே...! என் அடியார்கள் என்னை பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான்

மிக சமீபமாகவே இருக்கின்றேன்.பிரார்த்தனை செய்பவர் அவன் பிரார்த்தனை செய்தால் அவரின் பிரார்த்தனைக்கு விடையளிக்கிறேன்.அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்து கேட்கட்டும்.எனனனைவே நம்பட்டும்.அப்போது அவர்கள் நேர்வழியடைவர்.என கூறுவீராக". (அல் பகறா186).

வாழ்க்கை கட்டுபாட்டை மீறி இனிமேலும் அதனை கட்டுக்குள் கொன்டுவர முடியாது என்று துவன்டு போன ஒருவன்,பின்வரும் இறை வசனத்தை ஒடிந்து போன தனது உள்ளத்திற்கு ஒத்தடம் போடும் ஔடதமாகப் பார்க்கின்றான். "அல்லாஹ் எந்தவொரு ஆத்மாவுக்கும் அது தாங்கி கொள்ள முடியாதளவு கஷ்டத்தை கொடுப்பாதில்லை.அது சம்பாதித்த நன்மை அதற்கே.மேலும் அது சம்பாதித்த தீமையும் அதற்கே.(மு∴மின்களே...!பிரார்தரனை செய்யுங்கள்) எங்கள் இறைவா....! நாம் மறந்து போயிருப்பினும் அல்லது நாம் தவறு செய்திருப்பினும் எம்மை குற்றம் பிடித்திடாதே....!எமது இறைவா...! எமக்கு முன்னிருநதவர்கள் மீது சுமையை சுமத்தியது போல் எம்மீதும் சுமைகளை சுமத்தாது இருப்பாயாக....!எங்கள் இறைவா....! எங்கள் சக்திக்கப்பாற்பட்ட (எம்மால் சுமக்க முடியாத) சுமையை எம்மீது சுமத்தாது இருப்பாயாக. எமது பாவங்களை நீக்கி பொறுத்தருள்வாயாக...! எங்கள் மீது கருணையும் காட்டுவாயாக....! நீயே எமது பாதுகாவலன்,கா∴பிரான கூட்டத்தார் மீது (நாம்) வெற்றியடைய எமக்கு உதவி செய்வாயாக" (பகறா286).

''willDurant'' (வில் டுரான்ட்) என்றழைக்கப்படும் மிகப் பிரபல்லியம் பெற்ற வரலாற்றாசிரியர் ''the story of civilization'' என்ற தனது நூலில் இந்த உன்மையை ஏற்று பின்வருமாறு விளக்குகின்றார்.

நாங்கள் வாழ்கின்ற இக்காலத்திலும் பண்டைய எல்லாகாலத்திலும் வித்தியாசமான சிந்தனைகள்,கொள்கைக்கோட்பாடுகளை கொண்ட என்னில டங்காத சிந்தனையாளர்கள்,கல்விமான்கள்,புத்திஜிவிகள் என்று பலரும் இந்த அல்குர்ஆனை நம்பி ஏற்றுக் கொன்டுள்ளனர்.

அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஐயப்பாடுகள் அற்ற நம்பிக்கைகளையும் சத்திய கொள்கைக்கோட்பாடுகளும் மேலும்,சடங்கு சம்பிரதாயங்களை கண் மூடிதனமாக பின்பற்றும் நிலையில் இருந்து மிகத்தூ ரமான சமய புரோகித நிலை மற்றும் சிலை வணக்கம் என்பவற்றிலிருந்து முற்றாக விடுபட்ட தெளிவான சத்தியக்கொள்கை கோட்பாடுகளையும் இந்த அல்குர்ஆன் தன்னகத்தே கொன்டிருப்பது தான் இதற்கான பிரதான காரணமாகும்.

வாழ்க்கையில் ஏற்படுகின்ற சிரமங்களை சடைவின்றி எதிர்கொள்வதற்கும் சகித்துக் கொள்வதற்கும் இஸ்லாம் மக்களுக்கு கற்றுக்கொடுத்துள்ளதோடு அதனை மிகத்தெளிவாக வரையறை செய்துள்ளது.இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து தங்களை தடுத்துக்கொள்ளக் கூடிய எந்த ஒரு கொள்கையும் யூதர்களிடத்திலோ கிஸ்தவர்களிடத்திலோ இல்லை.



# அல் குர்ஆனின் தோற்றுவாய்?



முஸ்லிம்களின் இறை வேதமான அல்குர்ஆன் மற்றும் முஹம்மத் (ஸல்)அவர்கள் பற்றி கதைக்கின்ற போது இது பற்றி முஸ்லிம்களால் கூறப்படும் செய்திகளை ஏன் நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது? இது, தொடர்பாக ஏன் நாம் கேள்விகளை எழுப்பக்கூடாது? என்ற தர்க்கரீதியான வினாக்கள் எமது மனங்களில் இயல்பாகவே தோன்றி மறைகின்றன.

கி.பி 6 ஆம் நூற்றாண்டில் முஹம்மத் எனும் பெயரில் மக்கா நகரில் பிறந்து எழுத வாசிக்க தெரியாது வாழ்ந்த, ஒரு சாமாண்ய அறாபியரின் மீது இந்த அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது என்பதில் கருத்து முரண்பாடு கிடையாது.

இது முஹம்மத் (ஸல்) அவர்களின் படைப்பல்ல.மாறாக, அல்லாஹ்விடம் இருந்து அவர் மீது இறக்கியருளப்பட்டதொரு சங்கையான இறைவேதமே என்பதை அ்குர்ஆனை படிக்கின்ற போது,மிகத்தெளிவாக புரிந்து கொள்ளலாம். இதில் நபி (ஸல்) அவர்களின் வகிபாகமானது,கூட்டல் குறைத்தலின்றி மக்கள் மன்றத்துக்கு கொன்டுபோய் சேர்த்து,இதனை விளக்கியமைதான்.

இதனை,முஹம்மத் (ஸல்) அவர்கள் சுயமாக கண்டுபிடித்தார்கள் அல்லது இதிலுள்ள விடயங்களை வேறெங்கோ இருந்து பெற்றுக்கொன்டு வந்து மக்களுக்கு முன்வைத்தார் என்பது சாத்தியமானதா?

---

இலக்கியவாதிகள்,சிந்தனையாளர்கள் மற்றொருவருடைய இலக்கிய படைப் புக்களை தங்களுடைய படைப்புக்களாக மாற்றி இலக்கிய திருட்டில் ஈடுபடுகின்றமை வரலாற்றில் நிறுவப்பட்டிருக்கின்ற நாமறிந்த உண்மையாகும். நிலைமை இவ்வாறிருக்க, ஒருவர் தனது அறிவுப் பாரம்பரியத்தை வேறொரு வருக்குச் சொந்தமானது என ஏன் கூறுகின்றார்?

மக்களுக்கு மத்தியில் தனது செல்வாக்கை நிலை நிறுத்திக்கொள்வதற்குரிய தந்திரோபாயமாகத்தான் அல்குர்ஆனை அல்லாஹ்வுடைய இறைவாக்கு என்று கூறினார்.என்றொரு வாதம் முன்வைக்கப்படுமானால்,அவருடைய வாயிலிருந்து வெளிவந்த அனைத்து வார்த்தைகளையும் அல்லாஹ்விடமிருந்துதான் வந்தன என்று ஏன் அவர் வாதிடவில்லை?

தான் எழுதிய புத்தகத்தினூடாக தனது செல்வாக்கையும் கௌரவத்தையும் வளர்த்துக் கொள்ளும் நோக்கிலேதான் அதனை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தி கொண்டார் என்றால்,அதே நூலில் நபி (ஸல்) அவர்கள் நேரடியாக பல தடவைகள் கடுமையாக கண்டிக்கப்பட்டிருப்பதும் அவரின் தவறுகள் திருத்தப்பட்டு வழிகாட்டப்பட்டிருப்பதும் எவ்வாறு ஏற்க முடியுமான செய்திகளாக இருக்க முடியும்?

நபி (ஸல்) அவர்களின் தனிப்பட்ட வாழ்வு,சமூகவாழ்வு என்ற வேறுபாடுகள் ஏதுமின்றி பொதுவாக அனைத்து சந்தர்ப்பங்களிலும் கண்டிக்கப் பட்டிருக்கின்றார்கள்.அந்த வகையில் குடும்மத் தகராறுகளின் போது, தலைவர் என்ற அடிப்படையில் சில பிழையான முடிவுகளை எடுத்த போது, ஏன் “த.ஃக்வாக்” களத்தில் வேறுபட்ட சில தவறான அணுகு முறைகளை மேற்கொண்ட போதெல்லாம் கூட கண்டிக்கப்பட்டார்கள்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் குறைஷித் தலைவர்களில் சிலருக்கு இஸ்லாத்தின் பால் அழைப்புக் கொடுக்கும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்த வேளை,அச்சபைக்கு கற்புலனற்ற ஒரு சஹாபி (அங்கு என்ன நடக்கின்றது என்பதை அறியாதவராக) வந்து எனக்கு இஸ்லாத்தை கற்றுத்தாருங்கள் என்று பல தடவைகள் நபியவர்களிடம் கேட்டுக்கொன்டிருந்தார்.இது நபி (ஸல்) அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கவே என்னுடைய இந்த முக்கியமான பணி நிறைவடையும்

வரை இவர் காதிருக்கமாட்டாரா...!என்றெண்ணி இந்த மனிதரைக் கடிந்து கொண்டதோடு இவருக்கு எவ்வித பதிலும் கூறாமல் தனது காரியத்தை தொடர்ந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களின் இச்செயலை கண்டித்து,வஹியின் வருகை சில காலம் தடைப்பட்டுப் போனது.நபியவர்கள் அந்த மனிதரிடம் எவ்வாறு கடிந்து கொன்டார்கள்,அவருடைய கேள்விகளுக்கு பதிலளிக்காமல் எவ்வாறு புறக்கனித்தார்கள் என்றெல்லாம் மிக விரிவாக விபரித்ததோடு,இனி மேலும் இவ்வாரானதொரு பிழை நடந்துவிடக் கூடாது என்று கண்டிக்கும் வகையில் கடும் தொனியில அல்குர்ஆனின் ஒர் அத்தியாயத்தில் பெரும் பகுதியை அல்லாஹ் இறக்கி வைத்தான்.

இச்சம்பவத்தை எழுத்து மூலம் ஆவணப்படுத்தும் வகையில்,மேற்படி அத்தியாயம் ‘‘கடிந்து கொண்டார்’’என்ற அர்த்தத்தைக் கொடுக்கும் (அபஸ) என்ற சொற்பிரயோகத்தையே பெயராக கொன்டுள்ளது.பிற்பட்ட காலத்தில், இவர் நபி (ஸல) அவர்களின் சபைக்கு வருகின்ற போதெல்லாம் தனது விரிப்பை அவருக்காக விரித்து ‘‘எனது இறைவன் என்னைக் கண்டிப்பதற்கு காரணமாக இருந்வரே வாருங்கள்’’என்று வரவேற்பார்கள்.

இவ்வாறு நபியவர்கள் கண்டிக்கப்பட்ட பல சம்பவங்களை அல்குர்ஆன் நமக்கு பதிவு செய்து வைத்துள்ளது.சமூகத்தில் தனக்கு புகழும் கௌரவமும் கிடைக்க வேண்டுமென ஆசைப்படும் ஒருவர் இவ்வாறானதொரு நூலில் அவருடைய தவறுகளையும் குற்றங்களையும் அவரே பதிந்து வைத்து ஆவணப்படுத்த விரும்புவாரா...?

நபி (ஸல்) அவர்கள் தனது நம்பகத்தன்மை,கௌரவம் மற்றும் தனது குடும்பத்தினது குற்றமற்ற நிலை என்பவற்றையெல்லாம் நிரூபிக்க வேண்டிய இக்கட்டான பல சந்தர்ப்பங்களில் வஹி மூலமாவது விடிவுகிட்டாதா? என்று ஏங்கித்தவித்து கொண்டிருந்த வேளையிலும் கூட வஹி இறங்கவில்லை என்ற உன்மையை வரலாற்று நெடுகிலும் கண்டு கொள்ளலாம்.

நபியவர்களை அனைத்து வழிகளிலும் எதிர்த்து தோல்வியுற்ற இறை நிராகரிப்பாளர்கள் சிலர்,வேதக்கார அறிஞர்களிடம் சென்று நபி (ஸல்) அவர்களுக்கு எதிரான போராட்டத்தில் தங்களுக்கு உதவுமாறு கேட்டுகொண்ட போது நீங்கள் நபி (ஸல்) அவர்களிடம் சென்று மூன்று வினாக்களை கேளுங்கள் அவர் உங்களுக்குப் பதலளித்தால் அவர் உன்மையில் ஒரு நபியாக இருப்பார் இல்லையெனில் அவர் ஒரு பொய்யனாகவே இருப்பார் என்று கூறி அனுப்பினார்கள். இதனை ஏற்றுக்கொண்ட இறை நிராகரிப்பாளர்கள் நபியவர்களிடம் வந்து அக்கேள்விகளை கேட்டனர்.அப்போது இதனை ஒரு சவாலாக ஏற்ற நபிகளார் (ஸல்) அவர்கள் இவைகளுக்குரிய பதிலை நாளைக்கு உங்களுக்கு தருகின்றேன் என்று கூறினார்கள்.



வஹியின் துணைகொண்டு விடையளிக்கக் காத்துகொண்டிருந்த நபியவர்களுக்கு பதினைந்து நாட்களாக வஹி துண்டிக்கப்பட்டமையானது பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மட்டுமல்லாது, இதனையிட்டு ஏதிரிகள் நபியவர்களை கேலி செய்யவும் துவங்கிவிட்டார்கள். இதனால் நபியவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகினார்கள். ஈற்றில் பதினைந்து நாட்களுக்கு பின்னர் வஹி அருளப்பட்டதன் மூலமே இவர்களின் அக்கேள்விகளுக்குப் பதில ளிக்க நபியவர்களால் முடிந்தது. மேலும், “அல்லாஹ் நாடினாலான்றி” என்று கூறாமல் ஒரு விடயத்தை நிச்சயம் நான் நாளை செய்வேன் என்று ஒரு போதும் கூறக் கூடாது என்ற பாடத்தையும் அல்குர்ஆன் நபியவர் களுக்கு போதித்தது.(அல் கஹ்ஃப் :24)

> இவ்வாறுதான் அனைத்து நபிமார்களுடனும்மக்கள்முரண்பாடாக நடந்துள்ளனர். நபிமார்களை அறிவுபூர்வமாகஎதிர்கொள்ள நாதியற்ற அந்த விரோதிகள் முறையற்ற விதத்தில்சூனியக்காரன் என்றும் பைத்தியக்காரன் என்றும் அழைத்தனர்.

### நித்தமும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள்

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு இறைத்தூதர் என்பதற்கு அவருடைய வாழ்க்கையே தெளிவானதொரு சான்றாகக் கருதப்படுவது வியக்க தக்க விடையமாகும்.

பாமர சமூகத்தில் எழுதப் படிக்க தெரியாது கூலிக்கு ஆடுகளை மேய்த்து கொண்டு பெரும் வர்த்தகப் புள்ளிகளுக்கு சிற்றூழியராக பணியாற் றிக்கொண்டும் அவர்களோடு ஒன்றாகக் கலந்து அறிஞர்களோடு எவ்வித தொடர்புமின்றி சாமான்ய மனிதனாக நாற்பதாண்டுகள் வாழ்ந்த ஒருவர்,திடீரென அந்த சமூகம் அறிந்திராத அவர்களின் மூதாதயர்கள் முன்னோர்கள் பற்றியும் உயிரினங்களின் தோற்றம் பற்றியும் வரலாறுகள்,முன்னைய நபிமார்களின் வாழ்க்கை பற்றிய விவரங்கள், வாழ்க்கையின் அனைத்து துறைகளுக்குமான மார்க்கச் சட்டங்கள் மற்றும் வழிகாட்டல்கள் போன்ற ஆச்சரியமான தகவல்களை முன்வைப்பது எப்படி சாத்தியமாகும்?

இந்த சத்திய செய்திகள் நபிகளாரின் சமுகத்தில் வாழ்ந்த அவரின் ஏதிரிகளுக்கு பேரதிர்ச்சியாக மாறின. நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இறை தூதைப் பற்றி கருத்துரைப்பதில் தட்டுத்தடுமாறி இவர் குறித்து மக்களுக்கு அபாய சமிக்ஞை கொடுப்பதற்கு எவ்வாறான வதந்திகளை கட்டவிழ்த்து விடலாமென சிந்தித்தனர்.

ஆல்குர்ஆனை கருத்தூன்றிக் படிகின்ற எவரும் அல்குர்ஆன் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆக்கம் என்றோ அல்லது அவர் இன்னொருவரிடமிருந்து கற்றுக் கொண்ட விடயங்கள் என்றோ கூறி விட முடியாது.ஏனெனில்,அவரின் வாழ்க்கை குறிப்புகளை நன்றாக அவர்கள் அறிந்து வைத்திருந்தனர். அது மட்டுமல்ல,அவர் அவர்களுடன் ஒன்றாகக் கலந்து வாழ்ந்தார்கள் எனவேதான் நபியவர்களுக்கு எதிராக வீண் பலிகளை சுமத்தி வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அல்குர்ஆனை வேறொருவரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள் என்றும்,அவராக அதனை புனைந்து கொண்டார்,என்றும் கனவில் கன்ட விடயங்களையே அவர் இவ்வாறு கதையாக கூறுகின்றார் என்றெல்லாம் காலத்துக்கு காலம் கதைகளை முன்னுக்குப்பின் முரணாக கூறிக்கொண்டே வந்தனர்.ஈற்றில் இவைகளில் எதனையும் நருபிக்க

முடியாது போகவே இவர் சூனியக்காரன் பைத்தியக்காரன் கவிஞன் என கதையளக்க ஆரம்பித்தனர்.

நபிமார்களைப் பொறுத்த வரை இதுவெல்லாம் பழைய பல்லவிதான்.ஏன் எனின் மூஸா (அலை) அவர்களை சூனியக்காரன் என்று சந்தேகிக்கப்படவில்லையா? ஈஸா (அலை) அவர்கள் ஒரு பைத்தியக்காரன் என அவர் மீது பலி சுமத்தப்படவில்லையா? இவ்வாறுதான் அனைத்து நபிமார்களுடனும் மக்கள் முரண்பாடாக நடந்துள்ளனர்.நபிமார்களை அறிவுபூர்வமாக எதிர்கொள்ள நாதியற்ற அந்த விரோதிகள் முறையற்ற விதத்தில் நபிமார்களின் தகுதிக்கு சற்றும் பொருத்தமில்லாத அபாண்டங்களை நாற்திசைகளிலும் பரப்பிவிட்டனர்.

### வெறும்,மேதாவித்தனமென்று ஏன் அதனை நாம் கருதக்கூடாது?



கற்பனை செய்து பார்க்க முடியாதயளவு அல்லாஹ் மனிதனுக்கு அறிவியல் திறமைகளையும் ஆற்றல்களையும் வழங்கியுள்ளான் என்று அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால்,அவைகள் அனைத்தினது வளர்ச்சிக்கும் ஓர் எல்லையுண்டு.

சகலவற்றின் மீதும் ஆற்றலுள்ள ஒரு படைப்பாளன் இருக்கின்றான் என்றும் நல்லவர்கள் தீயவர்கள் அனைவரும் அவரவருக்குரிய கூலிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மறுமை நாளொன்று உண்டு என்றும் நாம் பெற்றிருக்கின்ற இந்த அறிவுத் திறன் சான்று பகர்கின்றது.ஆனாலும், இந்த உண்மைகளைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான ஆதாரங்கள் இல்லாத போது இந்த அறிவு ஆற்றலினால் மாத்திரம் மேற்குறித்த இறைவன் மற்றும் மறு உலகம் பற்றிய யதார்த்தமான நுனுக்கங்கள் நிறைந்த உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாது.

ஈமானின் வரையறைகள்,உயிரிணங்கள் படைக்கப்பட்ட முறைகள்,அவைகளின் வாழ்வு முடிவடைகின்ற ஒழுங்குகள்,சுவர்க்கமும் அதன் சுகண்டிகளும் நரகமும் அதன் வேதனைகளும் மற்றும் இவைகளுக்குப் பொறுப்பான மலக்குகளின் எண்ணிக்கைகள் போன்ற விடயங்களை அல்குர்ஆன் மிக விரிவாக விளக்கிக் கூறியுள்ளது.

மனிதன் மற்றும் பிரபஞ்சம் ஆகியவற்றின் யதார்த்தம் பற்றிய விலாவாரியான விவகாரங்களையும் அல்குர்ஆன் ஏற்று அங்கீகரித்துள்ளது.இவ்வாறான விபரங்கள் அனைத்தையும் வேறு எந்த அறிவுசார் கோட்பாடுகளாலும் விளக்க முடியுமா?

நிச்சயமாக இந்த உண்மைகளை மனித அறிவினால் வெளிக்கொணர முடியாது.அவ்வாறு முடியுமானால் கூட,அவைகள் வெறும் ஊகங்களாகவே இருக்க முடியும்.

ஆல்குர்ஆனுடைய எந்தவொரு தகவல்களுக்குமிடையில் முரண்பாடுகளை கண்டு கொள்ள முடியாது இந்தக் காலத்தில் அல்குர்ஆனின் சில உண்மைகளை நவீன அறிவியல் விஞ்ஞானம் உண்மையென நிறுவியுள்ளது.

மேலும், முன்னைய இறைவேதங்களில் கூறப்பட்டுள்ள மறைமுகமான பல செய்திகளோடு அல்குர்ஆன் உடண்படுகின்றது.

### ஒருவேளை இது மறுபதிப்புச் செய்யப்பட்ட ஒரு புத்தகமாகவும் இருக்கலாமா.....?

இந்தத் தகவல்களை முன்னைய நபிமார்களின் வேதங்களிலிருந்து நபியவர்கள் பெற்றிருக்க முடியுமா? என்பதை ஒரு கணம் ஆழ்ந்து சிந்தனை செய்து பார்ப்போம்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் உள்ளிட்ட அந்த சமுகத்தின் பெரும் பகுதியினர் எழுத வாசிக்கத் தெரியாத பாமரர்களாக இருந்ததோடு,மேற்குறித்த தகவல்களோடு அவர்களுக்கு எந்தப் பரீச்சயமும் கிடையாது.


பயணத்தில்,தனது உறவினர்களுக்கு முன்னிலையில் அதுவும்,சிறுவனாக இருந்த போது,தற்செயலாக ஒரு வருடன் சொற்ப நேரம் ஏற்பட்ட ஒரு சந்திப்பை விட வேறெந்த வேதக்காரர்களுடனும் நபி (ஸல்) அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை.

தங்களது கௌரவத்தைப் பாதுகாக்கவும் அறிவானது வேறெவருக்கும் பகிரப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் வேதங்கள் பற்றிய அறிவைப் பெற்றிருந்த மேதைகள் அக்காலத்தில் அறிவை மறைத்து வாழ்ந்ததோடு,அறிவின் ஏகபோக உரிமையாளர்களாக தங்களை கருதியும் வந்தனர்.

பண்டைய வேதங்களில் காணப்பட்ட தகவல்களுக்கு அல் குர்ஆன் முரண்படுவதுடன், அவைகளில் இருந்த சில பிழையான விடயங்களை திருத்தியமைத்தது என்பதே உண்மையாகும்.

வரலாற்று சம்வங்களில் காணப்படும் சில குறைபாடுகளை நிவர்த்தி செய்து,வேதக்காரர்கள் மறைத்து வைத்திருந்த அறிவுசார் தகவல்களை வெளிக் கொணர்ந்து,நபிமார்களின் மார்க்கங்களில் புகுத்தப்பட்ட பிழையான நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகள் பற்றியும் அல் குர்ஆன் விளக்கிக் கூறியுள்ளது.இவற்றுக்குத் தேவையான உதாரணங்கள் அல் குர்ஆனில் பல நிரம்பி வளிகின்றது.

இவ்வாறான நிலையில் அல் குர்ஆன் இருக்கிற போது,வேதக்கார அறிஞர்களின் மாணவனாக நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு இருக்க முடியும்.



### தெளிவான வரலாற்று உண்மை

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் அறேபிய மனிதராக இருக்கவில்லையா?

அக்காலத்தில் வாழ்ந்த அறேபியர்கள் நாவன்மை மிக்கப் பேச்சாளர்களாக இருந்தனர்.கவிதை தான் அவர்களின் இலக்கியப் படைப்பாகும். அதற்காக அவர்கள் பிரத்தியேகக் கவியரங்குகளையும் கவிக் கலகங்களையும் அமைத்திருந்தனர்.

ஒரு வமிசம் தொடர்பாகப் பாடப்படும் கவிதைகளை வைத்தே அவை உயர்வாகவும் தாழ்வாகவும் நோக்கப்பட்டு வந்தது.

அக்கால மக்கள் கைதேர்ந்து,கோலோச்சிய ஒரு துறையை நோக்கி இச்சவாலை விடுப்பதன் மூலம் அவர்களின் வன்மை உணர்வுகள் துண்டப்படுவதன் விளைவாக,அவர்கள் இதுவரை பதிலளிக்க முடியாத ஓர் அவல நிலைக்குத்தள்ளி இவரின் மார்க்கம் போலியானது என்று மக்களுக்கு நிரூபித்துக் காட்டி விடுவார்களோ என்ற அச்சவுணர்வு நபி (ஸல்) அவர்களுக்கு இருக்கவில்லையா?

ஒருவர் உரைநடையாகவோ அல்லது கவிதை வடிவிலோ ஒன்றைப் பாடி விட்டால்,அதனைத் துரத்திச் சென்று,அதன் குறைகளை நிவர்த்தி செய்வதோடு,அதில் ஏற்பட்டுள்ள பிழைகளை சரிசெய்வார்கள்.மேலும், அதனை அவர்களுக்கே உரிய பாணியில் விமர்சிக்கவும் செய்வார்கள்.

கவிதைத் துறைதான் அவர்களது போட்டிக்கான ஆடுகளமாகவும் அவர்களின் பலத்தையும் தனித்துவத்தையும் புலப்படுத்தும் ஓர் அம்சமாகவும் விளங்கியது என்றே வரலாற்று மற்றும் இலக்கிய நூற்கள் குறிப்பிடுகின்றன.

நபியவர்களை எச்சரிப்பதிலும் அவரோடு போராடி அவரை தோள்வியுறச் செய்வதிலும் சற்றும் சளைக்காமல் சகல எத்தனங்களையும் மேற்கொண்ட இஸ்லாத்தின் பரம எதிரிகளை நோக்கி “அல் குர்ஆனை அல்லது அதன் சிறிய பகுதியை ஒத்ததொரு நூலை கொண்டுவாருங்கள் பார்க்கலாம்” என்று அல்லாஹ் சவால் விடுத்த போது,மௌனித்து நழுவிச் செல்வதைத் தவிர அவர்களால் அச்சவாலுக்கு வேறெந்த வகையிலும் முகங்கொடுக்க முடியாமல் போனது.

தனது சமுகத்தின் பலத்தை தெரிந்துவைத்திருந்தும் கூட,அவர்களை நோக்கிய இச்சவாலை நபி (ஸல்) அவர்கள் மிகத்துணிகரமாகவே விடுத்தார்கள்.

மறுமை நாள் வரை உலகில் தோன்ற இருக்கும் அனைவரும் ஒன்றிணைந்து ஓரணியில் நின்று இச்சவாலை முறியடித்து விடலாமே என்ற அச்சம் இம்மியளவுமின்றி மேற்குறித்த அப்பெரும் சவாலை அவரால் எவ்வாறு முன்வைக்க முடிந்தது? தான் மக்களுக்கு முன்வைத்த இறைத்தூதின் மீது அபார நம்பிக்கை கொண்டதொரு மனிதரால் மட்டுமே துணிவுடன் ஆபத்துக்கள் நிறைந்த இதுபோன்ற சவாலை விடுக்க முடியும்.

இந்நிலையில்,அன்று வாழ்ந்த குறைஷியர்களுக்கோ அல்லது மிகப் பெரும் இலக்கியவாதிகளுக்கோ அல் குர்ஆனை எதிர்த்து நிற்குமளவிற்கு துணிவு பிறக்கவில்லை.

அல் குர்ஆனை பொறுத்தவரையில்,இதுவே அன்று முதல் இன்று வரை நிலவி வரும் உண்மையாகும்.இதனை எதிர்க்க யாரெல்லாம் துணிந்து முயற்சித்தார்களோ அவர்கள் வரலாற்றில் மிகப்பெரும் தோல் வியைச் சந்தித்ததோடு,குறித்த சமுகத்தின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானார்கள். ஈற்றில்,இலக்கியத்துறையில் எத்தகுதியும் அற்றவர்கள் என்ற அவப்பெயரையும் பெற்றனர்.

## சூறா அல் பாதிஹா

அல்குர்ஆனிலுள்ள மிக உயர்ந்த சூறா.முஸ்லிம்கள் தினமும் தொழுகையில் இதனை ஓதி வருகின்றனர்.இதனுடைய கருத்துக்களை சுருக்கமாக நோக்குவோம்.

### சூறா பாதிஹாவின் கருத்துக்கள்

| | |
|---|---|
| பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். | அருளாலன் அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு ஆரம்பம் செய்கின்றேன் |
| அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன | அவனது அனைத்து விதமான பண்புகள்,செயல்கள் மூலமும் மேலும் வெளிப்படையானதும் அந்தரங்கமானதுமான அவனது அருட்கொடைகள் மூலமும் அல்லாஹ்வை நான் அன்புடன் புகழ்கின்றேன்.<br>ரப்பு என்பவன் அவனே படைத்தவன் அனைத்தினதும் சொந்தக்காரன் அனைத்தையும் நிருவகிக்கும் அருலாளன்.<br>ஆலமீன் என்பது மனிதர்கள்,ஜின்கள்,மலக்குகள்,மிருகங்கள் மற்றும் ஏனைய படைப்புக்கள் உள்ளிட்ட அல்லாஹ் தவிர்ந்த அனைத்தையும் குறிக்கும். |
| அர்ரஹ்மானிர் ரஹீம் | இவ்விரண்டு வார்த்தைகளும் அல்லாஹ்வின் திருநாமங்களாகும்.<br>ரஹ்மான் என்பது பொதுவாகவே அனைத்தின் மீதும் இரக்க முள்ளவன் என்ற கருத்தைக் கொடுக்கும் ஒரு சொல்லாகும்.<br>ரஹீம் என்பது தனது அடியார்களான மு.:.மின்கள் மீது அன்புள்ளவன் என்ற பொருளைக் கொடுக்கும் ஒரு பதமாகும். |
| மாலிகி யவ்மித்தீன | அவனே மறுமை நாளின் அதிபதி. |
| இய்யாக ந.:.புது வஇய்யாக நஸ்தஈன் | எமது இரட்சகனே! உன்னை மாத்திரமே நாங்கள் வணங்குகின்றோம்.எந்தவொரு வணக்கங்களின் போதும் உன்னோடு இன்னொருவரை இணையாக்க மாட்டோம்.<br>எமது அனைத்து விவகாரங்களிலும் உன்னிடத்தில் மாத்திரமே உதவி கோருகிறோம்.அனைத்தினது அதிகாரமும் உனது கை-யிலேயே இருக்கிறது. |
| இஹ்தினஸ் ஸிராதல் முஸ்தகீம் | எமக்கு நேரான வழியைக் காட்டுவாயாக.உன்னை நாம் தரிசிக்கும் வரையில் அதில் எம்மை நிலைத்திருக்கச் செய்வாயாக. |
| ஸிராதல்லதீன அன்அம்த அலைஹிம் | அது நீ அருள் புரிந்து,வழிகாட்டிய நபிமார்கள் நல்லடியார்களின் பாதையாகும்.அவர்கள் அந்த சத்திய வழியை அறிந்து அதனை-யே பின்பற்றினர். |
| கைரில் ம.:.லூ பி அலைஹிம் வழல்லால்லீன் | நீ கோபித்தவர்களின் வழியிலிருந்து எம்மைக் காப்பாற்றி தூரப் படுத்துவாயாக.<br>ஏனெனில் அவர்கள் சத்திய வழியை அறிந்தும் அதனைப் பின்பற்றாதவர்கள் அவர்களே யஹூதியர்களும் அவர்களை ஒத்தவர்களுமாவர்.<br>மேலும்,வழிதவறியவர்களின் பாதையிலிருந்தும் எம்மை தூரப்படுத்துவாயாக.அறியாமை காரணமாக சத்திய வழியைப் பெறாதவர்கள் இவர்களே கிறிஸ்தவர்களும் அவர்களை ஒத்தவர்களும் ஆவர். |
| ஆமீன்! | அல்லாஹ்வே....அங்கீகரித்துக்கொள்வாயாக... |

## முடிவுரை

இவைகள் அனைத்திற்கும் பிறகு,அறேபியர் அல்லாத பிறமொழி பேசும் ஒருவராக இருப்பின் அவரது மொழியில் காணப்படும் அல் குர்ஆன் மொழி பெயர்ப்புக்களை படித்து விளங்குவதன் மூலம் பெறப்படும் தனிப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு அல்குர்ஆன் பற்றிய இறுதித் தீர்மானத்திற்கு வரலாம்.

நபி (ஸல்) அவர்களின் தூது சத்தியமானது என்பதற்கான மிகப்பெரும் சான்றாக அமைவது,அல்குர்ஆனின் கருத்துக்களை வாசித்துப் புரிந்து கொண்டதன் பின்னர் எமது உள்ளங்களில் ஏற்படுகின்ற சில உணர்வுகளாகும் என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.அல்லாஹ் கூறுகின்றான் “அவர்களுக்கு ஓதிக் காண்பிக்க பட்டால் இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியிருக்கின்றோம் என்பது அவர்களுக்கு போதாதா....? நிச்சயம் அவ்வேதத்தில் ரஹ்மத்தும் ஈமான் கொண்ட சமூகத்துக்கு நினைவூட்டும் நல்லுபதேசமும் இருக்கின்றன. (அல் அன்கபுத்:51).

அல் குர்ஆனைப் படித்து அதை ஆய்வு செய்யுமாறு அனைத்து மக்களையும் அது அழைக்கின்றது.உள்ளங்கள் தாழிடப்பட்டவர்கள் தவிரவுள்ள ஏனைய அனைவரும் இந்த வேதத்தைப் படித்து புரிந்துகொள்வர் (அத்தியாயம்:முஹம்மத்:24).







எமது வணக்க வழிபாடுகளின் பால் அல்லாஹ்வுக்கு தேவைகள் உண்டா?

நாம் அல்லாஹ்வை வணங்கி வழிபட வேண்டுமெனும் தேவை அவனுக்குக் கிடையாது.

சடங்கு சம்பிரதாயங்களை மேற்கொள்ளல்,நிதி சார்ந்த வரிகளைச் செலுத்துதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதனூடாக மாத்திரம் வாழ்வில் விமோசனத்தைப் பெற முடியாது.

அல்லாஹ்வை நம்பி அவனை உண்மையாக முன்னோக்குதல்,உள்ளம் மற்றும் நடத்தைகள் போன்றவற்றை விருத்தி செய்வதனூடாக வாழ்வில் இஸ்லாத்தின் சிந்தனைகளை நடைமுறைப் படுத்துதல்,மனித இனத்தின் நலன்களைக் கருத்திற்கொண்டு அதன் எழுச்சிக்காக உழைத்தல் போன்ற அம்சங்களே மனித வாழ்வின் வெற்றிக்கான ஏக வழியாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் “இன்னும் ஜின்களையும் மனிதர்களையும், அவர்கள் என்னை வணங்குவதற்கானவே அன்றி நான் படைக்கவில்லை. அவர்களிடமிருந்து நான் எந்த பொருளையும் விரும்பவில்லை.எனக்கு அவர்கள் உணவளிக்க வேண்டும் எனவும் நான் விரும்பவில்லை. நிச்சயமாக அல்லாஹ் தான் உணவளித்துக் கொண்டிருப்பவன்.பலம் மிக்கவன்.உறுதியானவன்.(அத் தாரியாத்: 58-56).

தொழுகையில் முன்னோக்க வேண்டிய சரியான திசை எது என்று சிலர் சந்தேகத்துடன் ஒருலரை ஒருவர் வினவிக்கொண்டிருந்த போது,அல்லாஹ் இறக்கி வைத்த பின்வரும் வசனத்தில் இம்மார்க்கத்தின் யதார்த்தம் பற்றியும் குறிப்பிடுகின்றான்.

அதாவது,வெறுமனே கிழக்கையோ அல்லது மேற்கையோ நோக்கித் தொழுவது மாத்திரமல்ல மார்க்கம்.மாறாக.“புண்ணியம் என்பது உங்கள் முகங்களை கிழக்கிலோ,மேற்கிலோ,திருப்பி கொள்வதில் இல்லை.மாறாக புண்ணியம் என்பது அல்லாஹ்வின் மீதும் இறுதி தீர்ப்பு நாள் மீதும்,மலக்குகள் மீதும்,வேதங்களின் மீதும்,நபிமார்கள் மீதும்,நம்பிக்கை கொள்ளுதல்.மேலும் தன் பொருளை இறைவன் மீதுள்ள நேசத்தினால் இன பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும்,மிஸ்கீன் ஏழைகளுக்கும்,வழிப்போக்கர்களுக்கும் யாசிப்போருக்கும், (அடிமைகளுக்கும், கடனாளிகளுக்கும்) அடிமைகள் போனறோரின் மீட்பிற்காகவும்,செலவு செய்தல்,இன்னும் தொழுகையை நிலை நாட்டலும்,முறையாக ஸகாத்தையும் வழங்கிவரல் (இவையே புண்ணியங்களாகும்).மேலும் தாம் வாக்களித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும் (வறுமை,இழப்பு போன்ற) துன்பங்களின் போதும் (நோய் போனறவற்றின் போது) கஷ்டத்திலும்,யுத்த சமயத்திலும்,உறுதியுடனும் பொருமையுடனும் இருப்போரும் தான் நன்னெறியாளர்களாவர்.இன்னும் அவர்கள் தான் முத்தகீன்கள்(பயபக்தியுடையோரும் ஆவர்). (அல்பகறா:177).

இறைவனை உண்மையாக நம்புவதும் நற்கருமங்கள் புரிவதும் மனித இனத்திற்கு நன்மைகள் செய்வதுமே இஸ்லாத்தின் உண்மை நிலையாகும்.

ஒருவர் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு மார்க்கப் பற்றுடன் வாழ்வது அவரின் வெற்றிக்கு வழியாகும்.அவ்வாறே,இறைவனை நிராகரித்து வாழ்வதனால் ஏற்படும் தோல்வியானதும் அவருக்கு மட்டுமே உரியதாகும்.இவைகளால் அல்லாஹ்வுக்கு எதுவும் ஏற்பட்டுவிடப்போவது கிடையாது.இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.“இன்னும் எவர் (அல்லாஹ்வின் பாதையில்) உழைக்கின்றாறோ அவர் திடமாக தமக்காகவே உழைக்கிறார். நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரின் (உதவிகள் ஏதும்) தேவைப்படாதவன். (அல் அன்கபுத்: 6).



“
தொழுகையில் முன்னோக்க வேண்டிய சரியான திசை எது என்று சிலர் சந்தேகத்துடன் ஒருவரை ஒருவர் வினவிக்கொண்டிருந்த போது,அல்லாஹ் இறக்கி வைத்த பின்வரும் வசனத்தில் இந்த மார்க்கத்தின் யதார்த்தம் பற்றியும் குறிப்பிடுகின்றான்.

அதாவது,வெறுமனே கிழக்கையோ அல்லது மேற்கையோ நோக்கித் தொழுவது மாத்திரமல்ல மார்க்கம்.


## இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள்

இஸ்லாத்தில் பணிக்கப்பட்ட மிக முக்கிய விடயங்கள் வருமாறு:



வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் மாத்திரமே என்றும் அவன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களையே பின்பற்ற வேண்டுமென்றும் ஏற்று நம்புதல்.


அதாவது,வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வை அன்றி வேறெருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனின் தூதர் என்றும் சாட்சி கூறுதல். (பார்க்க பக்கம் 36).



பர்ளான தொழுகைகளை நிறைவேற்றுதல்.(பார்க்க பக்கம் 112)



பெறத்தகுதியானவர்களுக்கு ஸகாத்தை வழங்குதல் (பார்க்க பக்கம் 116).



ரமழான் மாத நோன்புகளை நோற்றல் (பார்க்க பக்கம் 118).



பண வசதி மற்றும் உடல் வலிமை பெற்றோர் ஹஜ் கடமையை நிறைவேற்றுதல். (பார்க்க பக்கம் 120).

## ஏன் இந்த பொறுப்புக்களும் சோதனைகளும்?

வாய்,வயிறு,பற்கள் போன்ற உறுப்புக்களை அல்லாஹ் படைத்து விட்டு பின்னர்“நோன்பு பிடியுங்கள்” என்று ஏன் கூற வேண்டும்?அழகையும் ஆசையையும் படைத்து விட்டு பின்னர் “பார்வையைத் தாழ்த்தி பக்குவமாய் வாழுங்கள்” என்று ஏன் கூற வேண்டும்? பலத்தைக் கொடுத்து விட்டு பின்னர்” பிறர் மீது அநியாயம் செய்து விடாதீர்கள்”என்று ஏன் கூற வேண்டும்? என்றெல்லாம் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

அல்லாஹ் அந்த ஆற்றல்களையும் பலங்களையும் வழங்கியிருப்பது அவைகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கே அல்லாமல் அவைகள் எம்மைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல.

குதிரையில் நீர் ஏறிப்பயணிப்பதற்காகவே அதனை அல்லாஹ் உமக்கு வழங்கியுள்ளானே தவிர,அது உம் மீது பயணிப்பதற்கல்ல.இவ்வாறே உடலும் பலமும் அல்லாஹ் எமக்காகப் படைத்தவைகள் நாமே அவைகளைச் சரியான நேரத்தில் சரியான இடத்தில் பொருத்தமான வழியில் பயன்படுத்தி,எமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்ளவேண்டும்.மாறாக,அவைகள் எம்மை பயன்படுத்தி விடக்கூடாது.

ஆசைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் ஆற்றல்,உள்ளம் மற்றும் மனோஇச்சைகள் போன்றவற்றை நெறிப்படுத்துதல்,பலத்தை நல்ல வழியில் பிரயோகித்தல் போன்ற பண்புகளே மனிதனின் உயர்வுக்குக் காரணமாக இருப்பதோடு,அவனைத் தனித்துவப்படுத்திக்காட்டும் அடையாளச் சின்னங் களாகவும் காணப்படுகின்றன.இவைகளையே அல்லாஹ் மனிதனின் சோதனைக் களமாகவும் ஆக்கியுள்ளான்.

சோதனை செய்யும் நோக்கிலேயே அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்.“பின்னர் நாம் (ஆண்,பெண்) கலப்பான இந்திரியத் துளியிலிருந்து திடமாக மனிதனை படைத்தோம்.அவனை நாம் சோதிப்பதற்காக அவனை கேட்பவனாகவும்,பார்ப்பவனாகவும்,ஆக்கினோம்.நிச்சயமாக நாம் அவனுக்கு வழியை காண்பித்தோம்.அதை பற்றி நன்றியுள்ளவனாக இருக்கின்றானா,அல்லது நன்றி கெட்டவனாக இருக்கின்றானா என்பதை (அறிவதற்காகவே).(அல் இன்ஸான்: 2,3).

மனிதர்களுக்கு ஏற்படுகின்ற அனைத்து துன்ப துயரங்களும் அவர்களைப் பரீட்சிக்கும் நோக்கிலேயே இடம்பெறுகின்றன.ஆன்மீகம்,பண்பாடு மற்றும் நம்பிக்கை சார் விடயங்களை மேம்படுத்தவும் வாழ்வின் இலக்கை மீள் பரிசீலனை செய்யவுமே அல்லாஹ் மனிதனை சோதிக்கின்றான்.இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.“நிச்சயமாக நாம் உங்களில் ஓரளவு அச்சத்தாலும்,பசியாலும்,பொருள்கள்,உயிர்கள்,விளைச்சல்கள்,ஆகிவைகளில் இழப்பினாலும் சோதிப்போம்.ஆனால் பொறுமையாளர்களுக்கு (நபியே) நீர் நன்மாராயம் கூறுவீராக..!(பொறுமையுடைய அத்தகையோர்) அவர்களுக்கு துன்பம் ஏற்படும் போது “நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் நிச்சயம் அவன் பக்கமே மீள செல்வோம் என கூறுவர்.(அல் பகறா: 155,156)

நம்பிக்கை மற்றும் பண்பாட்டு ரீதியாக உயர்வடைய அல்லது பின்னடைவை நோக்கிச் செல்லவென அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்டதொரு சந்தர்ப்பமே இவ்வுலக வாழ்வாகும்.நேர்வழியைப் பெறுவதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களை அல்லாஹ் வழங்கி இருந்த போதும் கூட,அதனைத் தான் ஏற்றாக வேண்டுமென்று எவரையும் நிர்ப்பந்திக்கவில்லை.அது மட்டுமல்லாமல்,எந்த வழியை வேண்டுமானாலும் தெரிவு செய்து கொள்வ தற்கான சுதந்திரம் என்ற கதவு திறந்தே உள்ளது.

பூமியை வளப்படுத்துதல்,மனித இனத்திற்கு நன்மை செய்தல்,தவறுகள் மற்றும் குற்றங்கள் ஏற்படுகின்ற போதெல்லாம் பாவமன்னிப்புக்கோருதல் போன்ற நல்ல காரியங்களின் பால் அல்லாஹ் வழிகாட்டுகின்றான்.என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)



# தொழுகை

முஸ்லிம்களில் ஒருவரோ அல்லது பலரோ ஒரே திசையை முன்னோக்கி தங்களைச் சுற்றி உலகில் என்ன நடக்கின்றது என்பதையெல்லாம் மறந்தவர்கள் போல தொழுகின்ற அந்த ஆச்சரியமான காட்சியை நேரடியாகவோ அல்லது தொடர்புசாதனங்களினூடாகவோ பார்க்கின்ற போது அதன் யதார்த்தத்தைப் பற்றிக் கேட்டறிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டிருக்கலாம்.



‘‘முஸ்லிம்களின் தொழுகை’’ என்பது யாது?

இஸ்லாத்தின் பார்வையில் தொழுகையானது,மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.இவ்வணக்கமானது அல்லாஹ்வை நெருங்கி,அவனைப் பிரார்த் திப்பதற்கானதொரு வழிமுறையாகும்.இது குறித்து அல்லாஹ் தனது தூதரைப் பார்த்து இவ்வாறு குறிப்பிடுகின்றான்.“உமது இறைவனை ஸுஜூது செய்து (வணங்கி அவனை) நெறுங்குவீதாக.(அல் அலக்:19)

இதன் காரணமாகவே,இது திருக்கலிமாவை மொழிந்ததன் பிறகுள்ள இரண்டாம் பெரும் கடமையாக நோக்கப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் இஸ்லாம் “ஐந்து தூன்களின் மீது நிறுவப்பட்டுள்ளது:உண்மையாக வணங்கப்படக்கூடிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி கூறுதல்,தொழுகையை நிலைநாட்டுதல்”.(அல் புகாரி:8).

இறைவனை இதய சுத்தியுடன் முன்னோக்குதல்,உணர்வுகளை ஒருமித்த நிலையில் வைத்தல்,உள உறுதியுடன் மனதின் தூய்மையைப் பேணுதல் போன்ற விடயங்களின் அளவினை அடிப்படையாகக்கொண்டே ஒரு முஸ்லிமால் நிறைவேற்றப்படும் தொழுகைக்கு நன்மைகள் வழங்கப்படுகின்றன.

எனவே தான், தொழுகையை நிறைவேற்றுங்கள் என்று மட்டுமல்ல,அதனை நிலை நிறுத்துங்கள் என்றும் அல்குர்ஆன் வழிகாட்டுகின்றது.

அறிவு,ஆன்மா,உள்ளம் உள்ளிட்ட உடலுறுப்புக்கள் அனைத்தும் தொழுகையில் ஒன்றித்து விடுவதனையே தொழுகையை நிலைநிறுத்துதல் எனும் சொல் குறித்து நிற்கிறது.இவ்வாறாக தொழுகையை நிறைவேற்றினால் நற்கருமங்களில் ஈடுபடவும் குற்றங்கள் மற்றும் பெரும் பாவங்கள் போன்ற வற்றிலிருந்து தூர விலகிச் செல்லவும் தொழுகை துணை நிற்கும்.

அல்லாஹ்வை ஞாபகப்படுத்தி அவனிடம் சரணாகதி அடைவது மனிதர்களால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நல்ல கைங்கரியங்களை விடவும் மேலானதாகும்.அல்லாஹ் கூறுகின்றான.“(நபியே) இவ்வேத்திலிருந்து உமக்கு அறிவிக்கபட்டதை நீர் எடுத்தோதுவீராக.இன்னும் தொழுகையையும் நிலை நிறுத்துவீராக.நிச்சயம் தொழுகை (மனிதரை) மானக்கேடனவற்றை விட்டும்,தீமைகளை விட்டும் விலக்கும்.திடமாக அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகப்பெரிதாகும்.அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்கின்றவறறை நன்கறிநதவன் ஆவான்.(அல் அன்கபூத்: 45)

தொழுகையானது வெறுமனே உடலைச் சுத்தம் செய்தலும் தேகப்பியாசம் புரிதலும் தானே என்று ஒருவர் நினைத்தால்,அவர் தொழுகையில் காணுகின்ற அசைவுகள்,நாவினால் மொழியும் வார்த்தைகள் ''அல்லாஹ் மிகப் பெரியவன்''''அவனே மிக உயர்ந்தவன்'' எனும் உண்மையை உள்ளத்தில் ஆழப்பதிய வைப்பதற்காகவே செய்யப்படுகின்றன என்ற யதார்த்தத்தைப் புரியத் தவறி விடுகின்றார்.

தொழுகையை நிறைவேற்றும் ஒருவர், தனது இரு கைகளையும் உயர்த்தி மொழியும் முதல் வார்த்தை ''அல்லாஹு அக்பர்'' என்பதாகும்.பின்னர், தனது இயலாமையை ஏற்று அல்லாஹ்வின் மகோன்னத நிலையை உணர்ந்தவனாக உள்ளச்சத்துடன் ''ருகூ.ஃ.'' செய்து '' ஸுப்ஹான றப்பியல் அளீம்'' எனும் துஆவை ஓதுவார்.

பின்னர், இறைநெருக்கத்தையும் பிரார்த்தனையும் ஏற்று அங்கீகரிக்கப் படுவதையும் எதிர்பார்த்தவனாக ''சுஜூது'' செய்வார்.அதில் நெற்றி மற்றும் மூக்கு என்பவற்றை நிலத்தின் மீது வைத்து ''ஸுப்ஹான றப்பியல் அ.ஃ.லா'' என்று பிரார்த்திப்பார்.

இவ்வாறு தொழுகையில் நிறைவேற்றப்படும் அனைத்து செயற்பாடுகளும் வெறுமனே சில அசைவுகள் மட்டுல்ல,ஒரு இறைவிசுவாசி தனது இறைவனோடு இறுக்கமான தொடர்பை ஏற்படுத்தி அவனிடமிருந்து வாழ்க்கைக்குத் தேவையான மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ளும் மிக அருமையான சில நொடிப்பொழுதுகளாகும்.

ஒரு நாளைக்கு ஐந்து நேரத்தொழுகைகளை முஸ்லிம்கள் மீது அல்லாஹ் விதியாக்கியுள்ளான்.பூமியில் எங்கு வேண்டுமானாலும் இவைகளை நிறைவேற்றலாம்.இருந்தாலும் கூட,முஸ்லிம்களுக்கிடையே இறுக்கமான உறவை வளர்த்துக் கொள்ளல்,அவர்களுக்கிடையில் ஒற்றுமையை வலுப்படுத்தல்,உலகம் மற்றும் மறுமை சார் விடயங்களில் பரஸ்பரம் உதவிக்கொள்ளல் என பல்வேறு காரணங்களின் நிமித்தம் தொழுகையை பள்ளிவாயில்களில் முஸ்லிம்கள் நிறைவேற்ற வேண்டுமென்பதை அல்லாஹ் ஊக்கப்படுத்தியுள்ளான்.

இவ்வாறே,உபரியான தொழுகைகளையும் நிறைவேற்றுவதில் கரிசனையுடன் செயற்படல் வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்திக் கூறுகின்றது. க.ஃ.பாவின் திசையை முன்னோக்கியவாறுதான் முஸ்லிம்கள் தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.

முஸ்லிம்களின் கிப்லாவானது,அறபுதீபகற்பத்தின் மேற்குத் திசையில் உள்ள மக்கா நகரிலே அமைந்துள்ள சதுர வடிவிலானதொரு கட்டடமாகும். நபிமார்களின் தந்தை இப்றாஹீம் (அலை) அவர்களே முதலில் இதனைக் கட்டி,பல நபிமார்களும் சென்று தரிசித்த புனித தளமாகும்.

இது மனிதனுக்கு எந்த நன்மைகளையோ அல்லது தீமைகளையோ ஏற்படுத்தாத கற்கள் என்பதை முஸ்லிம்கள் தெளிவாக அறிந்திருக்கின்றார்கள்.

இருந்தாலும்,முஸ்லிம்கள் அனைவரும் ஒரே திசையை முன்னோக்கி தொழும் ஒரே சமூகம் என்ற ஒற்றுமையைக் காட்டுவதற்காகவே,அவர்கள் அதனை முன்னோக்கித் தொழ வேண்டுமென அல்லாஹ் அவர்களைப் பணித்திருக்கின்றான்.

## அல் அதான்

தொழுகைக்கான நேரம் நுழைந்து விட்டது என்பதை மக்களுக்கு நினைவுறுத்தி,அவர்களைத் தொழுகைக்காக அழைப்பதனையே "அதான்" எனும் பதம் குறித்துக் காட்டுகின்றது.இது அல்லாஹ்வை நினைவு கூர்ந்து முஸ்லிம்கள் தொழுகைக்கு சமூகமளிப்பதற்காக அவர்களை ஆயத்தப்படுத்தும் ஒரு முறையாகும்.

அதான் கூறும் முறை:

1-அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்.

2-அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்


3-அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூ லுல்லாஹ்.

4-ஹய்ய அலஸ் ஸலாஹ்,ஹய்ய அலஸ் ஸலாஹ்

5-ஹய்ய அலல் ∴பலாஹ்,ஹய்ய அலல் ∴பலாஹ்

6-அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்

7-லா இலாஹ இல்லல்லாஹ்.



## ஸகாத்

உச்ச வறுமை,கொளுத்த செல்வம் ஆகிய இரண்டு பிரச்சினைகளும் அவசியம் தீர்க்கப்படல் வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

ஏழைகள் மற்றும் பணக்காரர்களுக்கிடையில் காணப்படும் இடைவெளி அளவின் மூலமே சமூகத்தில் நிலவிவரும் ஒழுக்கக்கேடுகள்,குற்றச்செயல்கள் மற்றும் சமூகப்பிளவுகள் போன்றவற்றை அளவிட்டுக்கொள்ளலாம்.

இப்பெரும் பிரச்சினையை தீர்ப்பதற்காகவே பல்வேறு நிதிசார் அமைப்புகள், சிந்தனைக் கோட்பாட்டுக்கொள்கைகள்,சட்டவாக்க முறைகள் என்பன தோற்று விக்கப்பட்டன.

இந்நிலையில்,இஸ்லாம் இதனை எவ்வாறு கையாள்கிறது?

புகறாக்கள்,மிஸ்கீன்கள் போன்ற தேவையுடையவர்களுக்கு பணக்காரர்கள் தங்களது சொத்துக்களிலிருந்து வருடாந்தம் 2.5 வீதம் வழங்குவதை அல்லாஹ் பர்ளாக்கி இருக்கின்றான்.இஸ்லாத்தின் கடமைகளுள் மூன்றாம் பெரும் கடமையாக இது கருதப்படுகின்றது.

ஸகாதானது,ஏழைகளுக்காக பணக்கார்களால் வழங்கப்படும் உதவி உபகாரத் தொகை அல்ல.மாறாக,அது பணக்காரர்களின் சொத்துக்களிலிருந்து ஏழைகளுக்காகவென்று பெறப்படுகின்ற உரிமையாக கருதப்படுவதோடு,யாசிப்பதன் மூலம் தங்களது கௌரவத்தை இளந்து விடாமல் தேவையுடையோருக்குச் சென்றடைகின்றது.

ஏழைக்காக வழங்கப்படும் இச்சிறுதொகைப் பணமானது பணக்கார முஸ்லிம்கள் மீது கட்டாயக்கடமையாகும்.போட்டி மனப்பான்மையுடன் இதனை விட அதிகமாக ஏழைகளுக்குத் தாராளமாகச் செலவு செய்வதற்கான வழிகள் திறந்தே உள்ளன.

இதன் விளைவாக,இவர்கள் தங்களது இவ்வுலக வாழ்வில் ஆரோக்கியம்,சொத்தில் விருத்தி,வெற்றி, சந்தோஷம் போன்றவைகளைப் பெற்றுக்கொள்வதோடு,மறுமையில் பன்மடங்கு கூலிகளையும் அடைந்துகொள்வார்கள்.

அல்லாஹ் அல் குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.அல்லாஹ்வின் பாதையில் தமது செல்வங்களை செலவு செய்வோருக்கான உதாரணம் ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மனிகளை கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தை போன்றது,அல்லாஹ் நாடியவர்களுக்கு (இதை மேலும்) இரட்டிப்பாக்குகிறான் இன்னும் அல்லாஹ் விசாலமான (கொடையாளன்) யாவற்றையும் நன்கு அறிபவன்.(அல் பகறா:261)

தேவையுடையோருக்குக் கொடுப்பது உளத்தூய்மையை ஏற்படுத்துகின்றது என்று அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களை விளித்துப் பேசுகின்றது."(நபியே..!) அவர்களது செல்வத்தில் இருந்து தர்மத்திற்கானதை எடுத்து கொண்டு அதனால் அவர்களை உளளும் புறமும் தூய்மை படுத்துவீராக.(அத் தௌபா:103).

அதேவேளை,பணத்தை செலவு செய்வதன் மூலம் ஏழைகளுக்கு உதவி செய்யாமல் கஞ்சனாக நடந்துகொணடால்,அவரே முதலாவது நஷ்டவாளன் என்றும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.ஏனெனில்,இவர் ஈருலக சௌபாக்கியங்களும் தனக்கு வேண்டாமெனக் கஞ்சப்படுகின்றார்.

அல்லாஹ் குறிபபிடுகின்றான் அறந்து கொள்க...! அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுமாறு அழைக்கப்படும் கூட்டத்தினர்,நீங்கள் ஆனால் உங்களில்

கஞ்சதனம் உடையோரும் இருக்கின்றனர்.ஆனால் எவன் கஞ்சதனம் செய்கின்றாரோ அவர் தன் ஆத்மாவுக்கே கஞ்சதனம் செய்கின்றார்.-அல்லாஹ் எவ்வித தேவையும் அற்றவன்.நீங்கள் தான் தேவையுடையவராக இருக்கின்றீர்கள். எனவே சத்தியத்தை நீங்கள் புறக்கணிப்பீர்களாயின் உங்களல்லாதவர்களை அவன் பதிலாக கொண்டு வருவான்.பின்னர் உங்களை போன்று அவர்கள் இருக்கமாட்டார்கள்.(முஹம்மத்:38).

உண்மையை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக பொருளாதார ஏற்றத் தாள்வுகள் நீங்கி சமூக சமநிலை மற்றும் சமூகப்பாதுகாப்புக் காப்புறுதி என்பன உருவாக்கப்படுகின்றன.

தகுதியானவர்களை இனங்கண்டு ஸகாதை வழங்குவதனூடாக சமூகத்தின் குறித்ததொரு சாராரிடத்தில் மாத்திரம் சொத்துக்கள் முடக்கப்பட்டு,அவைகள் அவர்களின் ஏகபோக உரிமைகளாக ஆக்கப்படும் நிலையிலிருந்து தவிர்க்கப் படுகின்றது.

ஸகாதை வழங்குவதற்கு தகுதியானவர்கள் உள்ளனரா? என்று இஸ்லாமிய நாடுகளில் தேடிப்பார்த்த போது,அங்கு அவ்வாறானவர்கள் இல்லை எனும் பதில் கிடைக்குமளவு ஆரோக்கியமானதொரு நிலை பல்வேறு தடவைகளில் உருவாகியிருக்கின்ற செய்தி ஆரம்ப கால முஸ்லிம்களின் வரலாறுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளமையானது இக்கடமை ஆக்கபூர்வமாக நடைமுறைப் படுத்தப்பட்டதன் நல்ல விளைவுகளே ஆகும்.

நல்லுறவு மற்றும் ஒற்றுமை போன்ற சமுகத்திற்கு இன்றியமையாத அடிப்படைகளை இது உருவாக்குகின்றது.ஏனெனில்,உதவி உபகாரங்கள் செய்தவர்களை நேசிப்பதானது மனித இயல்பாகும்.

இதன் காரணமாக,ஒரு கல் மற்றொரு கல்லை கெட்டிப்படுத்துகின்ற பலமானதொரு கட்டடத்தைப் போன்று முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவரை நேசித்து,பரஸ்பரம் ஒற்றுமையுடன் வாழ்வதோடு,கொள்ளை திருட்டு போன்ற சமூக விரோத செயல்கள் அவர்களுக்கு மத்தியில் குறைந்து விடும்.

> அல்லாவின் பொருத்தத்தை நாடி தங்களது செல்வத்தை செலவு செய்பவர்களை அல்குர்ஆன் இப்படி உவமிக்கின்றது.ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளை கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தைப்போன்றது. மேலும் இதை விட எழுநூறு மடங்காக அதிகப்படுத்தப்படும்.



# நோன்பு

வைத்தியர்களின் ஆலோசனைக்கிணங்க உடலின் நிறையைக் குறைத்து அதன் ஆரோக்கியத்தைப் பேணுவதற்வதற்காக மனதைக்கட்டுப்படுத்தி,உணவுக் கட்டுப்பாடுகள் மேற்கொள்பவர்களை நாம் ஆச்சரியத்தோடு நோக்குகின்றோம். உயரிய இலக்கை அடைந்துகொள்வதற்காக புரியப்பட்ட மிகப் பெரியதொரு சாதனையாகக் கூட இதனைக் கருதுகின்றோம்.

மனோ இச்சைகளை அடக்கி,இறைவனின் உத்தரவுகளுக்கு கட்டுப்படும் மனப்பக்குவத்தினைப் பெறும் நோக்கில் முஸ்லிம்கள் நோன்பு நோற்பதனூடாக மேற்குறித்த சாதனையை விட மிகப்பெரும் செயலைச் செய்கின்றனர்.

நோன்பானது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் இறுதிக் கடமையாகும்.நோன்பை நோற்க முடியுமான அனைத்து முஸ்லிம்கள் மீதும் இது விதியாகும்.சூரியன் உதயமானது முதல் மறையும் வரை சாப்பிடுதல், குடித்தல்,மனைவியுடன் உடலுறவு கொள்ளுதல் போன்றவைகள் நோன்பை முறித்து விடும் அம்சங்களாகும்.இஸ்லாமிய வருடத்தின் ஒன்பதாம் மாதமாகிய றமழான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் இதனை நோற்க வேண்டும்.

இது முன்னைய சமூகங்கள் மீதும் கடமையாக்கப்பட்டதொரு வணக்கமாகும். என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.சமூகங்களுக்கிடையில் நோன்பு நோற்கும் முறைகள் வேறுபட்டிருந்த போதும் ‘‘அல்லாஹ்வை வணங்குவதும் அவனுக்கு பயப்படுதல்’’ எனும் அதன் இலக்கு வேறுபடாமல் ஒன்றாகவே இருந்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்“ஈமான் கொண்டவர்களே...!உங்களுக்கு முன் இருந்தோருக்கு நோனபு விதியாக்கப்பட்டது போன்று அது உங்கள் மீதும் விதியாக்கப்பட்டுள்ளது.அதன மூலம் நீங்கள் இறையச்சம் உடையோர் ஆகலாம்.(அல் பகறா :183).

குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் தினமும் குறித்த சில மணிநேரங்கள் தீர்த்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட ஆசைகளைக் கூட முஸ்லிம்கள் அடக்கிக்கொள்கின்ற போது,ஏனைய காலப்பகுதிகளில் ஹராமான விடயங்களை விட்டும் விலகும் அளவிற்கு மனதைக்கட்டுப்படுத்தி வாழும் பக்குவத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

நோன்பு நோற்றதன் பின்னரும் தனது பண்பாடுகளை மாற்றிக்கொள்ளாத ஒருவன்,தான் நோற்ற நோன்பிலிருந்து எவ்விதப் பயனையும் அடைந்து கொள்ள மாட்டான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.“யார் பொய் சொல்வதையும் அதனடிப்படையில் செயற்படுவதையும் விடவில்லையோ அவர் உண்ணாமலும் குடியாமலும் இருப்பதில் அல்லாஹ்வுக்கு எவ்விதத் தேவையும் கிடையாது.” (அல் புகாரி:1804).

நோன்பாளி அனுபவிக்கும் பசியும் தாகமும் உணவின்றி பட்டினியால் வாடும் ஏழைகளுக்கு உதவும் மனப்பாங்கினை வளர்த்துவிடத் தூண்டும் மிக முக்கிய அம்சங்களாகும்.ஏனெனில்,அவர்கள் படும் அவலத்தை யதார்த்தபூர்வமாக ஒரு நோன்பாளியினால் மாத்திரமே அனுபவித்துப் பார்க்க முடிகின்றது.





# ஹஜ்

இறைவனை வணங்கி,அவனிடம் பிரார்த்தனை செய்யும் நோக்கில் யாத்திரிகைகள் மேற்கொள்ளும் வழக்கமானது,அதிகமான சமயங்களுக் கிடையில் காணப்படுகின்ற பொதுவானதொரு விடயமாகும்.

இஸ்லாத்தின் ஹஜ் யாத்திரிகையை பொறுத்த வரையில்,உலகிலுள்ள மிகப் பிரபல்யமான பாரியதொரு யாத்திரிகையாக இன்று வரை கருதப்பட்டு வருகின்றது.

இப்புனிதக் கடமையின் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக மிகச் சிறியதோர் இடத்தில் வருடாந்தம் 3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் திரளாக ஒன்று கூடுகின்றனர்.

இஸ்லாத்தின் பார்வையில்,ஹஜ் கடமை



ஹஜ் கடமையானது,இஸ்லாத்தின் நான்காவது பெரும் கடமையாக இருப்பதோடு,உடல் பலமும் பொருளாதார வசதியும் கொண்டவர்கள் இதனை வாழ்க்கையில் ஒரு தடவை நிறைவேற்றுவது வாஜிபாகும்.(கட்டாயமாகும்)

இது இன,நிற,வர்க்க வேறுபாடுகள் எதுவுமற்ற உன்னதமானதொரு பயணமாகும்.இங்கு கூடுகிற அனைவரும் ஒரே ஆடை அணிந்து,ஒரே நிறத்தில் ஒரே குரலில் ‘‘தல்பியா’’ முழங்கியவாறு இறைவனுக்கும் மனிதனுக்கு மிடையிலுள்ள இறுக்கமான தொடர்பை எடுத்துக்காட்டுகின்றனர்.

‘‘இறைவா......!உன் அழைப்பை ஏற்று இதோ ஆஜராகி விட்டோம். வணங்குவதற்கு உன்னையன்றி வேறெவருமில்லை.புகழனைத்தும் உனக்கே சொந்தம்.நீயே (எங்களை) படைத்து,பரிபாலித்துப் போஷிக்கும் நாயன்.உனக்கு இணையாக யாருமில்லை என்று உள்ளத்தால் ஏற்று நாவினால் மொழிகின்றோம்’’

நாவினாலும் உறுப்புக்களாலும் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்படும் ஈமானியப் பயணமே ஹஜ் கடமையாகும்.அல்லாஹ்வை ஞாபகமூட்டி அவனைப் பயப்படுதல்,அடியார்கள் தங்களது தேவைகளை இறைவனிடம் முன்வைத்தல்,பாவங்களுக்காக மன்னிப்புக்கோருதல் போன்ற அம்சங்களே இதன் இலக்குகலாகும்.நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் க.: பதுல்லாஹ்வைத் தவாப் செய்வது ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுவது அனைத்தும் அல்லாஹவை ஞாபகம் செய்யும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட வணக்கங்களாகும். (இப்னு அபீ ஷைபா: 15334).



தைக்கப்படாத வெறும் இரண்டு துணிகளை உடுத்திக்கொண்டு தனது வழமையான ஆடைகளை களைந்து விட்டு ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் மனிதன் சமத்துவத்தையும் இறைவனுக்கு மட்டும் கட்டுப்படும் தனது உணர்வையும் பிரகடணம் செய்கின்றான்.



# குடும்பம்,ஓர் இஸ்லாமிய நோக்கு

# குடும்பம்

குடும்பம் என்பது தனிநபர்களைக் கொண்டதொரு அலகாகும்.அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரே வீட்டுக்கான பல திறவுகோள்கள் உள்ளன என இன்றைய பல குடும்பங்களின் நிலை பற்றிக் கூறுவது முற்றிலும் உண்மையாகும்.

துரதிஷ்டவசமாக பல இளைஞர்கள் தங்களது மனைவி மற்றும் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் பெறுப்புக்களை விட்டும் ஒதிங்கிச் செல்கின்றனர்.

இவ்வாறு பொறுப்புக்களை மறந்த நிலையில் அவர்களுடைய சந்தோஷங்களையும் இன்பங் களையும் பகிர்ந்து கொள்வதிலிருந்து அவர்களை தடுத்து விட்டது எதுவாக இருக்கலாம்....?


இக்காலத்தில் மார்க்கத்தின் வழிகாட்டல் மிகத்தெளிவாக வெளிப்பட்டும் கூட வரலாற்றின் தோற்ற காலம் முதல் மனிதர்கள் அறியாமையெனும் இருளில் தான் இருக்கின்றனர்.

சமுகம் மற்றும் மனிதர்கள் மீது ஏற்படப் போகும் மோசமான விளைவுகளைக் கருத்திற் கொள்ளாது சுயநலன்களை மாத்திரம் கவனத்தில் எடுக்கும் வெகுளித்தனமானதொரு போக்குதான் இது என்பதே யதார்த்தமாகும்.

தனி மனிதர்களுக்கான உரிமைகளையும் கடமைகளையும் வாழ்வியல் ஒழுங்குகளையும் ஏற்படுத்தியதன் மூலம் இஸ்லாம் குடும்பமென்ற இந்தப் பகுதியில் அதிகூடிய கவனத்தைச் செலுத்தியுள்ளது.இஸ்லாத்தின் பார்வையில்,குடும்பமென்பது கல்வி,ஒழுக்கம்,எழுச்சி என்பவற்றின் கூட்டு மையமாகும்.இதன் வளர்ச்சியில் தான் ஒட்டுமொத்த சமூகத்தின் எழுச்சியும் தங்கியுள்ளது.

பின்வரும் விடயங்களினூடாக,இது வெளிப்படுத்தப்படுகிறது.

**1**



1.சமூகத்தின் அச்சானியாக விளங்கும் குடும்பத்தை அமைப்பதற்கு திருமணம் எனும் விடயத்தினை அடிப்படையானதோர் அம்சமாக இஸ்லாம் நோக்கியுள்ளது.

- மேலும்,இதை இறைத்தூதர்களின் வழிமுறைகளுள் ஒன்றாகவும் மிகவும்,உயர்ந்ததொரு செயலாகவும் ஆக்கியுள்ளது.இதை பற்றி நபி (ஸல்) இவ்வாறு கூறினார்கள்:“எனினும், நான் நோன்பு நோற்கின்றேன், அதனை விடுகின்றேன்.மேலும் தொழுகின்றேன்,தூங்குகின்றேன், திருமணம் செய்கிறேன்.யார் எனது வழிமுறையை வெறுக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்லர்” (அல் புகாரி : 4776).

- கற்பைப் பாதுகாக்கும் நோக்கில், திருமணம் செய்ய விரும்பும் ஒருவருக்கு மிக இலகுவாகவே அதனைச் செய்வதற்கு அல்லாஹ் உதவுகின்றான்.

இதனையே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“நிச்சயமாக,அல்லாஹ் மூன்று நபர்களுக்கு உதவி செய்வான். “கற்பைப் பாதுகாக்கும் நோக்கில் திருமணம் செய்பவர்” அம்மூவருல் ஒருவராவார்.” (அத் திர்மிதி : 1655).

- மனிதர்கள் மீது புரியப்பட்டுள்ள அருட்கொடைகள் பற்றி அல் குர்ஆன் பேசுகிற போது,கணவன் மனைவிக்கிடையில் அல்லாஹ் ஏற்படுத்திருக்கும் மன அமைதியும்,அன்பும் அவனது முதன்மையான அருட்கொடைகள் மற்றும் அத்தாட்சிகள் என்று குறிப்பிடுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் : (நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவததற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து, உங்களுக்கிடையில்

அன்பையும்,கிருபையையும் ஆக்கியிருப்பது அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.(அர் ரூம் :21).

- இளைஞர்கள் தங்களது வாலிபப் பருவம் முறுக்கேறிய நிலையில் இருக்கின்ற போதே,மணம் முடிக்க வேண்டுமென்று இஸ்லாம் அவர்களைப் பணிக்கின்றது.

திருமணம் செய்வதானது,உண்மையில் அவர்களது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கான சமய ரீதியிலான தொரு தீர்வாக அமைவதோடு, அவர்களுக்கு மன அமைதியையும் ஆறுதலையும் வழங்குகின்றது.

> மனிதர்கள் மீது புரியப்பட்டுள்ள அருட்கொடைகள் பற்றி அல் குர்ஆன் பேசுகின்ற போது,கணவன் மனைவிக் கிடையில் அல்லாஹ் ஏற்படுத்திருக்கும் மன அமைதியும்,அன்பும் அவனது முதன்மையான அருட்கொடைகள் மற்றும் அத்தாட்சிகள் என்று குறிப்பி டுகின்றது.



## 2



குடும்ப அங்கத்தவர்கள் (அவர்கள் ஆணாயினும் பெண்ணாயினும்) அனைவருக்கும் இஸ்லாம் முழுமையான கௌரவத்தை வழங்கியுள்ளது.

பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பினை அல்லாஹ் பெற்றோர்களுக்கே வழங்கியுள்ளான்.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுவதை தான் கேட்டதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

உங்களுள் ஒவ்வருவரும் பொறுப்பாளிகளாவர்.ஆவரவர் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வருவரும் வினவப்படுவர்:ஆட்சியாளர் பொறுப்பாளியாவார் அவரது பிரஜைகள் பற்றி அவர் வினவப்படுவார். ஓர் ஆண் அவரது குடும்பத்துக்கு பொறுப்பாளியாவார் அவரது குடும்பம் பற்றி அவர் வினவப்படுவார்.ஒரு பெண் அவளது கணவனின் வீட்டுக்கு பொறுப்பாளி ஆவார் அவள் அவளது பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவார். ஓர் ஊழியர் தனது எஜமானனின் சொத்துக்களுக்கு பொறுப்பாளியாவார் அவரது பொறுப்புக்கள் பற்றி வினவப்படுவார்.(அல் புகாரி : 853, முஸ்லிம் : 1829)

## 3

பெற்றோர்களுக்கு உரிய கௌரவத்தினை பிள்ளைகள் வழங்கவேண்டுமென்று இஸ்லாம் அவர்களைத் தூண்டுகின்றது.

மேலும்,அவர்கள் மரணிக்கும் வரை அவர்களை அன்போடும் கருணை யோடும் பராமரிக்குமாறும் அவர்களது கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கு மாறும் பிள்ளைகளை இஸ்லாம் பணிக்கின்றது.

பிள்ளைகள் பெரியவர்களானாலும் கூட,அவர்களது பெற்றோர்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு நடப்பதும் உதவி உபகாரம் புரிவதும் கட்டாயக் கடமையாகும்.


இவ்வாறு நடந்து கொள்வதை அல்லாஹ் தனக்குச் செய்கின்ற வணக்க வழிபாடுகளோடு இணைத்துப் பேசும் அதேவேளை,அவர்கள் வெறுக்கும் வகையில் சப்தத்தை உயர்த்தி பேசுவது உட்பட பேச்சிலும் செயலிலும் அவர்களுடன் கடினமாக நடந்துகொள்வதையும் தடைசெய்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்:“அவ்விருவருக்கும் (இழித்துக் கூறப்படும் வார்த்தைகளிலுள்ள) ‘‘சீ’’ என்று (கூட) நீ சொல்ல வேண்டாம்; (உம்மிடமிருந்து) அவ்விருவரையும் விரட்டி விடவும் வேண்டாம்;அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக ! (அல் இஸ்ரா∴ : 23).



> பேற்றோர் வெறுக்கும் விதமாக சப்தத்தை உயர்த்தி பேசுவது அவர்களுடன் கடினமாக நடந்து கொள்வது போன்ற அனைத்து செயற் பாடுகளையும் இஸ்லாம் தடை செய்துள்ளது.


## 4



பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும், செலவு செய்கின்ற போதும் ஏனைய வெளிப் படையான விடயங்களைக் கையாள்கின்ற சந்தர் பங்களிலும் அவர்களுக்கிடையில் நீதமாக நடந்து கொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் பெற்றார்களைப் பணிக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘தனது குடும்பத்திற்குச் செலவு செய்வதில் உதாசீனம் செய்வது ஒருவன் பாவி என்பதற்குப் போதுமான சான்றாகும்’’ (அபூ தாவுத் :1692) மேலும், எவர் இந்தப் பெண் பிள்ளைகளின் ஏதாவதொரு விடயத்தைப் பொறுப்பெடுத்து அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டால்,அப்பிள்ளைகள் (மறுமையில்) நரகிலிருந்து அவரைத் தடுக்கும் திரையாக ஆகிவிடுவார்கள. (அல் புகாரி).

## 5



உறவுகளைப் பேணி நடப்பதானது,ஒரு முஸ்லிமின் மீதுள்ள கட்டாயக் கடமையாகும்.

மனிதன்,தனது தாய் தந்தையினரின் வழி வந்த அவனது பின்வரும் உறவினர்கள் போன்றோருடன் சேர்ந்து அவர்களுக்கு உதவி உபகாரம் புரிவதே இதன் பொருளாகும்.

உதாரணமாக, சகோதர சகோதரிகள்,மாமா,மாமி அவர்களின் பிள்ளைகள், சாச்சா,சாச்சி அவர்களது பிள்ளைகள் போன்றோரைக் குறிப்பிடலாம்.

இவர்களோடு உறவுகளை பேணுவது மிகப்பெரும் வணக்கமாகக் கருதும் இஸ்லாம், இவர்களோடுள்ள உறவை துண்டித்து வாழ்வதை மிகக் கடுமையாக எச்சரிப்பதோடு இதனை பெரும் பாவங்களுள் ஒன்றெனவும் நோக்குகின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

‘‘உறவுகளைத் துண்டித்து வாழ்பவன் சுவனம் நுழைய மாட்டான்’’ (அல் புகாரி : 5638, முஸ்லிம் : 2556)



# இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்து



தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படும் விளம்பரங்கள்,சாலையோரங்களில் காட்சிப் படுத்தப்படுகின்ற விளம்பரப் பதாதைகள் மற்றும் சஞ்சிகைகளின் அட்டைப்படங்கள் போன்றவற்றை மேலோட்டமாக நோக்கி னாலே சடவாத சகதியில் சிக்கித் தவிக்கும் மிலேச்சத்தனமான இந்த நாகரீகம் எத்துனை பாரிய குற்றங்களை பெண்ணினத்திற் கெதிராக கட்டவிழ்த்துள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

மிருகத்தனமான இச்சைகளையும் மிக மோசமான விரச உணர்வுகளையும் தூண்டுவதற்கான பொம்மைகளாகவும் போகப்பொருட்களாகவுமே பெண்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர்.

பெண்களை அவமதித்து,சர்வசாதாரணமாக விற்கவும் வாங்கவும் படுகின்ற அற்ப வர்த்தக பண்டங்களாகவே பண்டைய சமூகங்கள் இவர்களை நோக்கினர்.

இச்சமூக சூழலில் இதனை விடவும் மிக இலக்காரமாகவே இவர்கள் பார்க்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான பல்வேறு கொடுமைகளுக்கும் அநியாயங்களுக்கும் உள்ளான பெண்ணினத்தை இவற்றிலிருந்து மீட்டு கௌரவமானதொரு நிலையை நோக்கி கொண்டு செல்வதற்கான எந்தவொரு வழியையும் நீண்டநெடிய அவர்களின் வரலாற்றில் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

1400 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாம் தோன்றிய போது,வரலாற்று நெடுகிலும் பெண்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த வன்செயல்களை எதிர்த்து உண்மையானதொரு புரட்சி ஆரம்பிக்கப்பட்டது.

பெண்களின் கௌரவம் மற்றும் உரிமைகளைப் பாதுகாத்த நிலையில், வாழ்வில் இஸ்லாத்தை முழுமையான வடிவில் பின்பற்றி வாழும் கௌரவமும் உயர்வும் பெற்ற பெண்மணிகளாக வாழவைப்பதற்குத் தேவையான நுணுக்கமான சட்டங்கள் மிகவும் பரந்தளவில் இஸ்லாத்தினால் வகுக்கப்பட்டன.

அல் குர்ஆனின் மிக நீண்டதொரு அத்தியாயத்திற்கு “ஸூரதுன் நிஸா” எனும் பெயர் வழங்கப்பட்டுள்ளது.இவ்வத்தியாயமானது,பெண்கள் பற்றிய விரிவான சட்டங்களை எடுத்துக் கூறுகின்றது.

நல்ல பெண்மணிகள் பலரினது,வாழ்க்கை வரலாறுகள் தொடர்பாகவும் அல் குர்ஆன் பேசுகின்றது.இது மட்டுமல்லாது,இதன் மற்றுமொரு அத்தியாயத் திற்குப் பெயராக ஈஸா (அலை) அவர்களின் தாயின் “மர்யம்” எனும் பெயரே இடப்பட்டுள்ளது.

இவ்வாறு தான்,பெண்கள் பற்றிய அன்றிருந்த வித்தியாசமான பார்வையை இஸ்லாம் மாற்றியமைத்தது.இதன் பின்னரே,பெண்கள் வெறும் பண்டங்களாக அன்றி,மனிதப்பிறவிகளாகவும் இரவு நேரத் துணையாக மாத்திரம் அல்லாமல்,வாழ்க்கைத் துணையாகவும் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான போகப்பொருட்களாக மட்டுமல்லாமல்,கணவனுக்கு மன அமைதியையும் கருணையையும் அள்ளிக்கொட்டும் அனபின் உறைவிடமாகவும் இவர்கள் உயர்த்திப்பார்க்கப்பட்டனர்.

“

இஸ்லாம் பெண்ணினத்திற்கு அநியாயம் செய்து,அவர்களின் உரிமைகளை மீறுகின்றது.என நவீன நாகரிகத்தின் தேவைகளுக்கு ஏற்றால் போல அது தாளம் போடத் தவறிவிட்டது என்றெல்லாம் சந்தேகங்கள் வெளியிடப்படும் இந்த காலப் பகுதியில் பிரித்தானியா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளில் புதிதாக இஸ்லாத்தில் இணைந்துகொள்பவர்களில் 75 % ஆனவர்கள் பெண்களே ஆவர்.

குடும்பம் பற்றிய இஸ்லாத்தின் சட்டதிட்டங்களையும் வழிகாட்டல்களையும் படித்ததன் பின்னரே,குறிப்பாக இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றனர் என்பது மிக முக்கிய விடயமாகும்.) INDEPENDET 6-11-2011).



கணவனைத் தெரிவுசெய்யும் உரிமையை பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளமை.

- பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் பொறுப்பில் பெரும் பகுதி இவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:"ஒரு பெண் தனது கணவனின் வீட்டுக்குப் பொறுப்பாளி ஆவாள். அவளின் இப்பொறுப்பு பற்றி அவள் வினவப்படுவாள்" (அல் புகாரி : 853).

- தனது பெயரை தந்தையின் பெயரோடு இணைத்து பயன்படுத்த இஸ்லாம் பெண்களுக்கு அனுமதித்துள்ளமை.

திருமணத்தின் பின்னர் தனது பெயரை கணவனின் பெயரோடு இணைத்து பயன்படுத்தாது,தந்தை மற்றும் குடும்ப பெயரோடு இணைத்தே தொடர்ந்தும் பயன்படுத்தலாம்.

- பணப் பரிமாற்றம் உள்ளிட்ட வித்தியாசமான பல்வேறு விவகாரங்களில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் நிறைவான சமத்துவத்தினை இஸ்லாம் பேணிவருகின்றது. நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"பெண்கள் ஆண்களின் சரி பாதிப் பகுயினராவர்" (அபூ தாவூத் : 236).

- மனைவி மற்றும் தனது செலவில் தங்கிவாழும் தாய், மகள் போன்றோரை பராமரிப்பதும் செலவலிப்பதும் கணவனின் கட்டாயப் பொறுப்பாகும்.

இதன் போது, இவர்களிடமிருந்து எந்தவொரு நன்மையையும் எதிர்பார்க்கக்கூடாது.

- சொத்துரிமை பெறும் அதிகாரத்தை பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளமை.

சொத்தில் நீதமான கௌரவமான பங்கொன்றினை இவர்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது.

இந்த வகையில்,சில இடங்களில் இவர்கள் ஆணுக்குச் சமமான பங்கினைப் பெறுவதோடு,மற்றும் சில சந்தர்பங்களில் இவர்களின் சொத்துப் பங்கானது,இவர்களது உறவுமுறை மற்றும் குடும்பத்திற்குச் செலவு செய்யும் பொறுப்புக்கள் என்பவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றது.

- அநாதரவான நிலையிலுள்ள பலவீனமான பெண்களுக்கு தொண்டு செய்வதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளமை.

உறவுகள் யாருமின்றி சிரமத்தோடு வாழும் பெண்களுக்கு தொண்டு செய்வதனை இஸ்லாம் ஊக்கப்படுத்தியுள்ளதுடன் அல்லாஹ்வின் பார்வையில் மிகச் சிறந்ததொரு வணக்கமாகவும் இதனைக் கருதுகின்றது.நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விதவைகளையும் ஏழைகளையும் பராமரிக்கின்றவர் அல்லாஹ்வின் பாதையில் போராடும் போர் வீரர் போலாவார் அல்லது தளராமல் இரவில் நின்று வணங்குபவர் போலாவார் அல்லது நோன்பை திறக்காமல் தொடராக நோன்பு வைப்பவர் போலாவார்.(அல் புகாரி : 5661, முஸ்லிம் : 2982)

"சொத்தில் நீதமான கௌரவமான பங்கொன்றினை பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது.

இந்த வகையில், சில இடங்களில் இவர்கள் ஆணுக்குச் சமமான பங்கினைப் பெறுவதோடு, மற்றும் சில சந்தர்பங்களில் இவர்களின் சொத்துப்பங்கானது, இவர்களது உறவு முறை மற்றும் குடும்பத்திற்குச் செலவு செய்யும் பொறுப்புக்கள் என்பவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றது.

## மிகக் கரிசணையோடு பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என இஸ்லாம் வலியுறுத்தும் பெண்கள் :

தாய் : அபூ ஹுரைறா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபியவர்களிடம் ஒருவர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! மனிதர்களுள் யாருடன் மிக இரக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென கேட்டார்? அதற்கு அவர் உமது தாய் எனப் பதிலளித்தார்கள்.

பின்னர் யாருடன்? என்று கேட்டார் “உனது தாய்” என்றார்கள்,பின்னர் யாருடன் என்று வினவ“உனது தாய்” என்றார்கள்.பின்னர் யாருடன் என்று கேட்க “உனது தந்தை” எனப் பதிலளித்தார்கள். (அல் புகாரி : 5626)

மகள் : நபியவர்கள் பின்வருமாறு கூறுவதைத் தான் செவியுற்றதாக உக்பத் இப்னு ஆமிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் “யாருக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருந்து அவர்களுடன் பொறுமையாக நடந்து கொண்டு அவரின் உழைப்பிலிருந்து அவர்களுக்கு உணவளித்து, ஆடை கொடுத்து வளர்த்தால்,அப்பிள்ளைகள் மறுமையில் நரகிலிருந்து அவரைத் தடுக்கும் திரையாக ஆகிவிடுவார்கள் (இப்னு மாஜா : 3669).

மனைவி : நபியவர்கள் கூறியதாக ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் “உங்களது குடும்த்திற்குச் சிறந்தவரே உங்களுள் மிகச் சிறந்தவர்” நான் உங்களுள் எனது குடும்பத்திற்கு மிகச் சிறந்தவனாவேன். (அத் திர்மிதி : 3895)

## ஆண்களும் பெண்களும் மோதிக்கொள்வதற்கான எந்தவொரு இடமுமில்லை :

இருபாலினருக்கிடையில் மோதல் எனும் விடயம் இஸ்லாமிய வழிகாட்டலில் கிடையாது.உலக இலாபங்களை ஈட்ட வேண்டும் என்பதற்கான பயங்கரப் போட்டிகளும் அவர்களுக்கிடையே கிடையாது.ஆணினம் பெண்ணினத்தையோ அல்லது பெண்ணினம் ஆணினத்தையோ ஒரு தரப்பினர் மற்றுமொரு தரப்பினை இழிவுபடுத்தவோ விமர்சிக்கவோ எந்தவொரு தேவையுமில்லை.

மனிதன் தனது மறுபாதியோடு சண்டையிட்டுக்கொள்வான்?அவன் எவ்வாறு உடன்பிறப்புக்களுடன் முரண்பட்டுக்கொள்ள முடியும்? ஓர் ஆணின் உடன்பிறப்பாகவும் அவனின் மறுபாதியாகவும் பெண்கள் கணிக்கப்படுகின்றனர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இரு சாரார்களுக்குமிடையிலான உறவு முழுமைத்துவம் பெற்றதாகும்.முஸ்லிம் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒருவரின் குறையை மற்றவர் மறைத்து வாழ்வதே சிறந்த வழியாகும்.

இவர்களுக்கிடையிலான முழுமைத்துவம் பெற்ற இந்த உறவை பின்வரும் இறைவசனத்தில் அல் குர்ஆன் மிகவும் அற்புதமாக உருவகப்படுத்திக் காட்டுகின்றது."அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும்,நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்.(அல் பகறா :187).

ஆண்கள் எடுத்த எடுப்பில் பெண்களிடம் பலவீனங்கள் இருப்பதாகவே பார்க்கின்றார்கள்.ஆனால்,ஆண்களால் கூட சாதிக்க முடியாத குடும்பத்திற்குத் தேவையான ஒரு வகை வலிமை அவர்களிடம் காணப்படுவதை யதார்த்த பூர்வமாக நோக்கலாம்.

இவ்வாறே,பெண்கள் ஆண்களை குறைகள் நிறைந்தவர்களாகவே நோக்குகின்றார்கள்.இருந்தும் கூட,அவர்களுக்கு முற்றிலும் பொருந்தாத ஒரு வகையான ஆற்றல் தங்களிடம் உள்ளது என்பதை ஆண்கள் வெளிக்காட்டி விடுகின்றனர்.

எது எப்படியோ,பெண்கள் இன்றேல் ஒரு சமூகத்தின் வாழ்வு நிலைபெற முடியாது.மனிதனிலிருந்தே அல்லாஹ் ஆண்,பெண் என்ற இரண்டு சாரார்களையும் படைத்து விட்டு அனைத்து விடயங்களிலும் இவ்விரு இனங்களும் ஒரே மாதிரியாகவே இருக்க வேண்டுமெனக் கூறுவது முறையாகாது.

ஆண்கள்,பெண்களும் ஒரு சாரார் மற்றுமொரு சாராருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை மாறி மாறிப் பெற்றுக்கொள்ள விரும்பிய போது பின்வரும் திருமறை வசனங்கள் இறக்கியருளப்பட்டன."மேலும் எதன் மூலம் உங்களில் சிலரை வேறு சிலரை விட மேன்மையாக்கியுள்ளான்.அதனை அடைய வேண்டுமென பேராசை கொள்ளாதீர்கள்.ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவற்றில் பங்குண்டு.பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவற்றில் பங்குண்டு.எனவே அல்லாஹ்விடம் அவன் அருளை கேளுங்கள்.(அந் நிஸா: 32).

அனைவருக்கும் அவரவருக்குரிய தனித்துவங்களும் கௌரவங்ளும் வழங்கப்பட்டுள்ளன.ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் அருளையும் அவன் திருப்தியையும் பெருவதற்கு முயற்சி செய்யலாம்.உண்மையாகவே இஸ்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய கௌரவத்தினை வழங்கியுள்ளது.மேலும் அவர்கள் ஒவ்வருவருக்கும் வேறுபட்ட பல்வேறு பண்புகளையும் பணிகளையும் வழங்கியுள்ளது.எனவே அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் அன்பையும் பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

மேலும்,இருதரப்பினர்களுள் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் எந்தொரு விஷேட சிறப்புச் சலுகைகளையும் இஸ்லாம் வழங்கவில்லை.மாறாக அனைவரினதும் நலன்களையும் விருத்தி செய்வதற்கே இஸ்லாம் பொதுவாக உழைக்கின்றது.

## ஆண் -பெண் உறவு

ஆண்- பெண் தொடர்பானது,சட்டங்கள் வழக்காறுகள் என்பவற்றின் மூலமே ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.இவைகளை வரையறை செய்வதில் வரலாற்று நெடுகிலும் மனிதனின் தனிபட்ட விருப்பு வெருப்புக்களே செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

முழு நிர்வாணமாக இருப்பதையோ அல்லது இரு பாலாருக்குமிடையில் காணப்பட்ட மிக மோசமான பாலியல் கோளாறுகளையோ ஒரு பொருட்டாகவேனும் நோக்காத ஒரு சமூகம் குறித்து வரலாறு மற்றும் மானுடவியல் நூற்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

“பெண்கள் மீது அச்சம் கொண்டு அவர்களை இரும்புச் சங்கிலிகளால் கட்டிவைத்தனர்.மற்றும் சிலர் ஆண்களை அல்லாது பெண்களை அல்லது உடலின் சில பகுதிகளை மாத்திரம் மறைத்து வந்தனர்.மேலும்,மட்டிட முடியாத அளவு வேறுசில மோசமான விடயங்களிலும் ஈடுபட்டு வந்தனர்”

மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமிடையிலான அனைத்து வேறுபாடுகளும் நீங்கிய மிலேச்சத்தனமானதொரு வாழ்க்கையாக மனித வாழ்வு மாறிவிடக் கூடாது என்பதற்காக ஆண்-பெண் உறவை வரையறை செய்வதற்கான சட்ட ஒழுங்குகள் அவசியம் உருவாக்கப்படல் வேண்டுமென்று அன்றைய சமுகங்களில் வாழ்ந்த ஓரளவு நாகரிமடைந்த தரபபினர் கருதிவந்தனர்.

## இஸ்லாத்தின் பார்வையில்,ஆண்-பெண் உறவும் அதன் இயல்பு நிலையும்

இஸ்லாம் முன்வைக்கின்ற ஆண்-பெண் உறவு எனும் தொடர்பானது,வரலாறு மற்றும் புவியியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல.அது எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் ஒத்திசைந்து செல்லக்கூடியதொரு ஒழுங்காகும்.

இதை,அல்லாஹ் தனது திருமறையில் இறக்கி வைத்ததோடு,நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது சமூகத்திற்கு போதித்தும் வந்தார்கள்.

ஆண்-பெண் உறவானது, அவர்களுக்கிடையில் காணப்படுகின்ற வித்தியாசமான இயல்பு நிலைகளுக்கேற்ப வேறுபட்டதாகவே காணப்படும்



ஓர் பெண்ணைப்பொறுத்த வரையில் ஆண்கள் பல்வேறு வகையினராக வகைப்படுத்தப்படுகின்றனர்:

1. பெண்ணின் கணவனாக ஆண் இருத்தல்:

கணவன்,மனைவி ஆகிய இரு தம்பதியர்களுக்கிடையில் இருக்க வேண்டிய உறவின் இயல்பு நிலை பற்றி அல்குர்ஆன் மிகவும் நுணுக்கமாக விளக்குகின்றது.ஒருவர் மற்றவருக்கு ஆடையாக உள்ளனர் என்று கூறுவதன் மூலம் அவர்களுக்கிடையிலுள்ள உடல்,உள்ளம்,உணர்வு சார்ந்த அனைத்துத் தொடர்புகளையும் அற்புதமாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான்."அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும்,நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்.(அல் பகறா :187).

2. அவன் அவளுக்குரிய மஹ்ரமிய ஆணாக இருத்தல்.

நெருங்கிய உறவு முறை காரணமாக,ஒரு பெண்ணினால் (ஒரு போதும்) திருமணம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படாத ஆண்களையே "மஹ்ரமி" எனும் சொற்பிரயோகம் குறிக்கின்றது.

அவர்கள் பின்வரும் 13 வகை ஆண் உறவினர்களாவர்:

தந்தை,பாட்டன்,மகன்,சகோதரன்,மாமா,சிறிய தந்தை அல்லது பெரிய தந்தை,சகோதரனின் மகன் அல்லது சகோதரியின் மகன்,மகனின் மகன் அல்லது மகளின் மகன்,இன்னும் சிலர்...

பெண்களுக்கென்று வரையறுக்கப்பட்ட ஹிஜாபின்றி வழமையான ஆடைகளுடன் மஹ்ரமிகளாகவுள்ள இந்த ஆண் உறவினர்களுக்கு முன்னால பெண்கள் தோன்ற முடியும்.

3. ஆண்,அவளுக்கு "அஜ்னபி" யான ஒருவராக இருத்தல்.

"அஜ்னபி" ஆன ஆண் என்பவர் ஒரு பெண்ணுக்கு மஹ்ரமில்லாதவர் ஆவார்.

இவ்வாறான நிலையிலுள்ள ஆண்களோடு ஒரு முஸ்லிம் கொண்டிருக்க வேண்டிய உறவு தொடர்பான சட்டங்களையும் வரையறைகளையும் இஸ்லாம் வகுத்துள்ளது.

இவைகளைப் பேணுவதன் மூலம் மக்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதையும் மனிதர்களை ஷைத்தானின் தீய வழிக்கு இட்டுச் செல்லும் காரணிகளை விட்டும் தடுப்பதையுமே இஸ்லாம் நோக்காக கொண்டுள்ளது.

மனிதனைப் படைத்த அல்லாஹ் அவனுக்குப் பொருத்தமானவைகள் யாது என்பதையும் அவன் நன்கு அறிந்து வைத்துள்ளான்.

இதனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :(யாவையும்) படைத்தவன்,அவனோ நுட்பமான (அறிவுடைய)வனாக, யாவையும் நன்குணர் பவனாக இருக்க (நெஞ்சங்களில் உள்ளவற்றை) அவன் அறிய மாட்டானா? (அல் முல்க் : 14).

## ஆண்களுக்கும் அந்நிய பெண்களுக்குமிடையிலான தொடர்புகளின் போது கவனத்திற்கொள்ள வேண்டிய வரையறைகள்:

1. பார்வையைத் தாழ்த்துதல்:

ஆண்களும் பெண்களும் தங்களது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டுமென அல்லாஹ் பனித்திருக்கின்றான்.ஏனெனில்,இவ்வாறு நடந்து கொள்வதானது,மனிதர்கள் தங்களது கற்பு மற்றும் கௌரவம் என்பவற்றை பாதுகாப்பதற்கானதொரு வழியாகும்.

வரையறைகளை மீறிய நிலையில் பொதுவாகவே பெண்களைப் பார்ப்பது பாவங்களுக்கு வழி வகுக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான் :(நபியே!) விசுவாசிகளுக்கு நீர் கூறுவீராக: "அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிக்காத்துக் கொள்ளவும்; "அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்; நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் செய்பவைகளை நன்கு உணர்பவன்.மேலும், (நபியே !) விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக: "தங்கள் பார்வை களை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவும்.(அன் நூர் : 30 - 31).

2. ஒழுக்கத்துடனும் பண்பாட்டுடனும் நடந்துகொள்ளல் :

ஓர் ஆணும் பெண்ணும் கல்வி மற்றும் தொழில் சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது,இருவரும் ஒழுக்கத்துடனும் பண்பாட்டுடனும் நடந்து கொள்வதோடு பாலியல் உணர்வுகளைத் தூண்டும் விடயங்களை அனைத்து வழிகளிலும் தவிர்த்து கொள்ளல் வேண்டும்.


3. "ஹிஜாப்" அணிதல்.

ஆணுக்கு அல்லாமல் பெண்ணுக்கு மாத்திரமே "ஹிஜாப்" அணிவதை அல்லாஹ் கட்டாயமாக்கியுள்ளான்.

ஏனெனில்,அவளிடமே ஆண்களை மிக இலகுவில் பாவத்தில் ஈடுபடச் செய்கின்ற இயல்பான அழகும் கவர்ச்சியும் அதிகமாகவே உள்ளன.இந்நிலை ஆண்களில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

### அந்நிய ஆண்களுக்கு முன்னால் பெண்கள் "ஹிஜாப்" அணிவதை இஸ்லாம் கடமையாக ஆக்கியது ஏன்?

- ஒரு பெண் தனது கற்பையும் கௌரவத்தையும் பாதுகாத்துக் கொண்டு, தொழில் மற்றும் கல்விசார் துறைகளில் ஈடுபடுவதன் மூலம் சமூகம் மற்றும் சொந்த வாழ்வினது அவளின் இலக்குகளை சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.
- பாலியல் உணர்வுகளைத் தூண்டும் சந்தர்பங்களைக் குறைத்தல்.இது ஒரு புறம் சமூகத்தின் தூய்மையை உத்தரவாதப் படுத்துவதோடு மறுபுறம் பெண்ணின் கௌரவத்தையும் பாதுகாக்கும்.
- பெண்களைப் பார்த்து ரசிக்கும் ஆடவர்களின் விரச உணர்வுகளைக் கட்டுப்படுத்தி,கற்பொழுக்கத்துடன் வாழ இது அவர்களுக்கு உதவுவதோடு, பாலியல் உணர்வுகளைத் தூண்டும் காமப் பொருளாக பெண்களை நோக்காது கல்வியும் பண்பாடும் நிறைந்ததொரு மனிதப்பிறவிகளாக அவர்களை நடத்தும் நிலையை உருவாக்கும்.



# உணவு தொடர்பான இஸ்லாத்தின் சட்ட ஒழுங்குகள்



# பன்றியும்

பன்றியும் போதை வஸ்துக்களும் ஏன் ஹராமாக்கப்பட்டுள்ளன? என்பதே இஸ்லாத்தை அறிய விரும்பும் ஒருவரால் முன்வைக்கப்படும் முதல் வினாக அமைவது வழக்கமாகும்.

இவ்வினாவிற்கு விடையளிப்பதற்கு சில முக்கிய விடயங்கள் குறித்து விளக்குவது அவசியமாகும்.

பூமியிலுள்ள அனைத்தையும் நுகர்வதற்கான அனுமதியை அல்குர்ஆன் வழங்கியுள்ளது.மனிதன் நுகர்வதற்காகவே பூமியில் காணப்படும் அனைத்துப் பொருட்களையும் அல்லாஹ் சிருஷ்டித்துள்ளான் என்பதை அல்குர்ஆன் மிகத் துல்லியமாக குறிப்பிடுகின்றது.(அல் பகறா: 29)

உண்பதும் குடிப்பதும் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட விடயங்களாகும். உடலுக்கு ஊறுவிளைவத்தல்,சிந்தனையை மலுங்கடித்தல் போன்ற சில காரணிகளை முன்னிட்டு அல்குர்ஆனில் விதிவிலக்குச் செய்யப்பட்ட சில பொருட்களைத் தவிரவுள்ள ஏனெயவைகள் அனைத்தும் நுகர்வதற்கு அனுமதிக்கப்பட்டவைகளாகும்.

இவ்வகையில்,பன்றியும் போதைவஸ்துக்களும் ஹராமாக்கப்படுவதற்கான பின்னணி பற்றி அறிந்துகொள்வது மிக முக்கியமாக அமையலாம்.

### பன்றி

பன்றியானது அன்றைய அறேபியர்களுக்கிடையில் பரீச்சயமில்லாத ஒரு மிருகமாக இருந்தும் கூட,அதனைச் சாப்பிடுவதை அல்குர்ஆன் ஹராமெனக் குறிப்பிட்டது.

யஹூதிகள் மீதும் பன்றி தடைசெய்யப்பட்டே இருந்தது.இருந்த போதிலும் கூட,இதனை இஸ்லாம் ஹராமாக்கிய போது சிலர் வினோதமாகவே நோக்கினர்.

இது ஹராமானது என்பதைக் குறித்துக் காட்டும் மிகத்தெளிவான வசனம் பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.புதிய ஏற்பாட்டிலும் கூட,இச்செய்தி மிகத் தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை பல சமய அறிஞர்களும் உறுதி செய்வது திகைப்பூட்டும் விடயமாகும்.

எனினும், இது பின்னர் முழுமையாக மாற்றப்பட்டு விட்டது.பார்க்க(இன்ஜீல்.....)

உணவுகளுல் அதிகமானவற்றை உண்பதற்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவற்றுள் சிலவற்றை மாத்திரம் உண்ணக் கூடாது என்று கூறியதன் மூலம் ஏன் அல்லாஹ் மனிதனைச் சோதிக்க வேண்டும்?



குறித்ததொரு மரத்தின் கனியை மாத்திரம் புசிக்காமல் சுவணத்தின் ஏனைய அனைத்தையும் அனுபவிக்கலாம் என்று கூறி ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் சோதித்தது போன்று போதை வஸ்துக்களை தடைசெய்ததன் மூலம் மனிதன் தனக்குக் கட்டுப்படுகின்றானா? என்பதை அல்லாஹ் பரீட்சிக்க விரும்புவது தான் இதன் பின்னணியாகும்.

## போதை வஸ்துக்கள்

மனித உயிர்களுக்கு உலைவைக்கக் கூடிய நோய்களுக்கெதிராக நடவடிக்கைகள் எடுப்பதும் மனிதனின் ஆரோக்கியம் மற்றும் உயிர் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக கடுமையான சட்ட ஒழுங்குகளை வகுப்பதும் சர்வதேச அளவில் உலக நாடுகள் மற்றும் அரசுகளினது மிக முக்கிய பணிகளாகக் கருதப்படுகின்றன்.

இருந்தும் கூட,தனிமனிதர்கள் மற்றும் சமுகங்களுக்கு பாரதூரமான பாதிப்புக்கள் ஏற்படுமளவிற்கு எங்கோ கோளாறுகள் காணப்படுகின்றன…

2012-03-15 ஆம் திகதி “Nature” எனும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட உலக சுகாதார அமைப்பின் அறிக்ககைள், “Oxford” பல்கலைகழகத்தின் ஆய்வுக் கட்டுரைகள் போன்ற நம்பகமான ஆய்வுகளின் மூலம் கிடைக்கப்பெரும் தகவல்கள் எமக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கை உள்ளிட்ட அவ்வாய்வு அறிக்கையின் தரவுகளை இங்கு நாம் தருகின்றோம்.

போதைப் பொருட்களைப் பயன்படுத்தியதன் மூலம் வருடாந்தம் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கையானது எய்ட்ஸ்,மலேரியா,காசநோய் போன்ற அனைத்து ஆட்கொல்லி வியாதிகளினாலும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைகளை விடவும் பன்மடங்கு அதிகமாகும் என்றும் குறித்த வருடத்தில் நடைபெற்ற யுததங்கள்,வன்முறைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் போன்றவைகளால் பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த எண்ணிக்கையிலும் பார்க்க சுமார் மூன்று மடங்கு அதிகரித்துக் காணப்பட்டது என்றும் 2011-02-11 ஆம் திகதி உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று குறிப்பிடுகின்றது.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கை உள்ளிட்ட அவ்வாய்வு அறிக்கையின் தரவுகளை இங்கு நாம் தருகின்றோம்.


போதைக்கு அடிமையானதன் விளைவாக வருடாந்தம் இரண்டரை மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இறக்கின்றனர்.15திற்கும் 29 திற்கு இடைப் பட்ட வயதெல்லையுடைய மூன்று இலட்சத்து இருபதாயிரம் இளைஞர்கள் போதைப்பொருளுடன் தொடர்புடைய காரணங்களின் நிமித்தம் உலகளவில் வருடாந்தம் உயிரிழக்கின்றனர்.




இந்த வயதினரின் வருடாந்த மரண வீதத்தில் 9% சதவீமாக இது காணப்படுகின்றது.




வருடாந்தம் ஏழு இலட்சம் பல்கலைகழக மாணவர்கள் போதைக்கு அடிமையான சக மாணவர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர் என்று அமெரிக்க ஆய்வொன்று தெரிவிக்கின்றது.






“ஸ்தூனிய” இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் வன்செயல்களுள் 70 சதவீதமானவை போதைப் பொருள் பாவணையுடன் தொடர்புடையதாகும் என்று 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட எழுத்து மூல ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




சர்வதேச அளவில் இடம்பெறும் காற் பகுதி கொலைக் குற்றங் களோடு போதைப் பொருள் பாவணைக்கு தொடர்பிருப்பதாக கருதப்படுகிறது.



போதைப் பொருள் பயன்பாட்டின் கோர விளைவாக நாளாந்தம் இடம் பெறும் மிக மோசமான இந்த பாதக குற்றச்செயல்களை முழுமையாக தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்குத் தேவையான கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உலக நாடுகளை உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகள் கோருகின்றன.

ஒரே ஆண்டில் பிரித்தானிவில் மாத்திரம் பின்வரும் நிலை காணப்படுகின்றது:-

- அங்கு சுமார் ஒரு பில்லியன் அளவில் கொடூரமான வன்முறையுடன் கூடிய குற்றச்செயல்கள் இடம்பெற்றன.பொதுவாக இவற்றுள் அரைவாசிக் குற்றசெயல்கள் போதைபொருளோடு தொடர்புடையன என்று பதிக்கப்பட்டவர்கள் கருதுகின்றனர்.

- வைத்தியசாலையின் அதீதிவிர மற்றும் அவசரப் பிரிவுகளில் போதைப் பொருளுடன் தொடர்புடைய சுமார் 7மில்லியன் அனுமதிக்கப்பட்டனர்.இவர்களுக்கான வருடாந்த மருத்துவச் செலவு சுமார் 650 பில்லியன்களாகும்.இவைகள் வரிச்செலுத்துவர்களின் மீது தான் சுமத்தப்படுகின்றன.

- போதைப்பொருள் பாவனையின் விளைவாக ஏற்படும் வன்முறையுடன் கூடிய குற்றச்செயல்கள் மற்றும் கலவரங்களின் காரணமாக வரிச்செலுத்துபவர்களின் மீது சுமத்தப்படுகின்றன.வருடாந்த மொத்தச் செலவீனம் சுமார் 8-13 (வரையிலான) பில்லியன் பௌன்கள் என்று மதிக்கப்பட்டுள்ளன.



## போதை வஸ்துக்களை அல் குர்ஆன் எவ்வாறு கையாளுகின்றது நோக்குகின்றது?



தனிமனிதர்கள் மற்றும் சமுகத்தின் மீது போதைப் பொருட்கள் ஏற்படுத்தும் பாதிப்புக்களை தோலுரித்துக் காட்டுவதற்கு உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகள் வெளியிடப்படும் வரை இஸ்லாம் காத்திருக்கவில்லை.

மனிதனைப் படைத்த இறைவனுக்கு மாத்திரமே மனித வாழ்விற்குப் பொருத்தமானவைகள் எவை என்பது பற்றித் தெரியும்.

இஸ்லாம் தோன்றிய காலத்தில் வாழ்ந்த அறேபியர்கள் போதைக்கு அடிமைப்பட்ட நிலையிலேயே வாழ்ந்தனர்.அனைத்துவித போதைப் பொருட்களும் அவர்களிடம் மிகப் பெறுமதியான உயர்ந்த பண்டங்களாகக் கருதப்பட்டு வந்ததோடு,அவைகளை வைத்து தங்களுக்கிடையில் தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்தனர்.

அவைகளை அடைந்து கொள்வதற்காக தங்களிடமிருந்த முழுச் சொத்துக்களையும் செலவிடுமளவிற்கு போதைப் பொருள் பாவணையானது,அவர்களின் வாழ்வில் புரையோடிப் போயிருந்தது.

எனவே தான்,அல்குர்ஆன் இதனை தர்க்க ரீதியாகவும் நியாயமான முறையிலும் அணுகியது.இவ்வகையில் இவற்றில் சில பயன்பாடுகள் இருப்பதாக முதலில் ஏற்றுக்கொண்டது.ஏனெனில்,இதன் பாவனையாளர்கள் தங்களது கவலைகளை கலையும் வகையிலான தற்காலிக இன்பங்களையும் உடற்சுகங்களையும் இதன் மூலம் பெற்றுக் கொண்டனர்.எனினும்,இதன் முடிவு ஆரோக்கியமற்றது என்றும் இதன் விளைவாக தனிமனிதர்கள் மற்றும் சமூகம் எனபவற்றின் மீது ஏற்படுகின்ற உடல்,உள்ளம் சார்ந்த பாதிப்புக்களை தீர்க்க முடியாது என்றும் அல்குர்ஆன் எடுத்துக் கூறியது.

அல்லாஹ் கூறுகின்றான் (நபியே...!) மதுபானத்தயையும் சூதாட்டத்தையும் பற்றி உம்மிடம் கேட்கினறனர்.நீர் அவர்களிடம் கூறுவீராக அவ்விரண்டிலும் பெரும் தீமைகள் இருக்கின்றன. ஆனால் மனிதனுக்கு அதில் சில பலன்களும் உண்டு.ஆனால் அவ்விரண்டிலும் உள்ள தீமை அவ்விரண்டிலும் உள்ள பலனை விட பெரிது ஆகும்.

பின்னர் இதனை அல்குர்ஆன் முழுமையாக தடைசெய்ததோடு, மக்களுக்கிடையில் பகைமையையும் வெறுப்புணர்வையும் ஏற்படுத்தி உயர் பண்பாடுகளிலிருந்து மாணிட சமூகத்தைத் தடுத்து விடும் ஷைத்தானியச் செயலாகவும் இதனை அடையாளப்படுத்தியது.

“நீங்கள் நிறுத்திக் கொண்டீர்களா”? என்று அல்குர்ஆனில் அல்லாஹ் நபித்தோழர்களை விளித்து வினவிய போது “நிறுத்திக்கொண்டோம்” “நிறுத்திக்கொண்டோம்”... என பதிலளித்தனர். இது மட்டுமல்லாது,இந்த இறைக்கட்டளைக்கு பதிலுரைக்கும் வகையில் மதுபானப் பீப்பாய்கள் மதீனாவின் சாலையோரங்களில் ஊற்றிவீசப்பட்டன.





# பாவமும் பாவமீட்சியும்



பாவம் பற்றிய கோட்பாடானது,பல்வேறு கொள்கைகள் மற்றும் சமயங்களின் பார்வையில்,சிந்தனை சார் சிக்கல்கள் நிறைந்ததொரு முக்கிய பகுதியாகவே கருதப் படுகின்றது.


பாவம் மற்றும் பாவமீட்சி எனபவற்றை கையாளும் முறைகளில் அச்சமயங்கள், கொள்கைகள் என்பவற்றுக்கிடையில் பல வேறுபாடுகள் காணப்படுபின்றன.

நன்மைகளையும் தீமைகளையும் செய்வதற்கான மனவெழுச்சிகளை உள்ளடக்கிய மனித இயல்பை மிகவும் நுனுக்கமானதொரு கோணத்தில் இஸ்லாம் பார்க்கின்றது.இதன் விளைவாகவே,மனித இயல்பை நன்மைகளை மாத்திரம் விரும்புகின்ற இயற்கையான மனப்பாங்கினைக் கொண்ட மலக்கின் கண்ணோட்டத்தில் அது நோக்கவில்லை.

எனவே தான், மனிதர்கள் அனைவருமே பாவம் செய்யும் மனோ நிலையில் உள்ளவர்கள் என்பதை இஸ்லாம் ஏற்று அங்கீகரித்துள்ளது.எனினும், பாவங்கள் மனிதனின் சுய விருப்புக்கும் அவனது சொந்த தீர்மானத்திற்கும் இணங்கவே தான் இடம் பெறுகின்றன என்ற வகையில்,அவைகளுக்கு பொறுப்புக் கூறுபவனாக மனிதனே இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகின்றது. பாவம் மற்றும் பாவமீட்சி பற்றிய இஸ்லாத்தின் பார்வையை மிகச் சுருக்கமாக பின்வரும் விதத்தில் குறிப்பிடலாம்:-

- பாவமும் பாவமீட்சியும் என்பது சிக்கலோ குழப்பமோ இல்லாத எளிதில் புரிய முடியுமானதும் தெளிவானதுமான தனிமனித செயல் உரிமை சார்ந்த கோட் பாடாகும் என்பதே அல்குர்ஆன் முன்வைக்கும் முதல் அம்சமாகும். எனவே,பாவமானது ஒருவன் பிறப்பதற்கு முன்னரே அவன் மீது திணிக்கப்பட்டதொரு விட யமன்று. மேலும், பாவமீட்சி வழங்கும் உரிமையை எவரும் சொந்தமாக் கிக்கொள்ள முடியாது.

ஆதம் (அலை) அவர்கள் செய்த பாவமானது அவரால் இடம் பெற்ற அவரது சொந்தப் பாவமாக கருதப் படுவது போலவே அவரின் சந்ததியிலுள்ள ஒவ்வொருவர் செய்யும் பாவங்களும் அவரவரின் சொந்தக் குற்றங்களாகவே நோக் கப்படும்.



மேலும்,ஆதம் (அலை) அவர்கள் தமது பாவத்திற்காக அல்லாஹ்விடம் நேரடியாகவே பாவமன்னிப்பு கோரியதன் விளைவாக, மிக இலகுவில் பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டார்.இவ்வாறே, அனைவரு க்கும் பாவமன்னிப்பின் வாயில் திறந்தே உள்ளது.

எனவே, நிராசை அடையாது தொடர்முயற்சியில் ஈடுபடுபவர்கள் ஒவ்வொருவரும் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது மிகத் தெளிவானதாகும்.இன்னும், ஒருவரின் பாவத்தை மற்றவர் சுமக்க முடியாது. அவரவர் பாவத்தை அவரவர் சுமக்க வேண்டுமென்ற மிகத் தெளிவான கருத்தை இஸ்லாம் முன்வைக்கிறது. இதுபற்றி அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.“அல்லது மூஸா வின் ஸுஹுபில் -வேதத்தில்- இருப்பது அவனுக்கு அறிவிக்கபடவில்லையா.! அல்லாஹ்வின் ஆணையை பூரணமாக நிறை வேற்றிய இப்றாஹிமுடைய ஆகமங்களில் இருந்து அவனுக்கு அறிவிக்கபட வில்லையா....?அதாவது சுமக்கிறவன் பிறிதொருவனின் சுமையை சுமக்க மாட்டான்.இன்னும் மனிதனுக்கு அவன் முயல்வதல்லாது வேறில்லை.அன்றியும் நிச்சயமாக அவன் முயற்சியின் பலன் பின் முயற்சியின் அன்றியும்,அவனுக்கு காண்பிக்கப்படும்.பின் அவனுக்கு

நிறப்பமான கூலியாக அவன் கூலி வழங்கப்படுவான்.(அல் அன்ஆம் : 36-41).

- தௌபாவானது (பாவமீட்சி) அல்லாஹ்வின் பார்வையில் மிக உயர்ந்த வணக்க வழிபாடுகளுள் ஒன்றாகும்.இது ஒருவருக்கு மாத்திரம் உரித்துடைய வணக்க மல்ல. இதனை நிறைவேற்றுவதற்கு குறித்ததோர் இடமோ அல்லது குறித்ததொரு மனிதனின் ஒப்புதலோ,அனுமதியோ பெறவேண்டும் எனும் அவசியமும் கிடையாது.அது மட்டுமல்லாது இது இறைவனுக்கும் அவனின் அடியானுக்கும் இடையில் இடம் பெறுகிற ஒரு வணக்கமாகும்.எனவே தான், அல்லாஹ்வின் சில திருநாமங்கள் மற்றும் பண்புகள் அல் குர்ஆனில் இவ்வாறு இடம் பெற்றுள்ளன. பாவமண்ணிப்பு அளிப்பவன் மிக இரக்கமானவன்,பாவ மண்ணிப்பு அளிப்பவனும் பாவ மண்ணிப்பை ஏற்பவனும்.ஆவான் என்பது.

இதோ! அல்குர்ஆன் சுவனத்தின் சொந்தக்காரர்களான இறை பக்தர்களின் பண்புகளை எமக்கு இவ்வாறு முன்வைக்கின்றது. அதாவது,அவர்கள் பாவங்கள் புரிவார்கள் என்பது உண்மை.எனினும், உடனடியாகவே அவற்றுக்கு பாவமன்னிப்பை கோரி பாவமீட்சி பெற்று விடுவார்கள். (ஆல இம்ரான் : 135).

இஸ்லாத்தின் பார்வையில் பாவமீட்சி கோருவதற்கு,பின்வரும் சில விடயங்களுக்கு அப்பால் வேறேதும் அவசியமில்லை.

செய்து கொண்டிருக்கும் பாவத்திலிருந்து விடுபடல்,நடந்த பாவத்தை நினைத்து அதை பற்றி வருந்துதல்,மீளவும் அப்பாவத்தைச் செய்வதில்லையென திடசங்கற்பம் பூணுதல்.மேலும் பிறரின் உரிமைகள் அல்லது உடமைகளை பறித்திருந்தால் அவைகளை உரியவர்களுக்கு வழங்குதல்.

குறித்த ஒரு பாவத்திற்கு தௌபா செய்து விட்டு,மீண்டும் அப்பாவத்தைச் செய்தால் முன்னர் செய்த தௌபாவானது இரத்துச் செய்யப்பட மாட்டாது. எனினும்,புதிய ஒரு பாவத்தை செய்து விட்டால்,அதற்காக புதிய ஒரு தௌபாவை செய்துவிட வேண்டும்.

இவ்வாறே இஸ்லாத்தில் மனிதன், பாவங்களிலிருந்து தூர விலகி அதிகம் பலவீனமடைந்து விடுகிற சில வேலைகளில் அதன் பாதையை விட்டு விலகிச் சென்று விடுகிற போது மனித இயல்பைப்புரிந்து,உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி அமைதியான நிலையில் வாழலாம்.

மனிதன் அனைத்து சூழ்நிலைகளின் போதும்,தனது திசைகாட்டியை இழக் காது இருக்க வேண்டும்.இது மட்டுமல்ல, அல்லாஹ்விடம் தஞ்மடைந்து பாவ மன்னிப்பு கோரும் ஒருவனாகவும் இருத்தல் வேண்டும்.

இறையச்சம் கொண்ட நல்லடியார்கள் ஒரு பாவத்தில் ஈடுபட்டு விட்டால் இறைவனின் மீது கொன்ட பயத்தின் காரணமாக உடனடியாகவே பாவத்தை விட்டு விலகி அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பபுக் கோருவார்கள். ஆனால் தீயவர்கள் பாவங்களை தெடர்ந்தும் செய்து கொண்டிருப்பதோடு பாவங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்க மாட்டார்கள். இதுவே இவ்விருசாராருக்குமிடையிலான உண்மையான வேறுபாடு ஆகும். இது குறித்து அல்குர்ஆன் எமக்கு தெளிவூட்டுகின்றது.(அல்அ.ஃறாப் 201-202).



# அறிவும் மார்க்கமும்



மார்க்கம் அறிவு மற்றும் ஆராய்ச்சி என்பவற்றிற்கு முரணானது என சிலர் நினைக்கின்றனர்.ஏனெனில், அவர்களின் பார்வையில் மார்க்கமானது ஊகங்கள், புராணக்கதைகள்,மறறும் நம்பிக்கைகள் சார் சிந்தனைகள் என்பவற்றின் பிறப்பிடமாகும்.

மறுபக்கத்தில,அறிவு மற்றும் தத்துவ ஆராய்ச்சிகள் என்பன ஆய்வு, சிந்தனை, அனுபவம் என்பவற்றின் வரையறைகளை நிறைவாகப் பெற்று இருப்பதன் மூலம் நிறுவப்பட்டுள்ள முழுமையான,நிறைவான அறிவுக்கு இட்டுச் செல்லும் இருபெரும் வழிமுறை களாக நோக்குகின்றனர்.இந்நம்பிக்கையை மிக நுணுக்கமாக நோக்குகிற போது,சில விடயங்கள் சரியாகவும் சில விடயங்கள் பிழையாகவும் இருப் பதை பார்க்கலாம்.

பல்வேறு சமயங்களில், அறிவோடு முட்டி மோதுகிற பல் வேறு அம்சங்கள் இருப்பதைப் பார்க்கின்ற போது இந்நம்பிக்கை உண்மையெனப் புலப்படுகிறது. ஏனெனில்,இம்மதங்களின் மூல நூட்கள் மற்றும் வேதங்கள் என்பன பிரபஞ்ச உண்மைகள் மற்றும் அறிவியல் என்பவற்றோடு முரண் படுகிற மூட நம்பிக்கைகள் மற்றும் புராணக்கதைகளால் நிரம்பி வழிகின்றன.



சமயங்களின் மூல நூட்கள்,அவைகளின் உள்ளடக்கங்கள் மற்றும நம்பகத் தன்மைகள் போன்ற விடயங்களில் மார்க்கங்களுக்கிடையில் இருக்கின்ற வித்தியாச வேறுபாடுகளை நோக்காது அனைத்து சமயங்கள் மீதும் பொதுவா னதொரு தீர்வை பிரயோகிப்பதே மேற்படி நம்பிக்கை கொண்டிருக்கும் பிழையாகும்.

எந்தவொரு சமமும் கொடுத்திராத அளவு,அறிவுக்கு இஸ்லாம் மிகப் பெரும் அந்தஸ்தினை வழங்கியுள்ளது எனும் உண்மையை இஸ்லாத்தின் பிரதான மூல நூலாக விளங்கும் அல்குர்ஆனை படிக்கும் ஒருவரால் எந்தவொரு ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி புரிந்து கொள்ளலாம்.

பதிமூன்று தடவைகளுக்கு மேலாக “சிந்திக்க மாட்டீர்களா?”.என வன்மையாக கண்டிக்கும் தொனியில் திரும்பத் திரும்ப கேள்வி எழுப்பும் அளவுக்கு அறிவைத் தேட அல்குர்ஆன் ஊக்குவிப்பதோடு,சிந்திக்கவும் ஆய்வு செய்யவும் மனிதனை அழைக்கிறது.

“எந்தவொரு சமயமும் கொடுத்திராத அளவு அறிவுக்கு இஸ்லாம் மிகப் பெரும் அந்தஸ்தினை வழங்கியுள்ளது என்ற உண்மையை இஸ்லாத்தின் பிரதான மூலநூலாக விளங்கும் அல்குர் ஆனை படிக்கும் ஒருவரால் எந்தவொரு ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி புரிந்து கொள்ளலாம்.

பகுத்தறிவானது,பல்வேறு விடயங்களில் பிரயோகிக்கப்பட வேண்டுமென அல்குர்ஆன் வழிகாட்டுகின்றது.

1 எதேச்சதிகாரம்,ஆணவம்,பயம்,மடமை போன்ற அனைத்து சிக்கல்களிலிருந்தும் விடுபட்ட,பரந்த அறிவாற்றல் கொண்ட மனிதர்களை விளித்துப் பேசும் அல்குர்ஆன், அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வது கட்டாயக் கடமை என்பதற்கு பகுத்தறிவு ரீதியிலான பல்வேறு ஆதாரங்களை முன் வைக்கின்றது.இவ்வாறான இறை வசனங்களுள் இதுவும் ஒன்றாகும்.“அல்லது எந்தப்பொருளுமின்றி தாமாகவே படைக்கப்பட்டனரா....!அல்லது அவர்கள் எதையும் படைக்கின்ற சக்தி யுடையவர்களா..?பூமியையும் அவர்கள் படைத்தார்களா...? அவ்வாரல்ல அவர்கள் உறுதி கொள்ள மாட்டார்கள்.(அத் தூர்:35-36).



2 எதிரிகளால் முன்வைக்கப்படுகிற ஆதாரங்களுக்கெதிராக வாதிடுவதோடு,சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண் டிராத கருத்துக்களை மறுதலிக்கிறது.இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.“நீங்கள் உண்மையுடையோராக இருந்தால் உங்கள் சான்றை சமர்ப்பியுங்கள்.என (நபியே) நீர் கூறுவீராக..!(அல்பகரா:111).



3 பகுத்தறிவை பயன்படுத்தாதவர்களை இழித்துரைப்பதோடு, உணர்வுகள் அற்ற வெறும் ஜடங்களாக அல்குர்ஆன் அவர்களை வர்ணிக்கிறது.ஏனெனில்,அவர்கள் பார்க்கின்ற மற்றும் கேட்கின்ற விடயங்களிலிருந்து எந்தவொரு சரியான முடிவையோ அல்லது தெளிவையோ எடுக்குமளவு பயன்கள் எதனையும் பெற மாட்டார்கள்.இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.“அவர்கள் பூமியில் பயணித்து இவற்றை பார்க்கவில்லையா...!அவ்வாறு பார்த்திருந்தால்.அவர்களுக்கு விளங்கி கொள்ள கூடிய உள்ளங்களும் நல்லவற்றை செவியேற்கும் காதுகளும் உண்டாகியிருக்கும்.நிச்சயமாக புறக்கண்கள் குருடாகவில்லை. எனினும் நெஞ்சங்களில் இருக்கும் இதயங்கள் (அகக் கண்கள்) தாம் குருடாகின்றன.(அல்ஹஜ் : 46).



4 மனிதன் சிந்திப்பதற்கு தடையாக அமையும் விடயங்களைப் பற்றியும் அல்குர்ஆன் எச்சரிக்கிறது.அறிவைப் பெறுவதற்கு எமது புலன்கள் மற்றும் பகுத்தறிவு என்பவற்றை பயன்படுத்த வேண்டும்,என தூண்டுவதோடு மாத்திரம் அல்குர்ஆன் நின்று விடவில்லை.மாறாக, அறிவைப் பெறுவதில் பிழைகள் ஏற்படும் இடங்களையும் சுட்டிக்காட்ட தவரவில்லை.





இறைவனின் படைப்பினங்கள் அவனது மார்க்கத்திற்கு முரண்பட முடியாது. இவ்வாறான நிலையில்,படைப்பினங்கள் பற்றி வினவவும் ஆய்வு செய்யவும் பயப்படுவது ஏன்?

## அல்குர்ஆனின் ஒளியில், உடண்பாடாக சிந்திப்பதற்குத் தடையாக அமையும் அம்சங்கள்.

- கண்மூடித்தனமாக பின்பற்றுதல்:-

பாரம்பரியமாக அடையப்பெறும் நம்பிக்கை மற்றும் நடத்தைசார் அம்சங்களும் எதிர்மறையாக சிந்திக்கும் வழக்காறுகளும் ஒருவனின் சிந்தனைப் பாங்கில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

இவ்வாறானதொரு நிலையில், சத்தியத்தை ஏற்பதும் அசத்தியத்தை நிராகரிப்பதும் சிரமமானதாக அமைந்து விடுவதோடு,இது தான் பாரம்பரியமாகப் பழகிய விடயம் என்றோ அல்லது பிறப்பியல்பு என்றோ நியாயம் கூறி சிலபோது சிந்திப்பது கூட, முழுமையாகவே ஸ்தம்பித்து விடும்.

இஸ்லாமிய மார்க்கம் சத்தியமானது என விளங்கிய நிலையிலும் கூட, முன்னோர்களை கண்மூடித்தனமாக பின்பற்றியமையானது அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு தடையாக அமைந்தது.

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.மேலும் அல்லாஹ் இறக்கி வைத்த இவ்வேத்தை பின்பற்றுங்கள் என அவர்களிடம் கூறப்பட்டால்,அவர்கள் அவ்வாறல்ல எங்களது மூதாதையர்கள் எவ்வழியில் நடக்க கண்டோமோ அவ்வழியையே நாம் பின்பற்றுவோம்.என கூறுவர்.என்ன அவர்களது மூதாதை யர்கள் எதையும் விளங்காதவர்களாகவும்,நேர்வழி பெறாதவர்களாயினும் கூடவா...? (அல்பகரா : 170).

■ அகம்பாவமும் பிடிவாதமும்:-

சுயநலம் அல்லது கௌரவத்தினை கருத்திற் கொண்டதன் விளைவாகவோ அல்லது மார்க்கத்தைக் கொண்டு வந்தவர் மீதுள்ள பொறாமை அல்லது அவரை தரம் குறைத்து மதிப்பிட்டதன் காரணமாகவோ இஸ்லாம் சத்திய மார்க்கமென்று மிகத் தெளிவாக விளங்கியும் கூட, அதனை சிலரால் ஏற்றுக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.அவர்களது உள்ளங்கள் அவற்றை உணனமை என உறுதிகொண்ட போதிலும் அநியாயமாகவும்,பெருமை கொண்டவர்களாகவும்,அவர்கள் அதை மறுத்தனர்.(அந்நம்ல் : 14)

■ சுகபோகங்களில் மூழ்கிவிடல்:-

சத்தியம் தெளிவாகிய பின்னரும்,அதனை ஒருவரால் தெரிவு செய்துவிட இயலாமல் போய் விடுகின்றது.இதற்கான காரணம், உலக இன்பங்களில் அவர் ஆழ்ந்து விடுவதாகும்.

இதற்கு உதாரணமாக, அல்குர்ஆன் ஒருவரின் கதையை இவ்வாறு குறிப் பிடுகின்றது.அதாவது,அம்மனிதருக்கு அறிவு வழங்கப்பட்டிருந்ததோடு,அதனை வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கான சுதந்திரத்தையும் அவர் பெற்றிருந்தார். எனினும்,அவர் இவ்வறிவு நிலையிலிருந்து விலகிச் சென்று தனது மனோ இச்சைக்கு அடிமைப்பட்டு இவ்வுலக நலன்களையே முன்னிலைப்படுத்தி வாழத் துவங்கினார்.இந்நிலைக்கு இவர் தள்ளப்பட்டமைக்கான ஒரே காரணம் உலக சுகபோகங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டமைதான்.இதன் விளைவாக,இறுதியில் இவரால் வாழ்வின் வெற்றிக்குத் தேவையான மிகச் சரியானதொரு தீர்மானத்தை எடுக்க முடியாமல் போய்விட்டது. (அல் அஃறாப்: 175,176).

மனித ஆன்மா,பிரபஞ்சம்,ஏனைய உயிரினங்கள் என்பவற்றை ஆய்வு கண் ணோட்டத்தில் பார்த்து,படிப்பினை பெறுமாறு அல்குர்ஆன் மனிதனை எப்போதும் தூண்டிக் கொண்டே இருக்கிறது.

இவை பற்றி வினவவும் சிந்திக்கவும் பயப்படுபவர்கள் யாரெனில்,இவ்விரு விடயங்களையும் எதிர்ப்பவர்களும் மார்க்கத்தை மறைத்து வைத்திருப்பவர்களும் தான்.

சத்திய மார்க்கமாகிய இஸ்லாத்தை பொறுத்த வரையில்,அது நிச்சயமாக மனிதனைப் படைத்து அவனில் சிந்திக்கும் ஆற்றலை வைத்திருக்கின்ற அல்லாஹ்விடமிருந்து தான் வந்திருக்கின்றது.

எனவே தான்,இறைவனின் படைப்பினங்கள் அவனது மார்க்கத்திற்கு முரண்பட முடியாது.இவ்வாறான நிலையில்,படைப்பினங்கள் பற்றி வினவவும் ஆய்வு செய்யவும் பயப்படுவது ஏன்?அல்லாஹ் குறிப்பிடும் போது “படைப்பும் ஆட்சியும் அவனுக்கே சொந்தமல்லவா...?அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய (அவற்றை படைத்து பரிபாலித்து பக்குவப்படுத்துபவனும்) அல்லாஹ்வே.அவன் மிகவும் பாக்கியமுடையவன்”.(அல் அஃறாப் : 54).




# அமைதியின் மார்க்கம் இஸ்லாம்



இஸ்லாத்தின் பார்வையில்,அமைதிக்கே முதன்மை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என கூறினால் சிலருக்கு வியப்பாகவும் விந்தையாகவும் உள்ளது. (ஏனெனில்,இஸ்லாமிய மார்க்கம் அமைதிக்கு எதிரானது எனும் நச்சுக்கருத்தினை இன்றைய தொடர்பூடகங்கள் பரப்புரை செய்து கொண்டி ருக்கின்றன.ஒரு முஸ்லிம் நாள் தோறும் “ஸலாம்” -அமைதி- எனும் வார்த்தையை கருத்துணர்ந்து பலதடவைகள் உச்சரித்து கொண்டே இருக்கிறான். “ஸலாம்” அமைதி என்பது அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களுள் ஒன்றாகவும் சுவனப் பெயராகவும் கருதப்படுகின்றது.(தாருஸ்ஸலாம்).

முஸ்லிம்களின் முகமன் கூட,இப்பதத்தையே முதல் வார்த்தையாகக் கொண்டுள்ளது.இஸ்லாத்தின் மிகப் பெரும் வணக்கமாக கருதப்படும் தொழுகையையும் “ஸலாம்”அமைதி எனும் வார்த்தையின் மூலமே முடிக்கப் படுகிறது.இவை அனைத்திற்கும் முத்தாய் வைத்தாற் போல்,இம்மார்க்கத்தின் பெயர் கூட “அமைதி” எனும் கருத்தினைக் கொடுக்கும் (அல்-இஸ்லாம்) எனும் சொல்லைக் கொண்டே அழைக்கப் படுகின்றது.அமைதியாக வாழுமாறும் மிகச் சிறிய பலவீனமான மிருகங்களின் உரிமைகளைக் கூட,மதிக்க வேண்டும் என்றும் இஸ்லாம் கூறுவதன் காரணமாகவே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.பூனைக்கு உணவு கொடுக்காமலும் அதனைத் தன்பாட்டில் பூமியிலுள்ளவைகளை உண்ண விடாமலும் தடுத்து வைத்த காரணத்தினால் ஒரு பெண் நரகில் நுழைந்தாள்.





தாகத்துடன் இருந்த ஒரு நாய்க்கு நீர் புகட்டிய காரணத்தினால் ஒரு விபச்சாரி சுவனம் நுழைந்தாள்.(அல் ஹதீஸ்).

முஸ்லிமல்லாத ஒருவரை துன்புறுத்துதல் அல்லது அநியாயம் செய்தல் அவரின் சக்திக்கு மேலாக வேலைகளை வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபடும் ஒருவர்,மறுமை நாளில் நபி (ஸல்) அவர்களின் எதிரியாக வருவார். என்று நபியவர்கள் எச்சரிக்குமளவு மனித உரிமைகளை மதிக்கவும் சகவாழ்வுடன் இருப்பதற்குமான ஆச்சரியமான வரையறைகளை இஸ்லாம் வகுத்துள்ளது.(அபூ தாவுத் : 1044).

இஸ்லாத்தில் முன்வைக்கப்படும் அமைதி மற்றும் சகவாழ்வு கொள்கைகள் என்பன போலியான வெற்றுக் கோஷங்கள் அல்ல.மாறாக,அவைகள் உண்மைத் தன்மையும் நீதமும் நிறைந்தவைகளாகவே காணப்படுகின்றன.

இவ்வமைதி மற்றும் சகாவழ்வு மூலம் ஒவ்வொருவரும் அவரவர் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதோடு,அநியாயத்தில் ஈடுபடுபவனை அவ்வ நியாயத்திலிருந்து திருப்பி விடுவதுடன் உரிமையின்றி ஒருவரின் பொருளைப் பெற்றவர் அதன் சொந்தக்காரரிடம் ஒப்படைத்து விடவும் வழி செய்து விடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வீட்டில் திருடப்பட்டவைகளை திருடனுக்கே ஒப்படைத்து விட்டு, களவு கொடுத்த வீட்டின் உரிமையாளருக்கு மிகக்குறைந்த இழப்பீட்டை வழங்குவதற்கு தந்திரோபயங்களை செய்வது, அமைதியென்றோ நல்லினக்கம் என்றோ கருத முடியாது.

ஒவ்வொருவரும் தங்களது கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் மக்கள் மயப்படுத்த ஊடகப் பிரச்சாரங்களை ஒரு வழிமுறையாகக் கொண்டுள்ளனர். சம்பவங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு கோணங்களில் நோக்கப்படுகின்றன. செய்திகள் ஒவ்வொன்றும் பல்வேறு வழிகளின் ஊடாக பரப்பப்படுகின்றன.

இந்நிலையில் மிகச் சிலர் மாத்திரமே செய்திகளின் யதார்த்தத்தை ஆய்வு செய்யும் பொறுப்பினை தங்களது தோள் மீது சுமந்து கொண்டு, கிடைக்கப் பெறும் தகவல்களை அதனது மிகச் சரியான அடிப்படை மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதோடு பாரபட்சமற்ற முறையில் நியாயமானதொரு நிலைப்பாட்டை எடுப்பதனூடாக ஊடகங்களின் போலித்தனமான பிரச்சாரங்களுக்கு சவாலாக உள்ளனர்.

உங்களின் சிந்தனைக்கு யதார்த்தமான உண்மைகள் சில...

அசுர வேகத்தில் பரவிவும் ஒரு மார்க்கம், இஸ்லாம்.

முஸ்லிம்கள் நளிவுற்று செயற்திறன் குறைந் துள்ளமை,பிழையான தகவல்களை பரப்புரை செய்வ தனூடாக இஸ்லாத்தின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படும் சர்வதேச தொடர்பூடகங்களின் ஆதிக்கம்,

இஸ்லாத்திற்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத மிகமோசமான நச்சுக் கருத்துக்களை வெளியிடுதல் போன்ற இஸ்லாத்திற்குப் பாதகமான பல்வேறு விடயங்கள் கோலோச்சுகின்ற இச்சூழலில், அமெரிக்கா முதல் ஐரோப்பா ஆபிரிக்கா,ஆசியா வரை உலகின் நாற்திசைகளிலும் இன்று இஸ்லாம் வேகமாக பரவி வருகிறது.

மனிதர்களின் மீது இஸ்லாம் பலவந்தமாக திணிக்கப்படுவதன் காரணமாக இஸ்லாமிய மார்க்கம் இவ்வாறு பரவுகின்றதா...? அல்லது சுய விருப்பின் பேரில் மக்கள் இஸ்லாத்தில் நுழைகின்றனரா....?

பிற சமயத்தவர்களின் உரிமைகளை முஸ்லிம்கள் பேணுவதும் அவர்களின் சமய கலாச்சாரங்களை மதிப்பதும் பிறரின் உள்ளங்களை வெகுவாக கவர்ந்து அவர்களை இஸ்லாத்தின் பால் ஆகர்ஷி க்கச் செய்வதும் கண்கூடான விடயங்களாகும்.

இவைகள் முஸ்லிம்கள் தங்களுக்கிடையில் இயல்பாக உருவாக்கிக் கொண்ட இஸ்லாம் போதிக்காத விடயங்களல்ல.மாறாக, அல்குர்ஆனில் அல்லாஹ் மிகத் துல்லியமாக வலியுறுத்தி கூறுகின்ற அடிப்படைகளாவே கருதப்படுகின்றது.(அல் பகரா: 256)

## இஸ்லாமிய மார்க்கம் மனித இனத்தின் மீது பலவந்தமாக திணிக்கப்பட்டதா.....?

தமது கருத்துக்கள் மற்றும் செல்வாக்குகள் என்பவற்றை பலவந்தமாக மனித சமூகத்தில் திணிப்பதற்காகவும், தமது சொந்த நலன்களை அடைந்து கொள்வதற்காகவும் பல்வேறு சமயங்கள் மற்றும் சிந்தனைப பிரிவுகளைச் சார்ந்தோர் பலப்பிரயோகங்களை அதிகளவில் செய்துள்ளனர்.இவ்வாறான நிகழ்வுகளால் வரலாற்று ஏடுகள் நிரம்பி வழிகின்றன.

உதாரணமாக,உலகின் புதிய பிரதேசங்களுக்கு புலம் பெயர்ந்து சென்றவர்கள் மற்றும் நாடுகாண் பயணங்களை மேற்கொண்டவர்கள் போன்றோர் அப்பிரதேசங்களை அடைந்த போது அங்கு வாழ்ந்த பழங்குடி பூர்வீக மக்களுக்கு மத்தியில் பயங்கரமான இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

பலரைக் கொன்று குவித்த இக்கொடூரமான சம்பவங்களை கண்ணுற்ற ஸ்பானிய மதகுருவான “பாட்லோமீடி” என்பவர் இவ்வாறு விபரிக்கின்றார்.

“அங்கு வாழ்ந்த பூர்வீக மக்களை இவர்கள் மனிதர்களாகக் கூட பார்க்கவில்லை.மாறாக, மிருகங்களை விட தாழ்ந்த இனமாகவே நோக்கினர்.”

புதிய நாடுகளை ஆட்சி செய்த போது முஸ்லிம்கள் என்ன செய்தார்கள்?

ஸ்பைனை முஸ்லிம்கள் 8 நூற்றாண்டு காலம் ஆட்சி செய்தனர்.



கி.பி 711- 1492 வரை 781 வருடங்களாக முஸ்லிம்கள் ஸ்பெயினை ஆட்சி செய்தனர். அக்காலப்பகுதியில் ஸ்பையினே உலக நாகரிகத்தின் மத்திய கேந்திர நிலையமாக இருந்துள்ளது.இஸ்லாத்தை தளுவ வேண்டும் என அங்கு வாழ்ந்த கிறிஸ்தவ குடிமக்கள் எவரும் பலவந்தப்படுத்தப்படவில்லை.மாறாக,அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டதோடு நாட்டின் வர்த்தகத் துறையும் மேம்படுத்தப்பட்டது.

இவை அனைத்திற்கும் மேலாக,ஸ்பைனை இஸ்லாமியர்கள் வெற்றி கொள்வதற்கு முன்னர் அங்கு வாழ்ந்த "யகூதிகள" மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த கொடுமைகளிலிருந்தும் முஸ்லிம்கள் அவர்களை விடுவித்தனர்.

அவ்வாறு நாட்டின் பல்வேறு வகையான உரிமைகளை முஸ்லிம்கள் பாதுகாத்தமைக்கான வரலாற்றுச் சான்றுகள் வரலாற்று ஏடுகளில் நிரம்பிக் காணப்படுகின்றன.

ஸ்பைனிய முஸ்லிம்களை,"ஈஸாபீலா,பர்னாதீஸ்" என்போர் வெற்றி கொண்ட போது இஸ்லாமிய வெளிப்படை அம்சங்கள் அனைத்திற்கும் தடை விதித்ததோடு,முஸ்லிம்களை விரட்டியடித்து கொன்று குவித்தனர். மறைமுகமாகவேனும் இஸ்லாத்தில் தொடர்ந்திருப்பவர்களை இனங்கண்டு தண்டனைகள் வழங்குவதற்கான புலன் விசாரணை நீதி மன்றங்களை நிறுவினர்.



1400 ஆண்டுகளுக்கு மேலாக எகிப்தை,அங்கு வாழும் பூர்வீகக் குடிகளான "கிப்தியர்களின்"உரிமை களை பாதுகாத்த நிலையில் முஸ்லிம்கள் ஆட்சி செய்திருககின்றனர்.

இஸ்லாத்தின் துவக்க காலம் முதற்கொண்டு முஸ்லிம்கள் எகிப்தை ஆட்சி செய்து வருகின்றனர்.அதாவது,நபித்தோழர்களுள் ஒருவரான "அம்ர் இப்னுல் ஆஸ்"(ரழி) அவர்கள் இதனை வெற்றி கொண்ட வேளையில் அங்கு வாழ்ந்த "கிப்தியர்களின்" மதச் சுதந்திரத்தை பாதுகாத்ததோடு மட்டு மல்லாது,ஆட்சியாளர்களாக இருந்த உரோமர்களினால் இவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த அநியாய,அடக்கு முறைகளிலிருந்தும் இவர்களை விடுவித்தார்.உரோமர்களும் கிப்தியர்களும் கிறிஸ்தவமான ஒரே சமயத்தை சார்ந்தவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த நேரத்தில்,முஸ்லிம்கள் அவர்களோடு சமய ரீதியாக வேறுபட்டிருந்த போதும் கூட,சமய சுதந்திரத்தை அவர்களுக்கு வழங்கியிருந்தனர்.


இன்று கிப்தியர்களின் எண்ணிக்கை 5 மில்லியனையும் தாண்டியுள்ளது.



சுமார் நூறு வருடங்களாக இந்தியாவை முஸ்லிம்கள் ஆட்சி செய்தனர்.இதன் போது அங்கு வாழ்ந்த முஸ்லீமல்லாதோரின் எண்ணிக்கை 80% ஆகும்.

சுமார் பல நூறாண்டுகள் இந்திய உபகண்டத்தை ஆட்சி செய்த முஸ்லிம்கள் அங்கு வாழ்ந்த பல்லின மக்களினதும் மதச் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாத்ததோடு,சமய ரீதியிலான அடக்கு முறையிலிருந்தும் அவர்களை விடுவித்தனர்.

மேலும்,அங்கு இஸ்லாம் பலவந்தமாக பரப்பப் படவில்லை என்றும் இஸ்லாத்தில் நுழையுமாறு குடிமக்களில் எவரும் நிர்ப்பந்திக்கப்படவில்லை என்றும் அனைத்து வரலாற்று ஆசிரியர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.



யுத்தமின்றி இஸ்லாமிய நாடாக மாறிய மிகப் பெரிய இஸ்லாமிய நாடு......

பெருவாரியான முஸ்லிம்களை உள்ளடக்கிய மிகப் பெரும் நாடாக “இந்துனோசியா” விளங்குகின்றது.250 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் தொகையை கொண்ட இந்நாட்டில் 87% முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.ஹிஜ்ரி 6 ஆம் நூற்றாண்டில்,அங்கு சென்ற முஸ்லிம் வர்த்தகர்களின் பண்பாட்டு விழுமியங்களினால் அந்நாட்டு மக்கள் கவரப்பட்டதன் விளைவாக இஸ்லாத்தில் நுழைந்தனர்.இது இஸ்லாமிய நாடாக மாறுவதற்கு அங்கு ஒரு இராணுவப் படையெடுப்பு கூட இடம் பெறவில்லை.

போர்த்துக்கீஸர்,ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என காலணித்துவ வாதிகளின் பெரும் படைகளின் இராணுவப் பிரசன்னத்தின் பின்னர்தான் இரத்தம் சிந்துதல் எனும் விடயத்தை அந்நாடு அறிந்து கொண்டது.



# இஸ்லாமும் அதனைப் பிழையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில முஸ்லிம்களும்



உயர்ந்த பண்பாட்டு விழுமியங்களை உருவாக்குதல்,பூமியை வளப்படுத்துவதற்காக உழைத்தல்,மானிட சமூகத்திற்கு நன்மைகளைச் செய்தல்,அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு உயரிய அம்சங்களின் பால் அழைப்பு விடுக்கும் இஸ்லாமிய மார்க்கத்தின் யதார்த்த நிலை பற்றி அறிந்தவர்கள் தங்களைச் சுற்றி இஸ்லாத்தின் பெயரால் நடக்கும் இஸ்லாத்திற்கு முற்றிலும் முரணான சில விடயங்களைப் பார்க்கின்றனர்.

இதன் போது,இது என்ன இவ்வளவு பயங்கரமான முரண்பாடாக உள்ளது? என்று சிலர் கூறுகின்றனர்.

இவ்வாறான நிலையில் வாழும் இவர்கள் தங்களை இஸ்லாமியர்களாக இனங்காட்ட முடியுமா?

உண்மையில்,இது பல்வேறு கலந்துரையாடல்களுக்கூடாக மிக நிதானமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டிய சிக்கல்கள் நிறைந்த ஒரு விடயமாகும்.

- இஸ்லாத்தில் பிறந்து அல்லது இஸ்லாமிய வாதிகளென தங்களை அடையாளப்படுத்திக்கொள்கின்ற அனைவரும் மார்க்கத்தை அச்சொட்டாகப் பின்பற்றுகிற உண்மை முஸ்லிம்களாகக் கருதப்பட முடியாது.

ஏனெனில்,எம்மைச் சூழ பல்வேறு இடங்களில் இஸ்லாத்திலிருந்தும் அதன் உண்மையான போதனைகளிலிருந்தும் நெறி தவறிச் சென்று இஸ்லாம் என்ற சொல்லைத் தவிர அது பற்றி வேறெதுவும் தெரியாத நிலையில் பெயர் தாங்கி முஸ்லிம்களாகப் பலர் வாழ்கின்றனர்.

- சிலரால் புரியப்படும் தவறுகளை அவர்கள் சார்ந்துள்ள சமயங்களின் பிழைகளாகக் கருத முடியாது.

“ஹிட்லர்” ஒரு கிறிஸ்தவர் என்பதற்காக அவரால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வன்முறைகளுக்கும் அவர் சார்ந்திருந்த கிறிஸ்தவ சமயம் தான் காரணமெனக் கூறிவிட முடியாது.

அவ்வாறே,நாஸ்திகரான “ஜோஸப” என்பவர் பல மில்லியன் மக்களைக் கொன்றொழித்தார் என்பதற்காக அவர் சார்ந்திருந்த அந்த நாஸ்திகக் கொள்கை தான் மக்களை அவ்வாறு கொன்று குவிப்பதற்கு அவரைத் தூண்டியது என கருத முடியாது.

இவைகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பான பிழையான வாதங்களாகும்.

- இந்தியா முதல் ஸ்பெய்ன் வரை உலகின் நாலாப் பகுதிகளிலும் வரலாறு பெருமைப்பட்டுக் கொள்ளும் வகையில் அறிவுக்கும் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் என பலவேறு துறைகளுக்கும் இஸ்லாம் வழங்கிய அளப்பெரிய பங்களிப்புக்களுக்கு அனைவரும் சான்று பகர்வார்கள்.

இவ்வாறான அழகிய மகத்தான பல முன்மாதிரிகளை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது.இதற்கான தடயங்கள் இன்று வரை நிலைப்பதைக் காணலாம்.

இன்றைய நவீன நாகரிகத்திற்கும் இஸ்லாம் கலங்கரை விளக்காகவே உள்ளது.பல்வேறு நாடுகளில் வாழும் அறிவியல் துறைகளில் தனித்துவம் பெற்று விளங்கும் தனிமனித முஸ்லிம் ஆளுமைகளுக்கப்பால் இன்றைய அபிவிருத்திப் பயணத்தில் இணைந்துகொள்ள அயராது உழைத்து வரும் முஸ்லிம் நாடுகளின் சிறந்த முன்மாதிரிகளையும் காணலாம்.இதற்கான சிறந்த உதாரணங்களாக மலேஷியா,துருக்கி போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்



சிலரால் புரியப்படும் தவறுகளை அவர்கள் சார்ந்துள்ள சமயங்களின் பிழைகளாகக் கருத முடியாது.

- தன்னைச் சுற்றி மோசமான நடத்தைகளையுடைய சில மருத்துவர்கள் உள்ளனர் என்பதற்காக ஒருவர்,நவீன மருத்துவ உலகம் புரிந்திருக்கும் அபார சாதனைகளை மறுத்து,தனக்கு மருத்துவம் செய்வதைக் கைவிட மாட்டார்.

இவ்வாறே,மோசமான பாடசாலைகள் அல்லது பிழையான நடத்தைகள் கொண்ட ஆசிரியர்கள் இருக்கின்றனர் என்பதற்காக ஒருவர் அறிவியல் துறையை எதிர்க்கவோ அல்லது அவரின் பிள்ளைகள் கல்வியைப் பெறுவதிலிருந்து அவர்களைத் தடுக்கவோ விரும்பமாட்டார்.

ஒரு துறையை அதன் யதார்த்த நிலையை வைத்து அளவிட வேண்டுமே தவிர அது சார்ந்த பிழையான முன்மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு அனுமானிக்கூடாது என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இஸ்லாத்தின் எதிரிகள் அல்லது இஸ்லாமியர்களாக நடிக்கும் சில நயவஞ்சகர்களால் இஸ்லாத்தின் நற்பெயரைக் கெடுக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் வன்முறைத் தாக்குதல்கள் தொடராக இடம் பெற்றும் கூட இஸ்லாம் அதன் தூய வடிவத்தை இளக்காமல் தொர்ந்தும் இருப்பதை மக்கள் பலரும் கண்கூடாக கண்டு வருவதோடு உலகின் நாலாத் திசைகளிலிருந்தும் இஸ்லாத்தில் நுழைந்த வண்ணமே உள்ளனர்.

> சில பாடசாலைகள் அல்லது சில ஆசிரியர்களால் இடம் பெறும் சில தவறுகளின் காரணமாக ஒருவர் அறிவியல் துறையை எதிர்க்கவோ அல்லது அவரின் பிள்ளைகள் கல்வியைப் பெறுவதிலிருந்து அவர்களைத் தடுக்கவோ விரும்பமாட்டார்.



## வாழ்வின் புதியதொரு கோணம்

நமது நலன்களை அடைந்துகொள்வதற்கான அரிய வாய்ப்புக்கள் பல கிடைத்தும் அவற்றை உரிய முறையில் பயன்படுத்தாமல் அல்லது பொருத்தமான நேரங்களில் சரியான தீர்மானங்களை எடுக்காமல் வாழ்வில் எத்தனை தடவைகள் தயக்கம் காட்டியுள்ளோம்.இவைகளுக்காக இன்று வரை நாம் எம்மை பழித்துக்கொண்டே இருக்கின்றோம்.

மனிதனுக்குள்ள மிகப் பெரும் கௌரவம் யாதெனில்,அவனது நலன்களை அடைந்துகொள்வதற்காக அச்சமோ தயக்கமோ இன்றி தீர்மானங்களை எடுப்பதற்கான சுதந்திரத்தையும் ஆற்றலையும் அவன் பெற்றிருப்பதாகும்.

தடைகள்,சிரமங்கள்,சவால்கள் என்பவைகளை எதிர்கொள்வதில் உறுதியுடன் செயற்படுவதானது,கௌரவத்தையும் மதிப்பையும் ஈட்டித்தரும் வீரச்செயலாக நோக்கப்படுகின்றது.

இவ்வகையில்,சத்தியம் வெளிச்சத்திற்கு வந்து,அதில் தான் மனித வாழ்வின் நலன்களும் தங்கியுள்ளன என ஒருவர் புரிந்து கொள்ளும் வேளையில்,அந்த சத்தியத்தை ஏற்பதற்காக அவர் எடுக்கும் தீர்மானமே மிகப்பெரும் வீரதீரச் செயலாகும்.

ஏனெனில்,இது ஒருவரிடம் இயல்பாகத் தோன்றுகின்ற தற்பெருமையை அடக்கி தனது உள்ளத்தின் முன்னிலையில் புரியப்படும் பாரிய போராட்டமாக விளங்குவதோடு,அவரின் மனதிலும் வாழ்விலும் ஆழ்ந்த தாக்கத்தினை ஏற்படுத்துமளவு வலிமை கொண்டதாகும்.

இந்த மார்க்கம் கருணையும் அழகும் கொண்டது எனும் உண்மையை புரிந்து கொண்டு,அதன் யதார்த்தம் பற்றி மேலதிகமாக ஆய்வு செய்து படித்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படின் அது பற்றி வாசித்து,கலந்துரையாடல்களை நடாத்தி,வினாக்கள் தொடுப்பதன் மூலம் புரிந்து கொள்வதற்கான வழிவகைகள் நிறைவாகவே உள்ளன.எனினும்,இப்போதிலிந்தே இஸ்லாத்தை வித்தியாசமான கோணங்களில் பார்ப்பதற்கு ஆரம்பிக்க வேண்டும்.

சந்தேகமின்றி இஸ்லாமிய மார்க்கம் மாத்திரமே சத்தியமானது என நம்பினால்,அதில் தான் மனித வாழ்வின் நலன்கள் அனைத்தும் உள்ளன என்பதை விளங்கி அதில் இணைந்து கொள்வதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்வதில் காலதாமதம் செய்யாமல் இருப்பது அறிவுபூர்வமாதொரு விடயமாகும்.அல் குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது (லுக்மான் : 34)




GLOBAL MAP





நீங்கள் இப்புத்தகத்தை முழுமையாக படித்து முடித்திருப்பது எமக்கு பெருமிதம் அளிக்கும் ஒரு விடையமாகும்.இதன்போது உடன்பாடான எதிர்மறையான பல்வேறு சிந்தனைச் சிதரல்களையும்,கேள்விகளையும் நிச்சயம் இப்புத்தகம் உங்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் என நாம் நம்புகிறோம். ஆகவே இது குறித்த உங்களது கேள்விகள், விமர்சனங்கள் மற்றும் கருத்துக்களை அறிந்து கொள்ள ஆவலோடு இருக்கின்றோம் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்

இஸ்லாம் குறித்த பிற தகவல்களை பெற்றுக்கொள்ள...

LAUNCHING
CURiOSiTY
JUST SCAN IT.!!

THISISLAM.net

உமது கருத்துக்களையும்,அநுபவங்க ளையும் பிகர்ந்து கொள்ள.

info@modern-guide.com

TAMIL







- உங்களை சூழவுள்ள தொடர்பூடகங்கள் வாயிலாக அதிகளவில் விமர்சிக்கப்படுகிற ஒரு மார்க்கத்தைப் பற்றிய தெளிவைப் பெறுவது மிக முக்கிய விடயம் இல்லையா!
- சர்வதேச புள்ளிவிபரங்களின் அடிப்படையில் உலகமெங்கும் வியாபித்து அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றதொரு மார்க்கத்தைப் பற்றி ஆழமாய் ஆய்வு செய்வதற்கு சற்று நேரம் ஒதுக்குவது பொருத்தமாக கருதப்படமாட்டாதா!
- எம்மை சுற்றியுள்ள பிரபஞ்சம்,மனித வாழ்வு மற்றும் சமயங்கள் பற்றிய பிறரின் கொள்கை கோட்பாடுகளை கலாச்சாரங்களை புரிந்து கொள்வதில் ஆர்வமில்லையா!
- இஸ்லாத்தைப் பற்றிய மிக நம்பகமான தகவல்களை அதன் மூலாதாரங்களிலிருந்து புரிந்து,பின்னர் அது குறித்து அறிவு பூர்வமாக தர்க்க ரீதியானதொரு முடிவை பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தை நீங்கள் ஏன் உங்களுக்குள் வழங்கக் கூடாது.

இஸ்லாம் அது தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வது முக்கிய என கருதுவதோடு அதில் ஆர்வமுள்ளவராகவும் நீங்கள் இருந்தால் இந்நூல் உங்களது அத்தேவையை நிறைவு செய்வதற்கு நிச்சயம் துணை நிற்கும்..

9 786030 315055

LAUNCHING CURiOSiTY JUST SCAN IT.!!

MODERN GUIDE

THIS IS ISLAM

THISISLAM.info